(53-வது வட்டம்)
பெரம்பூர், சென்னை-11

பொங்கும் இன்பம் எங்கும் தங்குக!

அன்புமிக்க தம்பி!

"பொங்கலோ பொங்கல்! பொங்கலோ பொங்கல்!!" என்று ஆண்டு தோறும் நீ ஆடிப்பாடி மகிழும் அந்த இன்பம் தரும் நல்ல நாள் இவ்வாண்டு இப்பொழுது வந்திருக்கிறது.

ஈராயிரம் ஆண்டு நிறைவு பெற்ற வான்புகழ் வள்ளுவரின் 2001 ஆவது ஆண்டின் முதல் நாள் விழாவாக இவ்வாண்டுப் பொங்கல் புதுநாள் அமைந்திருப்பது தனிச்சிறப்பினைக் காட்டுவதாகும்.

தம்பி! வேறு எந்த விழாவிற்கும் இல்லாத தனிப் பெருஞ் சிறப்புகளை பல தமிழகத்துப் பெருவிழாவாக விளங்கும் பொங்கல் விழாவிற்கு உண்டு. இந்த விழாவைப் பொங்கல் விழா என்றும் புத்தாண்டு விழா என்றும் புதுக் கணக்குப் போடும் விழா என்றும் பொருள்களைப் புதுப்பிக்கும் விழா என்றும் அறுவடைத் திருவிழா என்றும் உழவர் பெருவிழா என்றும் அறிவாற்றலின் பயன் கொள்விழா என்றும் ஆடிப்பாடி மகிழும் பெருவிழா என்றும், முத்தமிழ் போற்றும் முதுபெரும் விழா என்றும், தமிழரின் தனிப் பெரும் விழா என்றும் பலவேறு பெயரிட்டு அழைத்து மகிழ்கிறோம்.

தம்பி! பொங்கல் விழா தமிழர்களுக்கே உரிய தொன்மையானதொரு பெருவிழாவாகும். சங்க காலத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்து இந்த விழா தமிழப் பெருங்குடி மக்களால் கொண்டாடப்பட்டு வருகிறது. தமிழகத்தின் பெருந்தொழிலாகவும், இன்றியமையாத் தொழிலாகவும், தொன்று தொட்டு நடைபெற்று வரும் தொழிலாகவும் அமைந்துள்ள உழவுத் தொழிலின் பயனை நுகரும் நாளாக இந்த நாளைக் கொண்டாடி வருகிறோம். புதிதாக அறுவடையாகி வரும் செந்நெலிலிருந்து புத்தரிசியை எடுத்துப் புதுப் பானையில் இட்டு, புதுப்பால் வார்த்து, புத்தடுப்பில் வைத்துப் புது விறகு கொண்டு எரித்துப், புதுப் பொங்கலிட்டுப் புது வாழையிலையில் படைத்து உண்டு மகிழும் விழாவாகக் கொண்டாடி வருகிறோம்.

சங்ககால நூலாகிய புறநானூற்றில் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் பொங்கல் விழா கொண்டாடியதைப் பற்றிய குறிப்பு ஒன்று காணப்படுகிறது. மலைப்பகுதி ஒரு பக்கம் அருவி பேரொலி எழுப்பிக் கொண்டு இழிந்தோடிக் கொண்டிருக்கின்றது. மறுபக்கம் காடுகள் நிறைந்திருக்கின்றன. மிளகுக் கொடிகள் ஏராளமாகப் படர்ந்து கிடக்கின்றன. காந்தள் செடிகள் பரவலாகச் செழிப்பாக வளர்ந்திருக்கின்றன. காந்தள் செடிகள் மண்டிக்கிடக்கும் காட்டுக்குள் முள்ளம் பன்றிகள் படையெடுத்து அந்தச் செடிகளை வேரோடு பெயர்த்தெடுத்து அவற்றின் அடியிலுள்ள கிழங்குகளைத் தின்றுவிட்டுச் சென்றுவிடுகின்றன. பன்றிகள் படையெடுத்த பகுதி உழுது போட்ட நிலம் போலக் காட்சியளிக்கிறது. பிறகு பருவக்காலத்தில் பெருமழை பெய்கிறது. மழை பெய்தவுடன் அங்குள்ள உழவர்கள் ஈரம் உலருவதற்கு முன் சென்று தினை விதைகளை விதைக்கிறார்கள். தினைக் கதிர்கள் முற்றிய பிறகு அதைக் கொண்டு வந்து, தினையரிசியை எடுத்துப் புதுப் பானையில் போடுகிறார்கள். காராம் பசுவின் நுரை பொங்கும் பாலை அதில் ஊற்றுகிறார்கள். சந்தன விறகுகளை வைத்து எரிக்கிறார்கள். அப்படி ஆக்கப்பட்ட பொங்கலை, வீட்டின் முற்றத்தில் பரப்பப்பட்ட பெரிய பெரிய வாழை இலைகளில் படைக்கிறார்கள். உற்றார் உறவினர் அனைவரும் கூடியிருந்து உண்டு மகிழ்கின்றனர்.

தம்பி பண்டைக் காலத் தமிழர்கள் இயற்கையோடியைந்த பெருவாழ்வை எப்படி நடத்தி வந்தார்கள் என்பதை புறநானூறு சுட்டிக்காட்டும் சொல்லோவியத்திலிருந்து தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

அறுவடைத் திருவிழாவாக விளங்கும் பொங்கல் நாள் புத்தாண்டு நாளாகவும், புது வாழ்வு அளிக்கும் நாளாகவும் இருந்து வருகிறது. 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பது தொன்று தொட்டு வழங்கப்பட்டு வரும் பழமொழியாகும். தைத்திங்கள் பிறந்தால் அறுவடையாகி நெல்மணிகள் வீடு வந்து சேரும். அறுவடைக் காலத்தில் பெறப்படும் நெல்மணிகளை வைத்துக் கொண்டுதான் ஒவ்வொருவரும் ஓராண்டுக் காலத்தை ஓட்ட வேண்டும்.

பொங்கல் நாளை ஒட்டிய நாட்களில் தான் தமிழகம் தன் இயற்கை அழகு முழுவதையும் காட்டி நிற்கும். நீர் நிலைகளெல்லாம் நிறைந்திருக்கும். செடி கொடி மரம் மட்டைகளெல்லாம் கிளைத்தும், இலையும், பூவும் பிஞ்சும், காயும் கனியுமாகக் காட்சி அளிக்கும். நன்செய் நிலங்களில் நெல்லும் கரும்பும் செழித்துக் காணப்படும். மஞ்சளும் இஞ்சியும் எங்கும் விஞ்சித் தோன்றும், எங்குப் பார்த்தாலும் பச்சை பசேலென்று நிலம் காணப்படும். பச்சைப்பட்டாடை விரித்தது போன்று காணப்படும்.

தம்பி! இவ்வாண்டுப் பொங்கல் விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடுவதற்கேற்றவகையில் இயற்கைச் சூழல்களும், செயற்கைச் சூழல்களும் சரியாகவே அமைந்திருக்கின்றன. ஆனால் நம் இதய ஏந்தல் பேரறிஞர் அண்ணா அவர்கள் இவ்வாண்டு நம்மோடு இருக்கமாட்டாரே என்று எண்ணும்போது நெஞ்சு வெடித்து விடும் போல இருக்கிறது. சென்ற ஆண்டு அறிஞர் அண்ணா அவர்கள் இறுதியாகக் கலந்து கொண்ட கூட்டம் பொங்கல் நாளில் நடைபெற்ற மறைந்த என். எஸ். கே. சிலை திறப்புவிழாக் கூட்டமேயாகும். 'மதராஸ் மாநிலம்' என்ற பெயர் போய் தமிழக மாநிலம் என்ற பெயர் ஏற்பட்ட நாளும் அந்த நாள் தான். அதற்குப் பிறகு அறிஞர் அண்ணா அவர்கள் பொது மேடையில் தோன்றவே இல்லை. மீளா உறக்கத்திற்குப் போய்விட்டார். அறிஞர் அண்ணா அவர்கள் இல்லாமல் கொண்டாடப் பெறும் விழா இன்பம் பொங்கும் விழாவாக, தம்பி! உனக்கும் எனக்கும் இருக்காது; அது உள்ளம் பொங்கும் விழாவாகத் தான் அமையும்! என்றாலும் நம் விழிகளிலே வழிகின்ற கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, நம் அருமை அண்ணன் காட்டிய வழியில் தொடர்ந்து நடைபோட்டுச் செல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம்.

நமது நாடு வேளாண்மை நாடு என்று பெயர் பெறும். நமது நாட்டில் நூற்றுக்கு எழுபது பேர்கள் வேளாண்மையை நம்பி வாழ்கிறார்கள். நூற்றுக்கு எண்பது பேர்கள் சிற்றூர்ப் புறங்களில் வாழுகிறார்கள். வேளாண்மைத் தொழிலின் பொருளாதாரத்தின் மீதுதான் மற்றைய தொழில்களின் பொருளாதாரமும் பிணைக்கப்பட்டிருக்கின்றது. வேளாண்மைத் தொழில் வளர்ந்தால், பிற தொழில்களெல்லாம் வளரும்; வேளாண்மைத் தொழில் வீழ்ந்தால் மற்ற தொழில்களெல்லாம் வீழ்ந்து விடும். உழவர் பெருங்குடி மக்களிடத்தில் பணம் மிச்சப்பட்டால்தான், பிற தொழில் உற்பத்திப் பொருள்கள் விலை போகும் நிலை ஏற்படும்.

வேளாண்மைத் தொழில் மேலும் மேலும் சிறந்தோங்கிச் செழிப்புற வளர வேண்டுமானால், நல்ல நிலம்—போதுமான அளவு நீர்—பொறுக்கு விதை—ஊட்டம் தரும் உரம்—பூச்சிகளைக் கொல்லும் மருந்து ஆகியவை தாராளமாகவும், ஏராளமாகவும் கிடைக்க வேண்டும். அவற்றையெல்லாம் ஒழுங்குற வேளாண் பெருங்குடி மக்களுக்குக் கிடைக்கச் செய்யவே தி. மு. கழக அரசு அரும்பாடு பட்டு வருகிறது.

'பசுமைப் புரட்சி' நாம் பெருமகிழ்வு கொள்ளுகிற அளவுக்கு ஏற்படுவதாக! பொங்கலோ பொங்கல்! பொங்கலோ பொங்கல்! பொங்கும் இன்பம் எங்கும் தங்குக! என்று நாம் முழக்கமிடுவோமாக!

உன்தன்புள்ள,

- இரா. நெடுஞ்செழியன்.

தமிழகத் தலைநகர்கள்

★

புகார்:
காவிரிப்பூம்பட்டினம். சங்க காலச் சோழ மன்னர்களின் முதல் தலைநகர்

மதுரை:
சங்க காலம் முதல் கி. பி. 9 ஆம் நூற்றாண்டு வரை சோழ மன்னர்களின் தலைநகர்.

உறையூர்:
சங்க காலம் முதல் கி. பி. 9-ஆம் நூற்றாண்டு வரை சோழ மன்னர்களின் தலைநகர்.

தஞ்சை:
விஜயாலயன் தஞ்சையைக் கைப்பற்றி அந்த சோழப் பேரரசை கி. பி. 850-இல் நிலை நிறுத்தினான். தஞ்சை மூன்றாம் இராஜராஜன் காலம் வரை சோழர் தலைநகராய் விளங்கியது.

கங்கைகொண்ட சோழபுரம்:
முதலாம் இராசேந்திரன் கங்கைவரை வெற்றிகொண்டு கங்கை கொண்ட சோழபுரத்தை ஏற்படுத்தி அதைத் தலைநகராக்கினான். அதிலிருந்து சோழப் பேரரசின் தலைநகராக அது விளங்கிற்று.

வஞ்சி:
சங்க கால சேர மன்னர்களின் தலைநகர்.

காஞ்சி:
சங்க காலத்தில் திரையர் அரசர்களின் தலைநகராகத் திகழ்ந்தது. கி. பி. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி. பி. 9-ஆம் நூற்றாண்டு வரை 600 ஆண்டுகள் பல்லவர்களின் தலைநகராகத் திகழ்ந்தது.

தகடூர்:
சங்க காலம் முதல் கி. பி. 7 ஆம் நூற்றாண்டு வரை அதியமான் அரசர்களின் தலைநகராக விளங்கியது.

கிடங்கில்:
சங்க காலத்தில் ஓய்மானாடு நல்லியக்கோடன் என்ற அரசனின் தலைநகராக விளங்கியது.

திருக்கோவலூர்:
மலையமான திருமுடிக்காரி என்ற அரசனின் தலைநகராக சங்க காலத்தில் திகழ்ந்தது.

இதுவே தமிழர் திருநாள்

அறிஞர். அண்ணா

பொங்கல் புதுநாள் புலர்ந்தது, மக்களின் முகமெலாம் மலர்ந்தது. மகிழ்ச்சி மிளிர்ந்திடக் காண்கிறோம். நாடெங்கும் விழா, நானுவிதமான விழா நடக்கக் கண்டோம்.

காலை மலர்ந்தது, மனிதரெல்லாம் கண் மலர்ந்து நடமாடுகின்றனர், கதிரோன் ஒளி பாய்ந்தன், காகங் கரைந்தது, கோழி கூவிற்று, நீர் தெளிக்கும் நங்கையரின் வளை ஒலியும் கிளம்பிற்று, வாரீர் நீராடி, புத்தாடை பூண்டு, புது அரிசியைப் புதுக்கலத்திட்டு, அமுதாக்கி, பச்சைக் காய்கறியைப் பக்குவமாகச் சமைத்து, பாடி ஆடி உண்போம், என்றுரைத்திர், களித்திர்! உமது வாழ்வு இன்பம் பொங்கிட இருத்தல் வேண்டுமென்று, நாம் இங்கு நல்வாழ்த்து நல்கிய வண்ணமிருக்கிறோம்.

பொங்கற் பருவத்தில் நாம் நமது வாசகர்கட்கு, இதயமெனும் கலத்தில், "நினைப்பெனும் பால் பெய்து நல்வாழ்த்தெனும் அமுது கலந்து இம்மடலில் இட்டு அளித்திடக் களிக்கிறோம். பொங்கற் புதுநாள், அறுவடையின் ஆனந்தத்தை அகமகிழ்வைத் தமிழகம் கொண்டாடிய ஓர் வகையே என்போம். பருவத்தில் பயிர் செய்தோம், பலன் உண்டோம் என்பதே அந்நாளின் பண் என்போம். கரடுமுரடான நிலத்தைக் கூர்மையான கலப்பை கொண்டு குத்திக் கிளறினோம், அடிமண் மேல்வர, மேல்மண் கீழ்போக. கல் உடைத்தழிய கரம்பு திருத்த உழைத்தோம்! பெய்யும் மழை என்றும் பெய்த வண்ணமிராது. எனவே பெருங்குளம் சிறுகுளமெடுத்து, ஆறு அமைத்து, வாய்க்கால் வெட்டி, நீர் தேக்கினோம். ஆகவே அந்நீரை நிலமடந்தை பருகத் தந்தோம்; பருவமுற்ற மங்கைக்கு மணாளனைச் சேர்த்தல் போல், நிலப் பண்புக்கேற்ற விதை தூவினோம்—களித்த காதலர் காணும் குழவி என—பயிர் தழைக்கக் கண்டோம், இன்று உண்டோம் அதன் பலனை என்று உழைப்பின். மேன்மையை உணரும் உத்தமநாள் என்போம்.

சுற்றமும் நட்பும் சூழ. களிப்பும் கனிவும் வாழ, தமிழர் வாழ்ந்தனர் என்பதை விளக்குவது போல, வீடுதோறும், உற்றார் உறவினர் வருவதும், உரையாடிக் களிப்பதும், பெரியார் பாதம் வருடலும், பெண்டிர் பெருமை புகழ்தலும், நடக்கக் காண்கிறோம். எனவே இதுவே தமிழர் திருநாள் என்போம்.

சந்தனமும், சண்பகமும், தேமாவும் தீம்பலாவும், அசினி அசோகமும், கொங்கும் வேங்கையும், ஓர்புறம் மணம் பரப்ப பாதிரியும் கொன்றையும் புன்னைகமும் குயிலாசனமாக, மலர்புரிபுகுந்து மது மங்கையை மணந்த வண்டரசர் குழாம்பாட, சிந்தனையில் சிறு வீடமித்துச் சேல்விழியைப் பழித்து, சோலைக்கு இழுத்துக் காதலைப் பழுக்கவைத்த கண்ணாளனின் நினைவு நடமாட, அழகு படமாட அணங்குகள் நடந்து செல்லும் காட்சியும், உழைத்தோம் உயர்ந்தோம், உழுதோம், அறுத்தெடுத்தோம், போரிட்டோம் வென்றோம், பயின்றோம் பக்குவம் பெற்றோம், ஒத்த உளமுடையாளைக் கொண்டோம், வாழ்வின் இன்பம் உண்டோம் என்று திருப்தி பெற்று, படைக்கலனுடனே, தொழிற்கலனுடனே, நடமாடும் ஆடவரின் காட்சியும், துறை முகங்களிலே யவனர் இவர், சீனரா இவர்? சேல்விழியாளுக்கு ஏற்ற இவ்வணி எத்தனை நூறு செம்பொன்னோ? யவன மன்னரிடம் பெற்ற பரிசு இதுவோ? எப்போது பெரும்பரிசுகள் வரும்? என்று கேட்டு உலவும் வணிகக் கூட்டமும், கடலை அடக்கிக் கலத்தைச் செலுத்தும் வீரர்களின் விளையாட்டும், பொருள் ஈட்டிய பூரிப்பால், புது உருக்கொண்ட புன்னகையினர் உலவும் மாட்சியும், என்னுடை இன்பநாடு மணி இழைத்த பொன்னாடு என்று பாடும் புலவர்களும். அவர்களின் திறம் வியந்து, திரவியம் தரும் மன்னர்கள் வாழ்ந்த மனோகரமும். செந்நெல் வயலின் வள்ளற்றன்மைக்கும் சிங்காரச் சோலைகளின் கனிவுக்கும் ஏற்பட்ட போட்டியிலே, வெல்லுவோர்க்கு இது பரிசு என்று கூறி முத்துக்குவியலைத் தருவேன் என்றுரைப்பதுபோல் ஒலிக்கும் கடலின் காட்சியும், கவிதைகளுக்கு மாட்சி தந்தன! தமிழகத்தின் தொல் சிறப்பு சொல்லவும் கேட்கவும் தெகிட்டாததாகவே இருந்தது. தோள் வலியும் மனவலியும். சொல்வலியும் அறிவு வன்மையும் பெற்றோரின் ஆலயமாக விளங்கிற்று.

அன்று இருந்ததை இன்றோடு இழந்தோம். ஆயினுமென்னை? நிலத்திலே நெடுந்தூர ஆழத்திலே தூங்கும் தங்கத்தை எழுப்புகிறோம்; வெளியே நடமாட வைக்கிறோம்; சுறுவும் சுழலும் சுற்றி நடனமிட நீர் மாளிகையிலே களித்துக் கிடக்கும் முத்துக்களை, மூச்சை அடக்கி உள்ளே சென்று வெளியே கொண்டுவந்து நட என்றுரைக்கிறோம்! உழைத்தால், பலன் காண்கிறோம். அதுபோலவே, இழந்த இன்பத்தையும் மீண்டும் பெற முடியும்—பெறல் வேண்டும்! நெஞ்சிலே வலுவிருப்பின் வெற்றி தஞ்சமென்றுரைத்து வந்து நம்மிடம் கொஞ்சிடுவது உறுதி.

நம் மனதில் உறுதிகொண்டால், தமிழகத்தில், இன்பம் பொங்க, வாழ்வு பொங்க, புரட்சி பொங்கிப் புதுமை பொங்க, வளம் பொங்கச் செய்ய முடியும். அந்தப் பொங்கற் புதுநாள் வரத்தான் போகிறது.

பொங்கற் புதுநாள் கண்டுகளிக்கும் நமது தோழர்களுக்கெல்லாம், இனி என்றும் இன்பம் பொங்கட்டும் என்று மனமாரக் கூறுகிறோம்.

[17-1-1943ல் நமது இதயமன்னர் எழுதியது]

கவிதையில் காணும் காவேரி!

காவிரி தமிழகத்திற்குத் தொன்று தொட்டு எழிலும் ஏற்றமும் வளமும் வசதியும், பெயரும், புகழும் தந்து கொண்டிருக்கும் பேராறு என்பது எல்லோரும் அறிந்ததே. தமிழகத்து ஆறுகளிலே என்றும் தலை சிறந்த ஆறகக் காவியாறுதான் இருந்து வருகிறது.

நீளத்திலாகட்டும், அகலத்திலாகட்டும், நீரேந்தி வருகின்ற அளவிலாகட்டும், நீரைப் பாய்ச்சுகின்ற விளை நிலத்தின் பரப்பளவிலாகட்டும், இரு கரைகளிலும் அணைத்துக்கொண்டிருக்கின்ற சீரிய நகரங்களின் எண்ணிக்கையிலாகட்டும் கிளையாறுகளைக் கொண்டிருக்கின்ற தன்மையிலாகட்டும் எல்லாவகையிலும், தமிழகத்தைப் பொறுத்தவரையில் காவிரிதான் மற்றெல்லா ஆறுகளைக் காட்டிலும் தலைசிறந்து விளங்குகிறது.

தமிழகத்தின் நாகரிகம் பஃறுளி, காவிரி, வைகை, பொருநை, பெண்ணை போன்ற ஆறுகளின் கரையோரங்களில் வளர்ந்ததாக வரலாற்றுப் பேரறிஞர்கள் கூறுகின்றனர். காவிரியாற்றங்கரையிலே வளர்ந்த நாகரிகம் தனிச் சிறப்பும், தனிப் பெருமையும், தனிப்புகழும் கொண்டதாகும். காவிரியாற்றங்கரையிலேதான் சோழப் பேரரசு பன்னெடுங்காலம் அரசோச்சிப் பெயரோடும், புகழோடும் திகழ்ந்தது. இமயமலையில் புலிக் கொடி பொறித்து மீண்ட கரிகால் பெருவளத்தானும், கடல் கடந்த நாடுகளையும் தன் கவிகைக் கீழ்க் கொண்டு வந்து பேரரசு சமைத்த இராச இராச சோழனும், கங்கை வரையிலும் கடாரம் வரையிலும் சென்று வெற்றி மாலைச் சூடி மீண்ட இராசேந்திர சோழனும் தம் வீரத்தை நிலைநாட்டிய இடம் காவிரியின் பகுதியாகும். காவிரியின் கரைகளில் நல்ல தமிழ் வளர்ந்தது; கவின் கலைகள் மலர்ந்தன. காவிரி பாயும் நாட்டிலேதான் இசைக் கலை, நாட்டியக்கலை, சிற்பக்கலை ஆகியவை மிகச் சிறப்பாக வளர்ந்தன. சிற்பக் கலைச் செல்வம் பொதிந்த வானளாவும் கோபுரங்கள் காவிரியின் இரு மருங்கிலும் ஏராளமாகத் தோன்றின. தமிழகத்திற்கே தனிப் பெருமை தருகின்ற

நாவலர். இரா.நெடுஞ்செழியன்

நாயன இசைக்கலையும் இந்தப்பகுதியிலேதான் தழைத்தோங்கிற்று.

தமிழ்ப் பெரும் புலவர்கள் காவிரியைப் பற்றிப் பாடுவதிலே தனிச் சுவையும், தனி இன்பமும் கண்டிருக்கின்றனர். சங்க காலம் முதற் கொண்டு, இத்தக் காலம் வரையில் புலவர்கள் காவிரியைப் பலவாருகப் புகழ்ந்து பாடி வைத்து விட்டுச் சென்றுள்ளனர்.

காவிரி குடகு நாட்டின் குடகுமலையில் தோன்றி கொங்கு நாட்டில் நுழைந்து, சோழநாட்டில் பாய்ந்து, வங்கக் கடலில் போய்ச் சேருகிறது. காவிரி குடகு மலையில் தோன்றி கடலில் போய்க் கலக்கிறது என்பதைப் 'பட்டினபபாலே' ஆசிரியர் 'மலேத் தலேய கடற்காவிரி' என்று கூறுகிருர். வான் பொய்த்துத் தமிழகத்தில் வறட்சி ஏற்பட்டாலும், காவிரி நீரைத் தந்து கொண்டேயிருக்கும் பெருமை வாய்ந்தது என்பதைக் கூறவந்த அந்த ஆசிரியர், 'வான பொய்ப்பினும் தான் பொய்யா மலேத்தலேய கடற காவிரி என்று புகழ்ந்து பாடுகிருர். தமிழகத்தில் வறட்சி ஏற்பட்டாலும் குடகு மலேயில் பெய்கிற நீரைக் காவிரி ஏந்திக் கொண்டுவந்து கொங்குமண்டலத்திற்கும், சோழ மண்டலத்திற்கும் தரும். கோடைக் காலங்களில் ஊற்றுகளின் மூலம் நீரைத் தந்துகொண்டே இருக்கும்.

காவிரியால் சோழமண்டலம் பெருவிளைவு கொள்ளுகிறது என்பதை அருணகிரிநாதர் 'காவிரியால் விளே சோழமண்டலம் என்று குறிப்பிடுகிருர்.

காவிரியின் நீர் சோழ மண்டலத்தில் பாய்வதால், நஞ்செய்க் கழனிகளும், புஞ்சைக் காடுகளும் காவிரியின் இருமருங்கிலும் மண்டிக் கிடக்கின்றன. செந்நெல் விளேந்து காடு போல் செழித்து காணப்படுவதை "காய்த்த செந்நெலின் காடு சூழ்காவிரி நாடு' என்று சேக்கிழார் கூறுகிருர்.

இயற்கையின் நிலேமாறி கோடை காலம் நீடித்துக் கொண்டே போனலும், காவிரி தன்னுடைய நிலேயிலிருந்தும் மாருது என்பதை மணிமேகலே ஆசிரியர் சீத்தலேச் சாத்தனர் 'கோள்நிலே திரிந்து கோடை நீடினும். தான் நிலேதிரியாத் தண்தமிழ்ப் பாவை' என்றே குறிப்பிடுகின்ருர். காவிரியை தன் தமிழ்ப்பாவை என்றே அழகு படுத்துகிருர். காவிரியை அறிவின்பம் பயக்கும் தமிழுக்கு ஒப்பிட்டுக் கூறித் தமிழின் பெருமையையும் புகழையும் காவிரிக்கு ஏற்றுகிருர்.

ஆறு என்று தமிழ் இலக்கியத்தில் பொதுப்படையாகக் கூறப்பட்டால் அது காவிரியாற்றைத்தான் குறிக்கும். வேந்தன் என்ருல் அந்தச் சொல் சோழனேத்தான் குறிக்கும். ஊர் என்ருல், அந்தச் சொல் உறையூரைத்தான் குறிக்கும். "தண்ணீருங் காவிரியே தார்வேந்தனும் சோழனே" என்று 'தனிப்பாடல் குறிப்பிடுவதைக் காணலாம். காவிரியின் தனிப் பெருமைக்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

காவிரி அசைந்தாடி வளேந்து நெளிந்து நடை போட்டு வருவதைக் கலிங்கத்துப் பரணி ஆசிரியர் அசைந்தாடி வரும் அழகு நங்கைக்கு உவமையாகக் கூறியது "பூவிரி மதுகர நுகரவும், பொருகய லிருகரை புரளவும், காவிரியெனவரு மடநலிர்களக நெடுங் கரை திறமினே" என்று கலிங்கத்துப் பரணியின் 'கடைதிறப்பு' பகுதியில் கூறப்பட்டுள்ளது.

காவிரி கடலோடு கூடுகிற இடத்தில்தான் பெயரும் புகழும் பெற்ற 'காவிரிப்பூம்பட்டினம்' அல்லது பூம்புகார் எழும்பிற்று சங்க காலச்சோழ மன்னர்களின் சிறந்த தலேநகராய்ப் பூம்புகார் விளங்கிற்று. அதனே அரசிருக்கையாகக் கொண்டு ஆண்ட வேநதர்களில் கரிகாற் சோழன் குறிப்பிடத்தகுந்த ஈடும் எடுப்புமற்ற பெருவேந்தவனுவான். கரிகாற் சோழன் காலத்தில் பூம்புகார் நகரில் 'இந்திர விழா' நகரமக்களால் பெருவிழாவாகக் கொண்டாடப் பட்டது. இந்திர விழாவின் இருபத்தெட்டாம் நாளில், காவிரியாற்று நீரைப் பொற்குடத்தில் ஏற்றிவந்து இந்திரன் சிலேக்கு முழுக்கு ஆட்டுவார்கள். இதனேச்சிலப்பதிகாரம் "தண்ணலுங் காவிரித்தாது மலி பெருந்துறைப் புண்ணிய நன்னீர் பொறகுட தேந்தி மண்ணக மருள வானகம் வியப்ப விண்ணவர் தலேவனே விழு நீராட்டி" என்று குறிப்பிடுகிறது. இந்திர விழாவை ஒட்டிமேற் கொண்ட நிகழ்ச்சிகளில்காவிரிகடலோடுகலக்குமிடத்தில் 'காவிரி நீராடல்' ஒரு மிக முக்கிய நிகழ்ச்சியாகும். அரசர்முதல் ஆண்டி வரையில் அனேவரும் காவிரி நீராடசாரசைாரையாகப்போவார்கள். குறிப்பாகக காதலர்களும், மணமக்களும் நீராடலில பெரும் பங்கு கொள்ளுவர்: சேரமன்னனின் மகள் ஆட்டனத்தியும் சோழ மன்னனின் மகன் ஆதிமந்தியும் மணமக்களாகிக் காவிரி நீராடச் சென்றபோதுதான். காவிரியின் பெருவெள்ளம ஆட்டனத்தியை அடித்துக்கொண்டுபோய் கடலினுள் அழுத்தியது. ஆதிமந்தி அலறிப் புடைத்துக் கடற்கரை வழியே ஓடி யலேந்து திரிந்து இறுதியாகக் கரையொதுக்கப்பட்டுக் கிடந்த ஆட்டனத்தியைக் கண்டாள். இளமணமக்கள் காவிரி பெருவெள்ளத்தில் நீராடுவதை, "வதுவை ஈரணிப் பொலிந்து நம்மொடு, புதுவது வந்த காவிரிக் கோடுதோய் மலிர்நிறை.ஆடியோரே" என்று அகநானூற்றின் 166-ஆம் பாடல் குறிப்பிடுகிறது.

காவிரியில் வெள்ளப் பெருக்கு ஏற்படும் காலத்தில் காவிரி கடலேச் சென்று தழுவும்; காவிரியில் வெள்ளம் குறையும் போது கடல் காவிரியை வந்து தழுவும். இதனே அகநானூற்றின் 123 வது பாடல் "கழைமாய் காவிரிக் கடன் மண்டு பெருந்துறை. இறவொடு வந்து கோதையொடு பெயரும், பெருங்கடல் ஓதம் போல" என்று அழகாகக் கூறுகிறது. கடல் நீர் மீன்களேக் கொண்டு வந்து கொடுத்துவிட்டுத் திரும்பிப் போகும் போது காதலாகள் கழற்றிப் போட்ட மாலேகளேக் கரையிலிருந்து பறித்துக்கொண்டு போகும் என்று அகநானூற்று ஆசிரியர் குறிப்பிடுவது எண்ணி மகிழ்வதற்குரியதாகும்:

காவிரியாறு பூம்புகாரின் கூடல் வாயில் கடலில் தாவுவதையும், பின்னர்க் கடல்நீர் காவிரியில் தாவுவதையும் சிலப்பதிகாரம் - மலேபடுகடாம் ஆகிய இரு இலக்கியங்கள் அழகாகக் குறிப்பிடுகின்றன "குடமலேப் பிறந்த கொழும்பல் தாரமொடு, கடல் வளன் எதிர்க்கடவுவாய் நெரிக்குங் காவிரி" என்று சிலப்பதிகாரம், "குடமலேப் பிறந்த தண் பெருங் காவிரி, கடல்மண்டு அழுவத்துக் கயவாய் கடுப்ப தோருச் செருவின் நெடுங்கடை" என்று மலேபடுகடாமும் குறிப்பிடுகின்றன.

காவிரி ஆற்றைக் கடப்பதற்குப் படகுகளேப் பயன்படுத்துவார்கள். படகோட்டிகள் பெரிய மூங்கில் கம்புகளேத் துடுப்புகளாகக் கொண்டு படகுகளே இக்கரையிலிருந்து அக்கரைக்குக் கொண்டு போய்ச் சேர்ப்பார்கள். காவிரியில் பெருவெள்ளம் போகும்போது மூங்கிற்றுடுப்புகளே நிலே நாட்ட முடியாமல் படகோட்டிகள் தத்தளிக்கவேண்டி வரும். இந்தச் செய்தியை 'கழைநிலே பெருக் காவிரி நீத்தம்' என்று அகநானூறு கூறுகிறது.

குளிர்ந்த காவிரியாற்று நீரில் மூழ்கி எழுபவர்கள் குளிரால் நடுக்கம் பெறுவார்கள் என்பதை அகநானூற்றின் 62 ஆம் பாடல் "கடும் புனல் மலிந்த காவிரிப் பேரியாற்று, நெடுஞ்சுழி நீத்த மண்ணுநள் போல, நடுங்குனர்" என்று குறிப்பிடுகின்றது.

காவிரியின் வெள்ளம் கரைகளே பறுத்து வால் போன்று கருமணலேத் தேக்கி வைத்து விட்டுப் போகும். இதனேக் "கடற்கரை மெலிக்குங் காவிரிப் பேரியாற்று, அறல்வார் நெடுங் கயத தருநிலே கலங்க' என்று அகநானூற்றின் 126 வது பாடல் கூறுகிறது.

காவிரியாற்றுக் கரைகளில் கருமணற் கோடுகள் நெளிந்து நெளிந்து படிப்திருப்பதைப் பெண்களின் கூந்தலுக்கு ஒப்பிடுகிருர் அகநானூற்றின் 213 வது பாடலாசிரியர். "இலங்கு, நீர்க் காவிரி இழிபுனல் வரித்த அறலென நெறிந்தகூந்தல்" என்று குறிப்கிடுகிறார்.

காவிரியின் இருபுறமும் மாமரச் சோலேகளும் படப்பைகளும் அடர்ந்து நின்று அழகு செய்யும் என்பதை அகநானூற்றின் 341 வது பாடல், "காவிரி வடவயின் நிழற்கயற தழீஇய, நெடுங்கால் மா குயிலும். தேம் பாய்மா அத்து ஓங்குசின விளிக்கும். நாடார்காவிரிக் கோடுதோய். மலர் நிளேவுக்கழையழி நீத்தம்சாய"

காவிரியில் சிறுசிறு அகள்ணே ஆங்காங்குப் போடப்பட்டு நீர்த்தேக்கங்கள் செய்யப்பட்டு இருர்தன என்பதைச் 'சிறைபறைந்து உரைஇச் செங்குணக்கு ஒழுகும், அம்தண் காவிரி போல" என்று அக நானூற்றின் 76 ஆம் பாடல் குறிப்பிடுகின்றது.

காவிரியாற்றின் துணேயினுல்தான் சோழநாடு கழனி நாடு என்று பெயர் பெற்றது. சோழநாடு அன்றும். இன்றும், என்றும் தமிழகத்தின் செந்நெல் களஞ்சியமாகத்தான் திகழ்ந்து வருகிறது. காவிரியின் பயனுல் விளேயும் நெல்வளத்தைக் குறிப்பிட வந்த பொருநராற்றுப் படை வெண்பா, "ஏரியுமேற்றத்தினுனும பிறர் நாட்டு, வாரிசுரக்கும் வளனெல்லாம்— தேரின், அரிகாலின் கீழுகூஉம் அந்நெல்லே சாறும, கரிகாலன் காவிரி சூழ்நாடு" என்று கூறுகிறது. பிறர் நாடாகிய பாண்டிய நாட்டிலும், சேர நாட்டிலும் ஏரியின் மூலமும் நீர்ப்பாய்ச்சி விளேவிக்கும் நெல்லின் அளவு கரிகாற் சோழனின் காவிரி பாயும் நாட்டில் அறுவடையாகும்போது கீழே சிதறி விழும் நெல்லின் அளவுக்கு ஒத்ததாக இருக்கும் என்று குறிப்பிடுவது சோறுடைய சோழ நாட்டின் வளப் பெருக்கத்தைச் சுட்டிக் காட்டுவதாகும்.

காவிரி ஏராளமான நெல்லேத் தருவதால் அதற்குப் பொன்னி என்ற பெயர் ஏற்பட்டது 'பொன் என்ருல் 'நெல்' என்று பொருள். ஏராளமான 'பொன்னேத் தருவதால் 'பொன்னி" என்ற அழைக்கப்பட்டது. "புனல் பரந்து பொன் கொழிக்கும மலேத்தலேய கடற்காவிரி' என்று பட்டின பாலே குறிப்பிடுகிறது. காவிரியாற்று மணலில் பொன்துகள்கள் காணப்படுவதால் அதற்கு 'பொன்னி' என்று பெயர் வநததாகவும் கூறுவார்கள்.

சோழ நாட்டு உழவர் பெருங்குடி மக்களே காவிரிப் புதல்வர் என்று அழைக்கிறது சிலப்பதிகாரம். "பரப்பு நீர்க் காவிரி பாவைதன் புதல்வர், இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும் உழவிடைவிளப்போர்" என்று கூறுகிறது.

காவிரியின் கரையில் செழிப்பான நகரங்களும், பேரூர்களும் வளர்ந்தோங்கி யிருந்த செய்தியை அகநானூறு, புறநானூறு, சிலப்பதிகாரம் போன்ற இலக்கியங்கள் சிறப்பாகத் தெரிவிக்கின்றன. கரிகாலன் ஆண்ட 'புகார்' பழையர் போரர் ஆண்ட 'போரர்' குறுநில மன்னர் ஆண்ட 'கழார்', 'ஆவூர்' அருவந்தை என்னும் குறுநில மன்னன் ஆண்ட 'அம்பர்' சோழமன்னர் ஆண்ட உறையூர் போன்ற நகரங்களின் வளம் இலக்கியங்களில் சிறப்பாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

காவிரியாறு வெண்மணலே உறையூர் நகருக்கு அருகே ஒதுக்கும் என்றும், அந்த வெண்மணற் படுகையில் பூந்தோட்டங்கள் மலரும்

புதுவை முதல்வர் வாழ்த்து

★

தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் நாளில்
தமிழ்காத்த அண்ணனுக்கும், கன்னித்—தமிழ்போற்றும்
நற்புதுவை மக்களுக்கும், நண்பர்க்கும், என் வாழ்த்தைக்
கற்கண்டாய்-தந்தேன் கனிந்து.

எம். ஓ. எச். பாரூக்
முதல்வர், புதுவை மாநிலம்

என்றும் அகநானூறு கூறுகிறது. அதன் 137 வது பாடல், "உறந்தை ஆங்கண் வருபுனல்நெரிதரு மிருகரை பேரியாற்று. உருவ வெண்மணல் முருகுநாறு தண்பொழில், பங்குனிமுயக் கங் கழிந்த வழிநாள்' என்று கூறுகிறது. 'காவிரி படப்பை உறந்தை யன்ன பொன்னுடை நெடுநகர்" என்று அகநானூற்றினை 385 வது பாடல் குறிப்பிடுகிறது.

கரிகாற் சோழன் பூம்புகார் நகரிலிருந்து திருவரங்கம் வரையில் காவிரியின் இருமருங்கிலும் கரைகளையெழுப்பி, அதன் மூலம் சோழ நாட்டை வளப்படுத்தினான். 'கல்லணை அவனால் கட்டப்பட்டதாகும் சிங்கள நாட்டை வென்று அங்கிருந்து சிறைப் பிடித்து வந்த 12,000 போர் வீரர்களைக் கொண்டு கரிகாலன் கரையெழுப்பியதாக வரலாறு கூறுகிறது.

காவிரியாற்றைப் பற்றிய குறிப்புக்கள் பண்டைத் தமிழ் இலக்கியங்களில் மட்டுமல்லாமல், வெளிநாடுகளில் வந்த பயணர்கள் பலருமெழுதிவைத்துள்ள நூல்களில் காணப்படுகின்றன. கிரேக்க நாட்டிலிருந்து வந்த தாலமி கி. பி. ஐந்தாம் நூற்றுண்டில் வடநாட்டில் இருந்து வந்து புத்த தத்தா போன்றவர்கள் சிறப்பாகக் காவிரி பற்றி எழுதியுள்ளார்.

தமிழக மக்களுக்கு என்றும் உண்டியும் அதன்மூலம் உயிரும் கொடுத்து வரும் காவிரி, சென்னை நகரமக்களுக்கும் உயிர் கொடுக்க இருப்பது பெரிதும் போற்றி மகிழ்வதற்குரியதாகும்.

'அன்னய் வாழி கவேரி' என்று இளங்கோவடிகள் வாழ்த்தியதைப் போன்று நாமும் வாயார வாழ்த்தி, மனதார வழுத்திப் பெருமகிழ்ச்சிவுறுவோமாக! ○

எங்கள் பொங்கல் வாழ்த்துக்கள்!

★

பொங்கி எழும் பொங்கல் போல
புகாரியின் உணவு வகைகள்
உண்ண உகந்தவை!

புகாரிஸ் பிரியாணி, மட்டன், சிக்கன் கறிவகைகள், கே. 65 சிக்கன், மற்றும் தந்தூரி சிக்கன், புரத சத்துள்ள ரொட்டிகள், கேக் வகைகள். இதமான ஐஸ்கிரீம், பீச்மல்பா, வகைகள் நீங்கள் விரும்பி உண்ணவும், விருந்தோம்பலுக்கும் சிறந்தவை.

புகாரி ஹோட்டல்ஸ்

மவுண்ட்ரோடு, சென்ட்ரல், எழும்பூர்,
சைனபஜார் அண்டு மெரினு
சென்னை.

அதிர்ஷ்டசாலிகளுக்கு எனது புத்தாண்டு வாழ்த்துக்கள்!

இந்திய நாட்டின் அனைத்து மாநிலங்களும் சேர்ந்து பரிசுச் சீட்டுகள் மூலம்மக்களுக்கு
அளிக்கும் தொகை ஒரு கோடி. இந்த பெருந்தொகையில் பங்கு பெற
ஒரு முதல் பரிசும் மற்றும் எண்ணற்ற இதர பரிசுகளும்
பெற்றுக் கொடுத்த கைராசி ஏஜண்ட்
V. P. வெங்கடாசலத்திடம்
பரிசிச் சீட்டுகள் வாங்குங்கள்.

★

தனி சீட்டின் விலை ரூ. 1-00. 100 டிக்கட் கூட்டணி 1-25

(தபால் செலவு தனியாக 0-30 காசு சேர்த்து அனுப்பவும்)

தங்களுக்குத் தேவையான சீட்டுகளுக்கு மணியார்டர் அல்லது போஸ்டல் ஆர்டர் அனுப்பவும்.
அனைத்து மாநிலமும் சேர்ந்து 10 சீட்டுகளுக்குமேல் வாங்குபவர்களுக்கு தபால் செலவு இலவசம்.

V. P. வெங்கடாசலம்.

அனைத்து மாநில பரிசுச் சீட்டு அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்.
நெல்லை லக்கி கார்ப்பரேஷன்
தொலைபேசி எண்: 20.
T. M. கட்டிடம், நெல்லை-1.

எத்தனையோ ஆண்டுகள் வந்த பொங்கல்
இந்த ஆண்டும் வருகிறது. ஆனால்
இன்பம் தருமா ? இதயம் மகிழுமா?
அண்ணா இல்லை - அளர் தம் அன்பு உரு இல்லை !
அவர் இல்லாத முதல் பொங்கல்
நினைவின் ஏக்கம் - நெஞ்சின் தவிப்பு
அரசுபீடம் ஏறிய பின்னர்
முதற் பொங்கலின்போது தமிழ் மாநாடு கண்டார்
இரண்டாவது பொங்கலில்
கலைவாணரின் சிலையினைத் திறந்தார்
மூன்றாவது பொங்கலில்
மூண்டு எழுகிறது துயரம்-அதனை அடக்கிக் கொள்வோம்!
ஆண்டு அரசோச்சிய அண்ணனின் வழியில்
அரசு நடாத்துவோம் - மக்களின் அல்லல் களைவோம் !
இன்றைய பொங்கலுக்கு இதுவே நம் உறுதி !
அன்றொரு நாளில் நாவலர் கண்ட
'மன்றம்' வளர்க ! மக்களினம் வாழ்க !

முதல்வர்
கலைஞர். மு. கருணாநிதி

★ கட்டிடங்கள் ★ சாலைகள்

★ பாலங்கள் ★ அணைகள்

கட்ட உபயோகப்படுவது

CHETTINAD BRAND

செட்டிநாடு சிமெண்ட்

பட்டுப்போல் மிருதுவானது

உருக்குபோல் உறுதி அளிப்பது

ISI IS:269

தயாரிப்பாளர்கள் :

செட்டிநாடு சிமெண்ட்
கார்ப்பரேஷன் லிமிடெட்

பதிவு அலுவலகம் : சென்னை-1.
தொழிற்சாலை : புலியூர் (கரூர்)

பாரதி கண்ட பொருளாதார சமத்துவம்

பேராசிரியர். க. அன்பழகன் எம்.ஏ., எம்.பி.,

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தேசியக் கவி சுப்பிரமணிய பாரதியார் தமிழ்த் திருவிளக்கினைத் தூண்டி ஏற்றுவித்த சுதந்திரச் சுடர் ஒளி பரவி கப்பியிருந்த அடிமை இருள் அகன்று வரும் நன்னாள் இந்நாள். தமிழ் மொழியினில் புதுமை ஆர்வமும், கவிதைத் துறையில் மறுமலர்ச்சியும், மக்களிடையே புத்துணர்ச்சியும் விளைவித்த விடுதலைக் கவிக்குயில் பாரதியார்.

அவர், தமது வாழ்நாளில், அடிமைத் தளையில் கட்டுண்டு விடுதலை வாழ்வின் மாட்சியும் பயனும் உணராது மாற்றார் ஆதிக்கத்தில் மோகங் கொண்டு அஞ்சி அஞ்சிச் செத்துக் கொண்டிருந்த மக்களுக்கு—அறிவுத் தெளிவும், உரிமை வேட்கையும், தன்னல மறுப்பும் தியாகத் துணிவும் ஊட்டி எழுச்சி கொள்ளச் செய்த மக்கள் கவியாவார்.

"இந்த வையத்து நாட்டிலெல்லாம் தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்பட்டு நின்ற தாம் ஒரு பாரத தேசந்தன்னை வாழ்விக்க வந்த காந்தி மகாத்மா!" என்று பாடிய பாரதியாரும், அவ்வாறே மக்களை வாழ்விக்க வந்த புதுமைக் கவியாவார். அடிமை வாழ்வகன்று இந்நாட்டார் விடுதலையார்ந்து செல்வம் குடிமையில் உயர்வு காண வேண்டுமென்பது அவரது பேரவா.

ஏழ்மையிலே பிறந்து, வறுமையிலே வளர்ந்து மிடிமையிலே நாளும் அல்லற் பட்டு, வறியோரின் கண்ணீரின் காரணத்தை உணர்ந்து கனல் கக்கும் உணர்வு கொண்ட பாரதி, ஏழையின் துயரத்தைத் துடைக்கவும், அவர்தம் துன்பத்தை வளர்க்கும் வறுமைக்கு ஏதுவாயினவற்றையெல்லாம் ஒழிக்கவும் நாளும் ஏங்கலானார்.

ஏழ்மைக்கும் வறுமைக்கும் ஏதுவாகக் காணப்பட்ட எவையாயினும், அவை எத்தகைய புனிதத் தன்மையும் பழமை ஆதாரமும் உடையவையேனும் அவை பாரதியின் கண்டனத்துக் காளாயின. மக்களிடையே இயல்பாகப் பூத்துக் குலுங்க வேண்டிய அன்பு, ஒற்றுமை, தோழமை. சகோதர உரிமை இவைகள் அரும்பாத வண்ணம் அம்மக்களை மேலும்கீழுமாகப்—பலப்பல குழுவாக வேறுபடுத்திப் பிளந்து, ஒட்டாது செய்யும் எண்ணமெல்லாம் அவருக்கு நஞ்சாயின. ஏழையர், செல்வர் என்னும் இருவேறு துருவங்கள், மேல் வகுப்பு கீழ் வகுப்பு என்னும் சமூகப் பிளவுகள், தீண்டாமை என்னும் தாண்ட முடியாத அகழி, சாதி குலப் பிறப்பு என்பதால் வளர்ந்த மூட நம்பிக்கைகள் இவையாவும் ஒழிந்து—மக்கள் ஒன்றுபட்ட சமுதாயமாக வாழவேண்டும் என்பது அவரது இலட்சியக் கனவு.

இந்த இலட்சியக் கனவு நனவாக மக்கள் எல்லோரும் உண்மை அறிவு பெற்று நல்லறம் ஓர்ந்து வாழவேண்டும் அன்றோ! அந்த அறிவைத் தூண்டி ஒளிவிடச் செய்யவே—தம் அறிவைத் தீபமாக்கி—தம் ஆர்வத்தையே நெய்யாக்கி—தம் உடம்பையே திரியாக்கி—தமிழையே சுடரொளியாகக் கொண்டு அதுயாண்டும் பரவுமாறு தேசியப் பாடல்—தோத்திரப் பாடல்—ஞானப்பாடல்—தனிப்பாடல்—முதலான பலவகைப்பாக்களின் மூலம் தமிழகத்து வீடுதோறும் விளக்கேற்றி வைத்தார் பாரதியார்.

இவ்வுலக வாழ்வில் உண்மை ஞானம் ஒளி குன்றுவதற்கும்—ஞான நல்வழி கைவிடப் படுவதற்கும்—"பொருள்" அடிப்படை யாகிவிடும் நிலை ஏற்பட்டுவிட்டது என்பதையும் அவர் தெளிந்தார். பொருட் பெருமையைப் பற்றியும் அஃதிலார் தம் இரங்கத்தகு நிலையைக் குறித்தும் தம் சுய சரிதையில் அவர் கூறுவது இது.

"பொருளிலார்க்
  கிலையிவ்வுலகு" என்ற நம்
புலவர் தம் மொழி
  பொய்ம் மொழியன்று காண்!
பொருளிலார்க்
  கினமிலை, துணையிலை
பொழுதெலா மிடர்
  வந்தெற்றுமால்;
பொருளிலார் பொருள்
  செய்தல் முதற் கடன்
போற்றிக் காசினுக்
  கேங்கி யுயிர்விடும்
மருளர் தம் மாசையே
  பழி கூறுவன்"

என்று அதனை விளக்கியுள்ளார்.

"இன்மையின் இன்னாதது
  யாதெனில் இன்மையின்
இன்மையே யின்னாதது"

என்றுவள்ளுவர்விளக்கிய நல்குரவு—

எத்தகைய இடர் விளைவிப்பது என்பதை உணர்ந்தவர் பாரதி. அந்த வறுமையால் தமது தந்தையார் அலைமோதி நின்ற அவலத்தையும் அவர் கூறியுள்ளார்.

"ஈங்கிதற் கிடை
  எந்தை பெருந்துயர்
எய்தி நின்றனன்
  எய்திய வறுமையான்
ஓங்கி நின்ற பெருஞ்
  செல்வம் யாவையும்
வீணர் செய்த
  சதியில் இழந்தனன்
பாங்கில் நின்று
  புகழ்ச்சிகள் பேசிய
பண்டை நண்பர்கள்
  கைநெகிழ்ந்தேகினர்
வாங்கி யுய்ந்த
  கிளைஞரும் தாதரும்
வாழ்வு தேய்ந்த பின்
  யாது மதிப்பரோ!

இந்நிலைக்கு ஆளான தந்தை பொருள் தேடுவதையே கொள்கையாகக் கொண்டதைக் கூறுமிடத்து

"பார்ப்பனக் குலங்
  கெட்டழி வெய்திய
பாழடைந்த
  கலியுகமாதலால்
வேர்ப்ப வேர்ப்பப் பொருள்
  செய்வதொன்றையே
மேன்மை கொண்ட
  தொழிலெனக் கொண்டனன்"

என்று குறைபட்டுள்ளது தெரியலாகும். ஆயினும் வறுமையின் கொடுமையை முற்றும் நுகர்ந்த இளைஞர் என்னும் தன்மையால்—பிறர் படும் துயரத்தை முற்றும் உணர்வதும் அதைப் போக்கும் பல்வேறு வழியையும் நாளும் சிந்திப்பதும் கவிதையாக வடிப்பதும் அவருக்கு இயல்பாகவே தொழிலாயின.

நம் நாடு விடுதலை பெற்றாக வேண்டும் என்னும் வேட்கை மிகுந்து அந்நியர் ஆட்சியை எதிர்த்துப் பலப்பல போராட்டங்களை நடத்தி வந்த நாட்களில்ஒற்றுமையின் இன்றியமையாமையையும் ஒருமைப்பாட்டையும் வேறுபட்ட பல மக்களும் தத்தம் இயல் புணர்ச்சிகளுக்குச் சிதைவின்றி பொது உணர்ச்சி கொள்வதன் சிறப்பையும் விளக்கிக் கூறவேண்டிய தேவை மிகுதியாக இருந்தமையின் பொருளாதார சமத்துவம் விளக்கம் பலவின்றி ஒரு குறிக்கோள் சொல்லாகவே, அக்காலத்தில் இடம் பெற்றது. ஆயினும், சமுதாயம் பெற வேண்டிய புதுவாழ்வை விளக்கி வலியுறுத்திய இடத்திலெல்லாம் பொருளாதாரச் சமத்துவம் அதன் உள்ளீடாக விளங்கத்தான் செய்தது. சமதர்மம்—பொதுவுடமை— ஜனநாயக நெறி சமதர்மம்—புரட்சிப் பொதுவுடமை இவ்வாறெல்லாம் விளக்கப்பட்ட காலமல்ல அது. ஆனால் எல்லோரும் இன்புற்றிருக்கும் ஒரு சமுதாயத்தையே பாரதி வேண்டி நின்றார். அந்தச் சமுதாயத்தில் பொருளாதார ஏற்றத்தாழ்வுக்குப் பொருள் இருக்க முடியாது என்பது அவர் உணர்ந்திருந்ததாகும்.

அந்தச் சமுதாயத்திற்கு "யாதும் ஊரே யாவருங் கேளிர்" என்னும் பொது நோக்கும், "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்னும் உயர்ந்த குறிக்கோளும் "சக்திக் கேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற வசதி" என்னும் அடிப்படை நியதியும் "யாருக்கும் யாரும் தாழ்வல்ல—அடிமையுமல்ல" என்னும் தெளிந்த உணர்ச்சியும் வேண்டும் என்பதையும் பாரதியார் கண்டார்.

சமுதாயத்தில் வேரூன்றியிருந்த கண் மூடிப் பழக்க வழக்கமெல்லாம் மண் மூடிப் போனால்தான் மனிதன் பிறப்பான்—சமத்துவமுள்ள மனித குலம் தழைக்கும் என்பதை அவர் உணர்த்தினார்.

"ஜாதி மதங்களைப்
  பாரோம்—உயர்
ஜன்மம் இத்தேசத்தில்
  எய்தினராயின்
வேதிய ராயினும்
  ஒன்றே—அன்றி
வேறு குலத்தின
  ராயினும் ஒன்றே
ஈனப் பறையர்களேனும்
  —அவர்
எம்முடன் வாழ்ந்திங்
  கிருப்பவர் அன்றோ

தயங்காதே மயங்காதே!

புலவர். பொன்னிவளவன்

நெஞ்சுக்குப் பட்டதோர் நீதியைச் சொல்லிட
  நீயும் தயங்காதே—கொடும்
வஞ்சகர் மத்தியில் வாழ்வதை எண்ணிநீ
  வாடி மயங்காதே!

சேற்றினில் உள்ளதைச் சிந்தித்துத் தாமரை
  சிந்தை வருந்தாது—நீ
நாற்ற நினைப்பினர் தூற்றலுக் கஞ்சினால்
  நாடு திருந்தாது!

எத்தனை யோபுயல்! எத்தனை யோபகை!
  எத்தனை யோகொடுமை!—சில
எத்தரின் போக்கினை ஏன்மதிக் கின்றாய்?
  யாருக்கு நீஅடிமை?

இத்தரை தங்கமாய்ப் பித்தளை தன்னையே
  ஏற்பதும் விந்தையில்லை!—சிலர்
புத்தனைப் பித்தனைப் போற்றிடு வார்; அந்தப்
  போக்கிலும் விந்தையில்லை!

நல்லவர் யாவரும் நன்மை அடைந்திடும்
  நாள்வரப் பாடுபடு!—உன்
சொல் செயல் யாவையும் சூழ்ச்சியை வென்றிடும்;
  தொண்டினில் ஈடுபடு!

"சீனத்தராய் விடுவாரோ
—பிற
தேசத்தர் போற் பல
தீங்கிழைப்பாரோ?"

என்று தாம் இயற்றிய 'வந்தே மாதரம்' என்னும் நாட்டு வாழ்த்தி லேயே அவர் கேட்டுள்ளார்.

தாழ்வுற்ற மக்களின் நிலையை யுயர்த்தும் வண்ணம் நாம் ஒன்று பட்டு சாதி வேற்றுமையைப் போய் யாக்கி யாவரும் ஓரினமாக வாழும் ஒருமைப்பாட்டை அடையாது போனால், அதுவே அந்நியர் நிலைக்க இடமாகும், யாவர்க்குமே நீங்காத தாழ்வாகும் என்றும் அவர் விளக்கி னார்.

அக்கால மக்கள் தம் நிலையையும் நினைப்பையும் தாழ்வையும் சோர்வை யும் பிளவையும் பேதத்தையும் எண் ணிய போது நெஞ்சம் கொதித்தார், நெஞ்சு பொறுக்காது நொந்து போனார்.

"நெஞ்சு பொறுக்குதில்லையே
—இந்த
நிலைகெட்ட மனிதரை
நினைந்துவிட்டால்
கொஞ்சமோ பிரிவினைகள்?
—ஒரு கோடி என்றால்
அது பெரிதாகுமோ?
நெஞ்சு பொறுக்குதில்லையே
—இதை
நினைந்து நினைந்திடினும்
வெறுக்குதில்லையே
கஞ்சி குடிப்பதற் கிலார்
—அதன்
காரணங்கள் இவையெனும்
அறிவுமிலார்
பஞ்சமோ பஞ்சம் என்றே
—நிதம்
பரிதவித்து உயிர்
துடி துடித்தே
துஞ்சி மடிகின்றாரே
—இவர்
துயர்களைத் தீர்க்கவோர்
வழியில்லையே"

பாரதியாரின் நெஞ்சத்தின் ஆழத்தில் ஊறிய பொருளாதார சமத்துவ வேட்கையை இவை காட்டுவன வாகும்.

"விடுதலை" எதுவென்று பாடு மிடத்தும் பாரதி, கீழ்த் தட்டு மேல் தட்டாக மாறும் சமுதாயப் புரட்சியை யே மனத்தில் கொண்டு, அதனால் பொருளாதாரச் சமத்துவம் எய்தலா கும் என்னும் நம்பிக்கையுடையவ ராகவே காட்சி தருகிறார்.

"பறையருக்கும் இங்குத் தீயர்
புலையருக்கும் விடுதலை
பரவரோடு குறவருக்கும்
மறவருக்கும் விடுதலை"—
"ஏழையென்றும்
அடிமையென்றும்
எவனும் இல்லை ஜாதியில்
இழிவு கொண்ட
மனிதரென்பது
இந்தியாவில் இல்லையே
வாழி கல்வி செல்வம் எய்தி
மனம் மகிழ்ந்து கூடியே
மனிதர் யாரும் ஒரு நிகர்
சமானமாக வாழ்வமே!"

இவ்வாறெல்லாம் "விடுதலை"யைப் பற்றி பாடிய பாரதி—சுதந்திரப் பள்ளு பாடுவது இயல்பன்றோ! ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று ஆடுவோமே—பள்ளு பாடுவோமே—என்று பாரதி யார் பாடுமாறு—நாடு பெற்ற நிலை எதுவாக இருக்கும்? இருக்க வேண்டும்? அந்த நாளில் நாட்டில், எப்படிப்பட்ட நிலையை அவர் கனவு கண்டார் என்பதைக் காண்போம்.

"எல்லோரும் ஒன்றென்னும்
காலம் வந்ததே—பொய்யும்
ஏமாற்றும் தொலைகின்ற
காலம் வந்ததே—இனி
நல்லோர் பெரியரென்னும்
காலம் வந்ததே—கெட்ட
நயவஞ்சக் காரருக்கு
நாசம் வந்ததே
"உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்
—வீணில்
உண்டு களித்திருப் போரை,
நிந்தனை செய்வோம்
விழலுக்கு நீர்பாய்ச்சி மாய
மாட்டோம்—வெறும்
வீணருக்கு உழைத்துடலம்
ஓயமாட்டோம்"

இவ்வாறு தமது புரட்சி மனத்தைத் திறந்து காட்டுகிறார்.

"ஏற்பாரைப் பணிகின்ற
காலமும் போச்சே—நம்மை
ஏய்ப்போருக் கேவல் செய்யும்
காலமும் போச்சே"—

என்று மகிழ்கிறார். நாம், 'எல்லோ ரும் சமம் என்பது உறுதியாச்சு" என்று நம்புகிறார். இந்தப் பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம் என்று உறுதி கொள்கிறார்.

இவ்வாறு பாரதி எண்ணருங் கொடுமைத் தீயில் மக்களைத் தள்ளும் வறுமைத் துயரிலிருந்தும்—பசிப் பிணியிலிருந்தும் ஒவ்வொரு மனித னும் விடுபட்டு, கையேந்தக் காரண மில்லாது கும்பி கொதிக்க இடமில் லாது பிற அடிப்படைத் தேவைகளை யும் பெற்று இனிது வாழும் ஒரு நாகரிக சமுதாயமே உருப் பெற வேண்டுமென்று விரும்பினார். அந்தச் சமுதாயம் அனைவருமாகப் பாடுபட்டு முயன்று வளம் பெருக்கி வாழும் சமுதாயமாகும். அன்பும் பண்பும் கொண்டு ஏழையென்றும் செல்வரென்றும் எவரும் இல்லை என்னும் நிலை பெற்ற சமுதாயம். அவர்களிடையே உயர்வுமில்லை—தாழ்வுமில்லை; வஞ்சகமில்லை—சூழ்ச்சி இல்லை; சமயச் சழக்கு இல்லை; சாதி பேதமில்லை; அங்கே மனிதன் வாழ் கிறான், எல்லோரும் மன்னர் என்னும் உணர்வுடன் தன்னம்பிக்கையுடன். ஒருவன் வாழ்வுக்கு மற்றவர் துணை, சமூகம் அனைவருக்கும் பொதுவான இல்லம். அனைவர் வாழ்வுக்கும் சமூக நீதியே அடிப்படை. அங்கே ஒருவன் உணவையோ உழைப்பை யோ வாழ்வையோ இன்பத்தை யோ—ஒருவன் பறிக்க இடமில்லை—ஏதுவில்லை—தேவையுமில்லை. எல் லோரும் ஓர் நிலை—ஓர் விலை! ஒவ் வொருவர் மதிப்பும் சமுதாயத்தின் கூட்டு வாழ்வின் மதிப்பு ஒருவருக்கு விளையும் கேடு—சமுதாயத்திற்கே இழுக்கு. எல்லோரும் அதனை உணர்ந்த நிலைபால் அமரராகிறார்—பாரதியின் கனவிலே. அந்தச் சமு தாயம் வாழும் வளரும், வழிகாட்டும் ஒளியாகும் என்றும் துணிந்து, 'பாரத சமுதாயம் வாழ்கவே" என்று பாரதி பாடுவது இது!

"முப்பது கோடி
ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொதுவுடமை
ஒப்பில்லாத சமுதாயம்
உலகத்துக் கொரு புதுமை"

இதிலே பொதுவுடமையைக் குறிப் பாகச் சுட்டி—அதனால் ஒப்பில்லாத சமுதாயம் உருப்பெறப் போகிறது என்கிறார் பாரதி.

"மனிதர் உணவை
மனிதர் பறிக்கும்
வழக்கம் இனியுண்டோ?
மனிதர் நோக
மனிதர் பார்க்கும்
வாழ்க்கை இனியுண்டோ?

என்று கேட்டுச் சமதர்மப் பயனை உணர்த்துகிறார்.

இந்த நாடு—இனிய பொழில் கள் நெடிய வயல்கள் நிரம்பி—கனி யும் கிழங்கும் தானியங்களும் கணக் கின்றித் தரும் நாடு—என்று அடுத்து வாழ்த்திய பாரதியார், அப்படிப்பட்ட பாரத நாட்டில் ஒருவனுக்கும் உண வில்லை—என்று கூறும் நிலை இருத் தற்குக் காரணமில்லை என்று உணர்ந்து கனன்று எழுகின்றார்.

"இனியொரு விதி செய்
வோம்—அதை
எந்த நாளும் காப்போம்:
தனியொருவனுக் குணவிலை
யெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்—

என்று முழங்குகிறார் பாரதி.

விதி செய்வோம்—சட்டமாக அதைக் காப்போம் எல்லோரும் வாழ்வ தற்கு—என்பதே அவர் கண்ட பொருளாதார சமத்துவம் ஆகும்.

"எல்லோரும் ஓர் குலம்—
எல்லோரும் ஓரினம்
எல்லோரும் இந்திய மக்கள்!
எல்லோரும் ஓர் நிறை,
எல்லோரும் ஓர் விலை
எல்லோரும் இந் நாட்டு
மன்னர்—நாம்
எல்லோரும் இந் நாட்டு
மன்னர்—ஆம்
எல்லோரும் இந்நாட்டு
மன்னர்—"

என்று நம்மை எல்லாம் மன்னராக உணரச் செய்து—நாட்டுடமையில் பொதுவுடமை காட்டி—சமுதாய வாழ்வைக் கூட்டு வாழ்வாக்கி—பொருளாதாரச் சமத்துவத்தை வலி யுறுத்திச் சென்றார்—என்றும் மறை யாத புகழ் கொண்ட நமது கவி பாரதியார். வாழ்க பாரதி கண்ட பொருளாதார சமத்துவம்! ○

எங்களிடம் தயாராகும்

செல்வம், ராணி அண்டு சேகர்

ஊதுபத்திகள் தனிச்சிறப்பு பெற்றவை.

தந்தி: YESTEECEE P. B. 221 போன்: 22830

திறமையான பயிற்சி! தனித்தனிக் கவனிப்பு!!

வெற்றியின் சின்னம்!

ஸ்டூடன்ட்ஸ் டுடோரியல் காலேஜ் & ஹைஸ்கூல்

15-A, மேலவெளிவீதி (ரீகல் டாக்கீஸ் எதிரில்) மதுரை-1.

"தமிழ் மாநிலத்தின் தலைசிறந்த தனிப்பயிற்சி நிலையம்"

S. S. L. C; MATRIC
P. U. C; PRETECHNIC
B. A; Bsc; B.Com
M. A. Eng. LITERATURE
நேரிலும் தபாலிலும்

- பெண்களுக்குத் தனிக் கட்டிடத்தில் தனி வகுப்புகள்.
- ஏராளமான பொருட்செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள எமது சொந்தக் கட்டிடத்தில், காற்றோட்டத்துடன் கூடிய விசாலமான வகுப்பறைகள், வசதி நிறைந்த ஹாஸ்டல், அத்தனை கருவிகளுங் கொண்ட ஆய்வுக்கூடம் அமைககப்பட்டுள்ளது.
- ஆண்டுதோறும் அதிகரித்துவரும் தேர்வு விகிதம்.
- புலமை செறிந்த நாவலர்களின் ஈடு இணையற்ற போதனை.

விரைந்து சேர்க! வெற்றி பெறுக!

பேராசிரியர்:
அ. சங்கரநாராயணன், எம். ஏ.
முதல்வர்.

அலறிற்று சிலம்பு

அமைச்சர்
கா வேழவேந்தன்
பி.ஏ,பி.எல்.,

அந்தப் பேரழகி சந்தப்பாடல் நடப்பதுபோல் தாளம் பிறழாமல் நடந்தாள்.

தந்தத்தால் செதுக்கப்பட்ட அந்தத் தையலின் மலர்ப்பாதங்களில் 'கலீர் கலீர்' என்று சிந்துப்பாடல் எழுப்பின தாற் சிலம்புகள்!

கண்டான் காதலன். வண்டு காணுத மொட்டு மலர்ச்செண் டெடுத்து வாரி முடித்துச் செல்லும் அவள் தோற்றம் அவன் உள்ளத்தின் நாளங்களைக் கொண்டாட்டத்தில் ஆழ்த்தியது.

ஆனுல் அதே நேரம் அவன் நெஞ் சத்தில் ஏதோ ஓர் இனந்தெரியாத அச்சத்தின் பீதி தலைதூக்கியது.

ஏன்?

ஆடிவரும் தென்றலான அந்தப் பேரழகியின் காலில் பாடிவரும் சிலம்பு அந்தக் காளையின் காதிலே அழுகை ஒலியைப் பாய்ச்சிற்று!

அவள் இட்ட அடியை உயர்த்தி, எடுத்த அடியைப் பதிய வைக்கும் போது, அந்தப் பொல்லாத சிலம்பு 'ஐயோ! ஐயோ!' என்று அலறியது. ஓயாமல் ஒப்பாரி வைக்கும் அந்தச் சிலம்பின் ஓலத்தை ஒட்டுக்கேட்டான், அவன். சிலம்பு அவன் செவிப்பறை அதிரும்படி கூறிற்று.

"இரக்கத்திற்குரிய இளைஞனே! எதிர்நோக்கியுள்ள பேராபத்தை இம்மியேனும் உணர்ந்தாயா நீ?"

உன் நெஞ்சத்தில் உலவிவரும் வஞ்சியவள் இன்னும் கொஞ்ச நேரத் தில் உன்னை விட்டுப் பிரியப் போகிருள்.

அவளை பேராபத்து அண்டி விட்டது.

முதலில் அவளைத் தடுத்து நிறுத்து.

அவள் கால்களுக்குத் தடை போடு.

இல்லையென்ருல் உனக்கு அவள் இல்லை."

சிலம்பொலி விளம்பிய அந்தத் தீய செய்தி அவன் உள்ளத்திலே செஞ் சூட்டை ஏற்றிற்று.

"ஏன்? ஏன்?" என்று அவன் உதடுகள் துடித்தன.

'ஈர்ப்புச்சக்தி இல்லாவிட்டால் இந்த உலகம் இடங்குமா? எடுப் பில்லாக் கதிரவன் இல்லையென்ருல் நிலவு ஏது? என் நெஞ்சுக்குள் நெஞ்சாகிவிட்ட அவள் இல்லையென் ருல் நான் எங்கே வாழமுடியும்?'

இப்படி அலையெனப் புரண்ட அச்ச உணர்வுகள் அவனை ஆட்டிப் படைத்தன.

'சிலம்பே! ஏன் இப்படி நஞ்சனைய வெஞ்செய்தியை என் செவியிலே பாய்ச்சுகிருய்? பவளமல்லியின் இதழ்கள் பட்டாலும் துவண்டு சிவந்துவிடும் அந்தத் தோகையின் பாதைகளை ஏன் தடுத்து நிறுத்தக் கூறுகிருய்? மலரிதழ் தொட்டாலே வருந்தும் மெல்லடியில் வாட்டுகின்ற முள்குத்தினுல் அவள் என்னுவாள் என்று அஞ்சச் செய்கிருயா? அல்லது ஒளிரும் அவள் விரல் நகங்களில் மாணிக்கம் இழைக்கப்பட்டிருக்கிற தென்று எண்ணி ஏதேனும் நாகங் கள் அவள் காலைச் சுற்றிக்கொள்ளும் என்று கூற வருகிருயா?' இம்முறை யில் விரிந்த அவன் இதழ்கள் துடித்து மூடின.

சிலம்பு பதில் சொல்லாமல், ஐயோ, ஆபத்து! ஐயோ, ஆபத்து!' என்று மட்டுமே அலறிக்கொண்டிருந்தது.

'தவளை அலறினுல் மழைவரும் என்பார்கள். சாக்குருவி அலறினுல் கேடுவரும் என்பார்கள். ஆந்தை அலறக்கேட்டால் ஆபத்து வரும் என் பார்கள். ஆனுல் நீ ஏன் அலறுகிருய் என்று சொல்ல மறுக்கிருயே! நான் என்ன செய்வேன்?' அவன் கைகளைப் பிசைந்து கொண்டான்.

வஞ்சி மட்டும் அந்த மலர் சூழ்ந்த சோலையில் கொஞ்சமும் கவலையின்றி நடந்து கொண்டிருந்தாள்.

வாய் கிழிய அலறிய சிலம்பு, அவள் விரைந்து நடக்கும்போது மேலும் கதறிற்றே ஒழிய, அவன் கெஞ்சுதலுக்குக் கிஞ்சிற்றேனும் விடை கூறவில்லை.



அந்த அப்பாவிக் காதலன், பதறிக்கொண்டே ஆத்திரத்துடன் அந்தச் சிலம்பிடம் காரணம் கேட் டான்.

இறுமாப்புப் பிடித்த அந்தச் சிலம்பு, "நிறுத்து, நிறுத்து! ஆடி அசைந்து நடக்கும் அவளை முதலில் தடுத்து நிறுத்து!" என்று அடித்துக் கூறிற்று.

"அந்தத் திக்கிலே ஆபத்து சூழுமா?"

அவன் பரிதாபத்துடன் இப்படி வினவினன் 'எந்தத்திக்கிலும் அவள் நடந்தாலும் ஆபத்துதான்' சிலம்பு இப்படிப் சொன்னது.

"சீச்சீ! சுற்றி வளைக்காமல் உரிய விடையைச் சொல்கிருயா, இல்லையா?" இது அவன் கேள்வி.

நகைத்தது சிலம்பு.

"தெரிந்து கொள். அச்சு இல்லா மல் ஓடும் வண்டி ஆறு அடி தொலை வேனும் உருப்படியாய்ப்போய்ச் சேர்ந் ததுண்டா?" அப்படித்தான் உன் அருமைக் காதலியும் இப்படியே நடந்து சென்ருல், எதிர்பாராத பேரா பத்தை சந்திக்க வேண்டிவரும்?

"உன் உவமைக்கும் அவள் செய லுக்கும் என்ன தொடர்பு?" அவன் பரபரப்புடன் கேள்வியைத் தொடுத் தான்.

"இதோ பார்? பற்றுக் கோடில் லாத கொடி தரையிலே சாய்வ தில்லையா? அப்படித்தான் இந்தப் பாவையும் ஆகப்போகிருள்."

"ஆருடம் வேண்டாம்; அதற் குரிய காரணம் தேவை" அவனுடைய கொதிக்கும் மூச்சு இப்படிக்கேட்டது.

"உற்றுப் பார் உன் காதலியை! ஏன், நான் அவள் நடையை நிறுத்த வேண்டும் என்று அலறுவதன் கார ணம் புரியும். அச்சில்லா வண்டியாக அவள் இல்லையா? அவள் நடக்கிருள். பொல்லாத பெரும் பாரத்தைத் தூக்கி நடக்கிருள். ஆனுல், அதைத் தாங்க பற்றுக்கோடு வேண்டாமா? அவள் தனமெனும் பாரத்தைத் தாங் குவதற்கு அங்கே என்ன இருக் கிறது? இடையெனும் ஒன்று இருந் தாலல்லா அந்தப் பளுவைத் தாங்க முடியும். ஆகவே தான் அந்தக் கொடி இன்னும் சற்றுத் தொலைவு நடந்தால் முறிந்துவிடும் என்கிறேன் நான்! இதற்குப் பின் மயிலைப் போட் டிக்கு அழைக்கும் உன் நெஞ்சக் காவின் குயிலை இப்படியே நடக்க விட்டால் இழப்பு உனக்குத்தானே!' சிலம்பு இப்படிக் கூறி முடித்தது.

ஆபத்தை உணர்ந்த அந்தத் தலைவன் தாவி ஓடினன். சாயும் கொடிக்குத் தளராத பற்றுக்கோடு கிடைத்தது.

அவன் அவளைத் தாங்கிப் பிடித்துக் கொண்டான்; கொடி அவன்மேல் படர்ந்தது. சிலம்பு வெட்கத்துடன் வாயை மூடிக்கொண்டது.

'உபய தனமசையில் ஒடியுமிடை
நடையை ஒழியும் ஒழியுமென
ஒண் சிலம்பு

அபய மபயமென அலற நடை
பயிலும் அரிவை மீர்கடைகண்
திறமினே!

—கலிங்கத்துப் பரணி—

அன்புடையீர்!
வணக்கம்.

1-1-70 முதல் சென்னையில் நிலையாகத் தங்கி பணிபுரிந்து வருகிறேன். தாங்கள் கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொள் ளுங்கள்.

தில்லை வில்லாளன்
எம்.ஏ., பி.எல். எம்.பி.,
வழக்கறிஞன்.
எம். ஐ. ஜி. பிளாக் 'எல்',
பிளாட் 5,
பேர் ஷோர் எஸ்டேட்,
சென்னை-2
தொ. பே. எண் 76170.
அன்பன்,

எனது மற்றைய முகவரிகள்:
தொ. பே. எண் 387719,
178. நார்த் அவன்யூ.
நியூ டெல்லி.
*
தொ. பே. எண் 392,
'மீனட்சி இல்லம்',
சிதம்பரம்.

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்,
சென்னை-8. போன் : 82121 — 82122
தலைவர். ச. கு. சம்பந்தன், பி.ஏ., எம்.பி

தமிழ், எகிப்தியம், சால்டியம், ஈபரு, சீனம், பொரிசிகம், ஆரியம், கிரேக்கம், இலத்தின், அரபி, ஆகியவை பேசவும் எழுதவுமான பழைய நாகரிக மொழிகள்.

இந்தியா, இலங்கை பர்மா, மலாய நாடு, தென்ஆப்பிரிக்கா, நிக்கோபார், லட்சத் தீவுகள், அந்தமான், தமிழ்ப் பேசப்பட்ட நாடுகள்.

பல மொழிகள் ஐந்நூறு, ஆறுனூறு ஆண்டுகளில் தோன்றியவை.

இந்தி

மேல் நாட்டு இந்தி, கீழ் நாட்டு இந்தி பிகாரி என மூன்று பெரும் பிரிவுகள். அவற்றுள் பல சிறிய பிரிவுகள்.

கங்கையாற்றுக்கு மேற்கே பஞ்சாபுக்கு தென் கிழக்கே மேட்டுப் பாங்கான ஊர்களில் பேசப்படுவது பங்காரு.

வட மதுரையிலும் அதனைச் சூழ்ந்துள்ளவிடங்களிலும் பேசப்படுவது பிரஜ்பாஷா. கங்கை யமுனையாற்றிடையேயுள்ள நாடுகளிலும், தென் கிழக்கே உள்ள ஊர்களிலும் பேசப்படுவது கனோஜ். பந்தல் கண்டிலும் நருமதையாற்றையடுத்துள்ளவிடங்களிலும் பேசப்படுவது பந்தோலி.

டில்லி நகரத்திலும் அதனைச் சூழ்ந்துள்ள விடங்களிலும் பேசப்படுவது உருது. இவ்வாறு இந்தியாவின் வடமேற்குப் பகுதிகளில் பேசப்படும் இவ்வைந்து மொழிகளும் மேல் நாட்டு இந்தி வகையைச் சேர்ந்தது.

கீழ் நாட்டு இந்தி அவதி, பகேலி, அதஸ்கரி. அவதி என்பது தொன்மையுடையது என்கின்றனர், பிகாரி பிரிவில், மைதிலி, போஜ்புரி, மகரி என்பன அடங்கியுள்ளன. இப்போது வெளியாகும் இந்தி நூல்களெல்லாம் மைதிலியில்தான் எழுதப்படுகின்றது.

இந்தியில் மற்ற மொழிகள்,— இநதி. லநதி குஜராத்தி, ராஜபுதனி, குமேனி, கடுவாலி, நேபாலி, உரியா, பங்காளி, மராட்டி, கிஞ, காஸ்மீரி, கோகிஸ்தான், திராகி, பஷை, கலாஷா, கலாபடி, முதலான மொழிகள் உள்ளன.

இநதி உருது மொழிகள் மொகலாய மன்னர்கள் டில்லியில் ஆட்சி பீடத்தை அமைத்த பின்னர் தோன்றியவை.

1175ல் முகம்மத் கோரி வந்தான், 1340ல் முகம்மத் பின் துக்ளக் வந்தான். இவர்களுக்குமுன் பிராகிருத மொழி வெறும் பேச்சளவில் தான் இருந்தது. அந்த முகம்மதிய மன்னர்கள் வந்த பின் அவர்கள் கொண்டு வந்த அராபியா, பாரசீக மொழிகள் அந்த பிராகிருத மொழியில் கலந்து உருது என்ருயிற்று.

உருது என்ற சொல்லுக்கு பாசறை. படை வீடு என்று பொருள்.

அதன்பின் பல்லுஜிலால் என்பவரால் பிராகிருத மொழியில் கலந்திருந்த அரேபிய, பாரசீகச் சொற்களை எடுத்துவிட்டு அவற்றிற்கு பதில் சமஸ்கிருத சொற்களைச் சேர்த்து இந்தியை உண்டாக்கினர்.

இந்தி நூல்களின் வரலாறு

கி.பி. 1400 முதல் 1470. அதாவது 500 ஆண்டுகளுக்கு முன் இராமநந்தர் என்பவர் இராமாயண கதையை எழுதினர். அதற்குப் பெயர் ஆதிக்கிரந்தம்.

அவரது மாணுக்கருள் ஒருவரான காளிதாசன் 441 ஆண்டுகளுக்கு முன் காசியில் தோன்றினர். இவர் முகம்மதிய வகுப்பில் தோன்றியவர் என்று ஒருசாராரும், ஒரு பார்ப்பனகைம் பெண்ணுக்குப் பிறந்து, அவரால் கைவிடப்பட்டு பிறகு நீரு என்ற ஒரு முகம்மதிய நெசவாளியால் வளர்க்கப்பட்டார் என்று மற்ருெரு சாராரும் கூறுகின்றனர். சிலை வணக்கத்தையும் மூடப் பழக்க வழக்கங்களையும் கடுமையாகத் தாக்கி இருக்கிருர். அவர் பாடல்கள் எல்லாம் அவதி மொழியிலே பாடியிருக்கின்ருர்.

மைதிலி மொழியை பேசுகின்றவர்கள் அவர் பாடல்களைத் தெரிந்துக் கொள்வது கடினம். இவர் எழுதிய விப்ரமதிகி என்ற நூலில் தான் பார்ப்பனியத்தைக் கடுமையாகத் தாக்கியிருக்கின்ருர்.

கபீரின் மாணுக்கருள் ஒருவரான நானக் என்பவர் பஞ்சாபில் தோன்றி சீக்கிய மதத்தை யுண்டாக்கினர். அவர் இயற்றிய பாடல்கள் பஞ்சாபியும் இந்தியும் கலந்ததாயிருந்தது.

கி. பி. 481ல் தர்ப்பங்கா மாநிலத்தில் பிசபி என்ற ஊரில் வித்யாதரகர் தோன்றி மைதிலி மொழியில் கண்ணனுக்கும் இராதைக்கும் ஏற்பட்ட காதல் பாட்டுகளைப் பாடினர்.

இவைகளைப் பிறகு சைதன்யர் என்பவர் வங்காள மொழியில் மொழி பெயர்த்தார். இந்தி வங்காளிகளுக்

குத் தெரியாது என்பதுதானே இதன் பொருள்.

325 ஆண்டுகட்கு முன்பு துளசிதாசர் பாடிய இராம சரிதம் மானசம் இந்தி.

மராட்டி

கி. பி. 13ம் நூற்ருண்டிலிருந்த நாம தேவரென்பவர் மராட்டிய மொழியில் முதன் முதல் சில பதிகங்களை இயற்றினர். அவருக்குப் பின் வந்த தின்யா, நோபா, ஏகநாதர், இராமதாஸ் மகிபதி முதலிய புலவர்கள் விட்டுரை புராணம், பகவத் கீதை, இராமன் காதை, சமயக்கிரியை, பக்த விஜயம் போன்றவைகளைத் தழுவிய நூல்களும் பாடடுகளும் இயற்றினர்.

என்ருலும் மராட்டிய வேந்தனை சிவாஜி காலம் முதற் கொண்டு தான், அதாவது முன்னூறு ஆண்டுகடகு முன்புதான் மராட்டிய மொழி நூல் வடிவம் பெற்றது.

குஜராத்தி

கி. பி. 1681 ஆண்டிலிருந்த பிரம்மாநந்தபட ரேவா சங்கர், என்பவர்கள் நரசிங்கமேகதானு, மகாபாரத், என்பவைகளை எழுதிவெளியிட்ட பிறகு தான் குஜராத்தி மொழி தலை தூக்கியது.

கன்னடமொழி

கன்னட மொழி பேசுவோர் சமண சமயத்தினரும் வீரசைவ சமயத்தினரும் ஆவார்கள். கி. பி. 1071 ஆண்டில், 63 ஆண்டுகள் அரசு புரிந்த இராஷ்டிரகூட மன்னனை கிருபதுங்கனது வேண்டு கோளுக்கிணங்க ஸ்ரீ விஜயர் என்பவர் கவி ராஜ மார்க்கம் என்ற நூலை இயற்றி

ஞர். பசுவரைத் தலைவராகக் கொண்ட வீரசைவ ஆசிரியர்கள் பசுவ புராணம் என்பதை கி.பி 1369 லும் பத்மராஜபுராணம் என்பதை கி. பி. 1385லும் இயற்றினர், பிறகு இவ்விரு சமயத்தினரால் பாரதம், இராமாயணம், பாகவதம் முதலானவற்றை வட மொழியிலிருந்து மொழி பெயர்த்தனர்.

தெலுங்கு

கன்னடத்திற்கு அடுத்த படியாக பழமை வாய்நதது தெலுங்கு. இதை வழங்கியவர் ஆந்திரர் எனப் பட்டனர்.

சதவாகனர்க்குரிய ஆந்திரர் கி.மு. 180ஆம் ஆண்டிலேயே கடகம் அல்லது அமராவதி நகரிலிருந்து ஆட்சி புரிந்தனர் என்றும் கி. பி. 5ம் நூற்ருண்டில் இவர்கள் ஆட்சி முடிவடைந்தது என்றும் தெரிகிறது.

கி. பி. பதிஞேராம் நூற்ருண்டில் தோன்றிய நன்னய பட்டர் என்பவர் கி. பி. 1022 முதல் 1063 வரை பாண்ட சாளுக்கிய மன்னன் ராசராசேந்திரன் செய்த வேண்டுகோளுக்கிணங்க வட மொழியிலிருந்த பாரதத்தை ஆர்ணிய பருவம் வரையில் மொழி பெயர்த்து அளித்த காலந் தொட்டுத் தான் தெலுங்கு மொழி நூல் வடிவாயிற்று.

மலையாளம்

மலையாள மொழி 311 ஆண்டுகட்கு முன்பு முழுதும் தமிழாகவே இருந்தது. முதன் முதலில் இராமாயணத்தை மலையாள மொழியில் பாடியவா கன்ன சமணிக்கர். இவர் கி பி. 1650ல் இருந்தவர். இவருக்குப்பின் செருச்சேரி நம்பூரி என்பவர் கிருஷ்ண கிதா என்பதை இயற்றினர். இவர் பார்ப்பனராயிருந்தும் பெருமளவு வடச் சொல் கலவாத மலையாள சொற்களிலேயே இயற்றினர்.

ஆனல் 1658ல் இருந்த எழுதச்சன் என்பவர் எழுதிய பாரதத்தில்

அளவற்ற வட சொற்களைச் சேர்த்தார்.

தனித் தமிழ்

எழுநூறு ஆண்டுகளுக்குள்ளாக வடமொழியிலிருந்து மொழி பெயர்த்து எழுதப்பட்ட இராமாயணம் நள வெண்பா நைடதம், வில்லிபுத்தூரார் பாரதம் காசி காண்டம் கூர்ம புராணம். வாயு புராணம், தய புராணம் முதலானவைகள் தவிர அதற்கு முன் எழுந்த தமிழ் நூல்களில் வடச் சொற்கள் கலப்பில்லை.

ஒரு காலத்தில் இந்திய நாடு முழுதும் பேசப்பட்டு வநதது என்பதற்கு ஆதாரமாக கொண்டா எனப்படுவோர் பேசும் மொழி வங்காள நாட்டில் ராசமகால் மலைகளில் உரையும் மரவர் எனப்படும் மக்கள் பேசும் மொழியும், சோடா நாகபூரிலும் அதனையடுத்துள்ள இடங்களிலும் உள்ள ஒரா ஒனக் என்பவர்கன் பேசும் மொழியும், பெலுசிஸ்தானத்தில் பிராகுவியர் எனப்படுவோர் பேசும் மொழியும் தமிழ் மொழியின் திரிபுகளே என்கிருர் கால்டு வெல.

அண்ணுவின் காலம்

வடமொழிச் சொற்களை நீக்கி தனித் தமிழாக்கிய பெருமையும், தமிழன் தன் மானமுள்ளவன், ஆகவே அவன் வாழும் பகுதிக்கு தமிழகம் என்ற பெயரே சட்ட சம்மதம் பெற்று நீள் விசும்பு இருக்கின்ற காலம் வரை நிலவட்டும் என்று சட்டமாக்கிய திரமிக்கச் செயலுக்கும், தமிழர்களும், தமிழரல்லாத மற்ற இனமும் இந்த வீரார்ந்த செயலுக்குரிய அண்ணுவுக்கு வணக்கம் செலுத்தும். இனி வரும் கால காலங்களில் தமிழ்ச் சாகாது என்ற நிலையில் அதற்குச் சாகா வரமளித்து அதைத் தகர்க்க வந்த இந்தியை தான் வாழ்ந்த பகுதியில் கால் வைக்க முடியாமல் கால்களை ஒடித்த வீரமிக்க செயலுக்கும் அறிஞர் அண்ணுவே காரணமானுர் என்பதையும் ஒருபக்கம் எண்ணி மற்ருெரு புறம் அவர் இன்று நம்மிடையே இல்லையே என்பதையும் எண்ணும்போது நமது கண்ணீரைக் கால வெள்ளம் மாற்ருது என்று தோன்றுகிறது. வாழ்க அண்ணுவின் திருப்பெயர்.

படிதாண்டா பட்டத்தரசி

தில்லை வில்லாளன் எம்.ஏ., பி.எல்., எம்.பி.

படிதாண்டா. பட்டத்து ராணி யொருத்தியை உங்களுக்கு அறிமுகப் படுத்துகிறேன்.

மன்னர் மானியம் கூடாது என்று கூறுகிறார்களே—ஏன் தெரியுமா? அந்த மானியம் பெற்று, மகோன்னத வாழ்க்கை வாழ்ந்திடும் ஒரு மகாராசா வின் மகளின் கதைதான் இது—ஆனால். அவளின் பத்தினித்தனம், படிதாண்டியது மட்டுமல்ல பல மைல் தாண்டி மறைந்து விட்டது! ·

கபூர்தலா என்பது ஒரு சமஸ்தானம்—அதன் மகாராசா, ஜகஜித்சிங்.

அவரின் மகள்தான், நமது கதாநாயகி, இளவரசி கோவிந்கௌர்.

இவளிடம், ரஷ்யா நாட்டு காதரீன் எகிப்து நாட்டு கிளியோபாட்ரா பிச்சை வாங்க வேண்டும்.

கபூர்தலாவிலிருந்து பத்து கல் தொலைவிலுள்ளது சர்தார்பூர்—அதில் ஒரு கனவான் வீட்டுப் பிள்ளைக்கு நமது கதாநாயகி, மனைவியானாள். ஆனால், கணவன் தன்னுடனிருக்க வேண்டுமே தவிர, தான் கணவன் ஊரில் இருக்க முடியாது என்று நிபந்தனை பேரிலேயே திருமணம் செய்து கொண்டாள்.

மன்னர், இவர்கள் வாழ்வதற்கென்றே ஆறு அடுக்கு மாளிகை ஜாலோகானவை தந்தான். அதில் ஒரே ஒரு வழிதான்—யார் செல்ல வேண்டுமென்றாலும், டியோரி எனும் நுழைவு மண்டபத்தில் உள்ள காவல் தலைவனின் உத்தரவு பெற்றேயாக வேண்டும். மேல்மாடியில் உள்ள ஷாநிஷின் எனும் உப்பரிகை வழியாக இளவரசி ஊரை பார்ப்பார்—ஆனால் அவளை யாரும் பார்க்க முடியாது—அப்படித் திரையிடப்பட்டிருக்கும்.

இளவரசி கௌர், காமக்கிழத்தி கணவனோ, குரூபி, குறைமதி கொண்டவன், குடியன் கொஞ்ச நாட்களிலேயே, அவளுடன் வாழ முடியாத நிலையடைந்தான். தனித்து பர்தாரி எனும் பன்னிரண்டு கதவு மாளிகையொன்றில் வாழ்ந்து வந்தான். எப்போதோ ஒரு தடவை ஜாலோகானா செல்வான்—திரும்புவான். அவனுக்கு, இளவரசியின், இன்பலீலைகள் அத்தனையும் தெரியும்—தெரிந்து என்ன செய்ய? அவன் மனதிலே வைத்து மக்கிக் கிடந்தான்.

• • •

இளவரசி கௌர் தன் இளமையை வீணாக்கிவிடுவதில்லை. நாள் முழுவதும் ஷாநிஷினில் உட்கார்ந்து கிடப்பாள். யாரேனும், அழகனாய், உடற்கட்டு மிக்கவனாய் அவ்வழி சென்றால் போதும். அவளுக்கென்று இரண்டு அந்தரங்கத் தோழிகள்—மௌலோ, பசந்தி இவர்கள் மூலம், அழைக்கப்படுவான். இளவரசி விளையாடும், இன்ப பொம்மையாகி, பிறகு வெளியில் தூக்கி எறியப்படுவான். வெளியில் ஆள் கிடைக்க வில்லையென்றால், டியோரியில் காவல் நிற்கும் அழகான சிப்பாய்கள், காமப் பலி கொள்ளப் படுவர். இப்படி, தினம் ஒரு விளையாட்டு நடத்தி வந்தாள்.

• • •

ஒரு நாள் கூந்தலை கோதியபடி, ஷாநிஷினில் கோவிந்கௌர் நின்று கொண்டிருந்தாள். கபூர்தலா பிரதமர் நவாபகுலாம் கிலானி அவளைக் கண்டான்—கண்டவுடன் காதல் கொண்டான். கௌரை அடைந்தே தீருவது என்று தீவிர முடிவெடுத்தான்—அவன் ஆணழகன், டான்ஜுவான் போல, காட்சியளிப்பான்.

பிரதமர் தங்கி காரியம் பார்க்கும் மாளிகை திவான்கானா. இதில் இரண்டு அறைகள் பிரதமருக்கென தனித்து ஒதுக்கப்பட்டுள்ளன. மற்ற பிரதமர், அலுவலக நேரத்தில் மட்டுமே இங்கு தங்கியிருப்பர். ஆனால் கிலானி இரவு பகல் எந்நேரமும் இதில் தங்கி யிருந்தான்.

கௌரை சந்திக்கப் பல முறைகள் முயன்றும் முடியவில்லை—கடைசியாக அந்தரங்க தோழி மௌலோ மூலம் தகவல் அனுப்பினான். இளவரசியும் சந்திக்க ஒப்பினாள்.

ஆனால் சந்திப்பது எப்போது, எங்கு என்பதுதான் தெரியவில்லை, கடைசியில், திவான் கானாவிலிருந்து, ஜாலோகானாவுக்கு ஒரு சுரங்கப் பாதையே வெட்டி முடித்தான். அதன் மூலம் இளவரசி தினமும் வந்தாள். சுகம் தந்து, சுகம் பெற்று திரும்பினாள்—இங்கு அவளால் சிலமணி நேரங்களே இருக்க முடிந்தது.

கிலானி, அவளோடு, நாளெல்லாம் சல்லாபம் புரிந்திட, ஜலந்தருக்கு அழைத்துச் செல்ல திட்டமிட்டான்.

இளவரசி வாரத்தில் இரண்டு தடவை வெளியில் இரட்டைக் குதிரை பூட்டிய சாரட்டு வண்டியில் செல்வது வாடிக்கை. கிலானி, வாரக் கடைசியில், அப்படி, இரட்டைக் குதிரை வண்டியில் வெளியில் செல்வது வழக்கம். இக்குதிரை வண்டியை பயன்படுத்தி, அவளை ஜலந்தருக்கு கொண்டுபோகத் திட்டம் வகுக்கப் பட்டது.

இளவரசி, குப்பை கூட்டுபவள் வேடத்தில் வெளியில் வந்தாள். குதிரைச் சாணங்களை கூட்டி ஒதுக்கி விட்டு, அந்த வண்டியில், குதிரைகளுக்கு தீனி வைக்கும் பெட்டிக்குள்ளே ஒளிந்து கொண்டாள். குறிப்பிட்ட காலம் தாழ்ந்து. கிலானி வந்து சேர்ந்தான்—பிறகு சாரட்டு வண்டி, சப்ரகூட மஞ்சமாகி விட்டது.

இன்பம் வழிப்பறியாகிக்கொண்டிருந்தது. பிறகு, ஜலந்தரில், இவர்களுக்கென்று ஏற்பாடு செய்திருந்த மாளிகையில், கூடினர்—குலவினர்—குவலயத்தில் எத்தனை வகை இன்ப முறைகள் உண்டோ, அத்தனையும் செய்து மகிழ்ந்தனர் திரும்பினர்.

இப்படி, பல தடவைகள், ஜலந்தர் பயணம் நடந்து வந்தது.

இந்த காமக் களியாட்டம், திவான் ராம்ஜசுக்கு, அவனது அந்தரங்க காவலாளி அலிமுகமது மூலம் தெரிந்தது. அலிமுகமதுக்கு, மௌலோவின் காதலன், அரண்மனை பெரிய சமையற்காரன் அமானத்கான் மூலம் தெரிந்தது.

கிலானி மீது ஏற்கனவே அதிருப்தி—அவனை வெளியேற்ற காரணங்கள் கிடைக்கவில்லை—இந்த தகவல் கிடைத்ததும், கிலானியை கையும் களவுமாகப் பிடித்திடத் திட்டம் தீட்டப்பட்டது.

அதன்படி, அவர்களின் ஜலந்தர் பயணத்தின் நடுவில், சமஸ்தான காவல் படை மூலம் கைது செய்யப்பட்டனர். கிலானி பதவியிலிருந்து, நாடு கடத்தப்பட்டார். கௌர், அரண்மனையிலேயே சிறை வைக்கப்பட்டாள். கிலானி நிலை கண்டு அவள் கலங்கிட வில்லை. மகிழ்ந்திடவே செய்தாள்—இவன் போனால், இன்னொருவன் என்றிருந்து விட்டாள்.

• • •

கோவிந்கௌரின் காமக் களியாட்டத்தில், அடுத்த கதாநாயகன் கலோனல் வாரியம்சிங்.

இவன் ஆணழகன்—உடற்கட்டு மிக்க வீரன்—ஜாலோகானாவுக்கு, காவல் படையினரைக் கண்காணிக்க சென்ற இடத்தில், இளவரசியைக் கண்டான். இதயத்தை அவளிடம் விட்டுவிட்டு, வெளியில் வந்தான்.

அந்தரங்கத் தோழி பசந்தி மூலம், காதல் தூது விட்டான். தூது பலன் தந்தது.

ஆனால், இளவரசியை அடைய வழி தான் தெரியவில்லை.

ஒரே நுழைவு வாயில்—சென்றால், சிக்கிக்கொள்ள நேரிடும்.

ஆகவே, வேறொரு வழி தேடப்பட்டது. சுற்றுச் சுவரையொட்டி ஒரு கிணறு. அந்தக் கிணற்றில் வாளியின் மூலம் இறக்கி, பிறகு இளவரசி, தண்ணீர் இறைப்பதுபோல, அவனை மேலே தூக்கிக் கொள்வது என்று திட்டமிட்டு அதன்படி, வாரம்சிங் உள்ளே சென்றான்.

உலகத்து இன்பங்கள் அத்தனையும் அவர்கள் தினம் தினம் துய்த்தனர்.

இப்படி இரண்டு ஆண்டுகள் ஓடி விட்டன.

உள்நாட்டு மந்திரி தனீஷ்மண்ட், இதனைக் கண்டு கொண்டான். ஆகவே அவன் இவர்களைக் கண்டு பிடித்திட முடிவு செய்தான்.

வாரம்சிங் இரவு உள்ளே சென்றவுடன், காவல்படையுடன் ஒவ்வொரு கதவாக திறந்துகொண்டு உள்ளே சென்றனர்.

ஆனால், இதனை அறிந்த இளவரசி, தன் காதலன் வாரம்சிங்குடன் சுரங்க வழியில் ஒரு கிணற்றுக்குள்ளே பதுங்கி யிருந்தாள். படை, கடைசியில், இளவரசியின் அந்தப்புர அளவுக்கு சென்று சோதனையிட்டு ஏமாந்து திரும்பிவிட்டது.

பிறகு, இருவரும், கால்நடையாகவே, சுல்தான்பூரை அடுத்த கன்யான என்ற ஊருக்குப் போய்ச் சேர்ந்தனர். அது சமஸ்தானத்திற்கு கட்டுப்பட்டதல்ல—ஆகவே, சமஸ்தான படை அங்கு ஒன்றும் செய்ய முடியவில்லை.

இளவரசி, எல்லா உரிமைகளும் இழந்து விட்டாள். வாரம்சிங் உற்றார்—பெற்றார் அனைவராலும் வெறுத்து ஒதுக்கப்பட்டான. தங்கள் அன்றாட வாழ்க்கைக்கே உழைத்துப் பிழைக்க வேண்டியதாகிவிட்டது. அவன் ஒரு மண் குடிசையில் குடுத்தனம் ஆரம்பித்தான். விவசாயியாகி, தினம் நிலத்தில் வேலை செய்தான. இளவரசி கோவிந்கௌரோ, சாணம் பொறுக்கி விரட்டி தட்டி அவனுக்கு உணவு தயாரித்துக் கொடுத்தாள்.

அரண்மனையிலே ஆரம்பித்து, மண் குடிசையிலே முடிந்தது அவள் வாழ்வு—எல்லாம். செல்வச் செருக்கினால் ஏற்பட்ட காமக்கூத்து.

இப்படிப்பட்டவர்களைக் கொண்டது தான், ஏற்கனவே. சின்னஞ்சிறு சமஸ்தானங்கள்—அவர்கள் இன்னமும் அந்த நிலையில இருக்க மானியமாம—இனி இல்லையென்று, மக்கள் சக்தி முடிவு கட்டிவிட்டது! ○

வல்லூறுகள்

இரா. செழியன்



பிச்சாண்டிப் பிள்ளையின் பங்களாவில் முன் அறை. பெரிய மனிதர்களுக்குரிய பொருள்கள் அங்கு மிங்கும் இருக்கின்றன. சுவற்றில், மான் தலை, பழைய காலத்து ஓவியங்கள், சாய்ந்து தொங்கும் ஒரு புகைப் படம் முதலியன இருக்கின்றன. ரசம் போன நிலைக்கண்ணுடிக்கு அருகில் ஒரு சிறுத்தையின் உருவம் இருக்கிறது, மாடிப்படிக்கு அருகில், கைத்தடிகளும் குடையும் வைக்கப் பட்டுள்ளன. மத்தியில் வட்ட மேஜையும் சுற்றிலும் சோபாக்களும் உள்ளன.

(சமையற்காரன் சாமி பரபரப்புடன் வருகிறுன்.)

சாமி: இந்த டாக்டரை இன்னமும் காணுமே! டாக்டர்களே இப்படித் தான், ஆபத்து என்று சொல்லி அனுப்பினுல், உடனே வருவதில்லை, ஆள் அடங்கின பிறகு தான், இவர்கள் வருவார்கள்! ஐயாவுக்கு உடம்புக்கு என்னவென்றே எனக்குப் புரியவில்லை.... கண்விழி மாருடல், மூச்சு வாங்குவதைப் பார்த்தால் பயமாக இருக்கிறது! ஐயாவுக்கு ஒரு கண்டம் இருக்கிறதென்று, அன்றைக்கு வந்த ஜோஸ்யர் சொன்னுர். ஒரு வேளை கடைசி மூச்சுதானே, என்னவோ, உதவிக்கு என்று யாரையும் கூட கூப்பிடமுடியாது, எனக்குத் தெரிந்த முப்பது வருசத்தில், பர்மாவிலிருந்து எங்கள் ஐயா பிச்சாண்டிப் பிள்ளை வந்ததிலிருந்து, இந்த ஊரில் யாரையும் இவர் பார்க்கிறது இல்லை யாரும் இவரைத் தேடி வருவதில்லை. மாதத்துக்கு ஒரு தடவை பட்டணம் போய் வருவார்! அவ்வளவுதான்! யாரும் வீடுதேடி வந்தாலும், இரண்டு வார்த்தையில் திருப்பி அனுப்பிவிடுவார். அவருண்டு, பேப்பர் உண்டு, சுருட்டு உண்டு! ....ஆமாம் இந்த டாக்டர் வரப் போகிருரா, இல்லை! தனியாக இவரை விட்டுப்போகவும் முடியவில்லை? இந்த நாசமாய்ப் போன டாக்டர் வந்து........

(டாக்டர் கோபால் வருகிருர்.)

டாக்டர்: என்ன, சாமி! ஐயாவுக்கு உடம்பு சரியில்லையா?

சாமி: ஆமாம் வாருங்கள் சீக்கிரம்! மூச்சு பேச்சில்லாமல் இருக்கிருர்!

டாக்: எவ்வளவு நேரமாக அப்படி இருக்கிருர்?

சாமி: அரைமணி நேரமாக! இதற்கு முன் இப்படி இருந்ததே இல்லை! வந்து பாருங்கள், இப்படியேதான்!

டாக்: (சாமி பின்னுல் சென்று கொண்டே) எங்கே படுத்திருக்கிருர்? மாடியிலா?

சாமி: இல்லை பின்பக்க அறையில் தான்!

(சாமி செல்கிருன், டாக்டர் கோபால் பின் தொடருகிருர்)

(பாங்கர் சங்கரனும், மிராசுதார் மகாதேவனும் உள்வருகிருர்கள்)

சங்: எனக்கும் ஒரு அரைமணி நேரத்துக்கு முன்புதான் தெரியும், பிச்சாண்டிப் பிள்ளைக்கு மார்புவலி என்று! ஒரு வேலையும் ஓடவில்லை! உடனே புறப்பட்டு வந்தேன்.

மகாதேவன்: டாக்டர் கோபாலைத் தேடி ஆள் வந்தானும். டாக்டர் வீட்டில் எனக்குச் சொன்னுர்கள்.

சங்: பிள்ளைக்கு என்ன வயதிருக்கும்?

மகா: வயது வந்து....அவன் பர்மாவுக்குப் போகும்பொழுது, வயது பன்னிரண்டு, அங்கு ஐம்பது வருசம் இருந்தான், இங்கு வந்து ஐந்து வருசம், பார்த்துக்கொள்ளுங்களேன்! இப்பொழுது வயது அறுபத்தேழு இருக்கும்!

சங்: பர்மா போய் லட்சக்கணக்கில் பணம் சம்பாதித்துவிட்டு வந்திருக்கிருர். இங்கு அவருக்கு ஒட்டு உறவு யாரும் இருப்பதாகத் தெரியவில்லையே!

மகா: என்ன, அப்படிச் சொல்லி விட்டீர்கள்? நான் அவருக்குப் பங்காளி முறை வேண்டும்? என் தாத்தாவுடைய மைத்துனனின் சம்பந்தியும், பிச்சாண்டியின் பாட்டியின் மாமனுரின் பேரனும், பெரியப்பா பிள்ளை சித்தப்பா பிள்ளைகள் தான்!

சங்: சுற்றிவளைத்துதான் வருகிறது!

மகா: எப்படியோ உறவு உறவு தானே! அதனுல்தான் தாஞடா விட்டாலும், தன்சதை ஆடும் என்பதுபோல், பிச்சாண்டிப் பிள்ளைக்கு உடம்பு சரியில்லை என்றதும், எனக்கு உடனே வந்துபார்க்க வேண்டும் போலிருந்தது!

சங்: பங்களாவில் ஒருவரையும் காணுேம், ஒரே அமைதியாக இருக்கிறது.

மகா: ஒரு வேளை....

(டாக்டர் கோபால் வருகிருர், சாமி பின்னுல் வருகிருன்.)

சாமி: எப்படி இருக்கிறது?

டாக்: மோசமான நிலைதான், இந்த இரவு விடிந்தால்தான், நிச்சயமாக எதையும்கூற முடியும்? அவருடைய சொந்தக்காரர்கள் இருந்தால், இப்பொழுதே சொல்லி அனுப்பிவிடு!

சாமி: எனக்குத் தெரிந்து அவருக்கு யாரும் இல்லை!

மகா: அப்படிச் சொல்லாதே, அவருக்குஉறவு நான் இருக்கிறேன், டாக்டர்! இவனுக்குத் தெரியாது, எங்கள் உறவை நான்கூட இது வரை வெளியிட்டுக்கொள்வதில்லை!

டாக்: எனக்குக்கூட தெரியாது, நீங்கள் பிச்சாண்டிப் பிள்ளைக்கு உறவு என்று!

மகா: என்னுடைய பாட்டியும் பிச்சாண்டிப் பிள்ளையின் பாட்டியின் மாமாமிகளும், அக்கா தங்கைகள் மாதிரி!

சங்: என்ன, சற்றுமுன், உங்கள் தாத்தாவுக்கும் அவருடைய தாத்தாவுக்கும் உறவுமுறை என்று சொன்னீர்கள், இப்பொழுது உங்கள் பாட்டிக்கும் அவர் பாட்டிக்கும் என்று ஆரம்பிக்கிறீர்களே!

மகா: தாத்தா முறையில் உறவு என்ருல், பாட்டி முறையில் உறவு இருக்கக்கூடாது என்று விதி ஏதாவது இருக்கிறதா? சரி, டாக்டர்! இங்கே வாருங்கள்!

(டாக்டர் தனியாக அழைத்து)

நெருங்கிய சொந்தக்காரன் என்கிற முறையில் கேட்கிறேன், பிச்சாண்டிக்கு எப்படி இருக்கிறது?

டாக்: மோசமான நிலைதான், இப்பொழுது பிரஞ்கை இல்லை! நாடி பலவீனமாக இருக்கிறது!

மகா: இரவு தாங்குமா?

டாக்: சொல்ல முடியாது! சாமி! நான் ஒரு இன்ஜெக்ஷன் கொடுத்திருக்கிறேன், பக்கத்திலிருந்து பார்த்துக்கொள்! இன்னும் இரண்டு மணி நேரம் கழித்து, நானே வருகிறேன்!

(டாக்டர் போகிருர்.)

(சாமி உள்ளே போகிருன்.)

சங்: (அறையிலுள்ள அலங்காரப் பொருள்களை மேலும் கீழும் பார்த்து) சொத்து எவ்வளவு இருக்கும்?

மகா: இந்த வீடு ஒரு லட்சத்துக்கு மேல் பெறும், பக்கத்து ஊரில் நில புலம் இருக்கிறது, ஒரு இரண்டு லட்சம் மதிப்புப்போடலாம்!

சங்: பட்டணத்தில் ஏதோ கம்பெனி இருக்கிறதாம், அதில் பத்துலட்சம் போட்டிருக்கிறதாகக் கேள்வி!

மகா: என்ன கம்பெனி?

(காண்ட்ராக்டர் கன்னையாவும் மளிகை மன்னுர்சாமியும் வருகிருர்கள்.)

கன்னையா: சோடா உப்புத் தாயாரிக்கிற கம்பெனி!

(பேசிக்கொண்டிருக்கிற சங்கரனும், மகாதேவனும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்க்கிருர்கள்.)

மன்னுர்: பிச்சாண்டிப் பிள்ளைக்கு உடம்பு சரியில்லை என்று கடைவீதியில் பேசிக் கொண்டார்கள்! 'உடனே போய்ப்பார், நமது உறவு தானே!' என்று படுக்கையில் கிடக்கிற என் அம்மா சொல்லி அனுப்

உலகக் காவலன் உழவன்!

★

(உடுமலை பி. வி. இராமசாமி)

—0—

மண்ணோடு போராடிடும்தீரன்—அதனை
நற்ருயாக்கும் சீரமைந்த அறிஞன்
விண்ணுடிமண் கன்னியை வளமாக்கிடுவான்
நல்லுர வெருவிட்டுச் சத்தாக்கி வைப்பான்
காலப் பருவமதை எதிர்நோக்கி நிற்பான்—மண்ணைச்
சீராக்கி உதைத்துமே உயிருட்டமளிப்பான்
வளர்கோலத்தைத் தாயாகக் காப்பான்
மனிதவினம் வளர்பாலாம் தானியமும் பெருக்குவான்
அன்போடு வாழ்வளிக்க முதிர்கதிர்கள் அறுப்பான்
பொன்போல மணிகளைத் தேர்ந்தெடுத்துக் குவிப்பான்
துன்பம் தவிர்த்துமே உலகினைக் காத்திடும் நற்காவலன்
பால்மனத்தின் உழவன் உழைப்பினில் செல்வன்
யாவர்க்கும் உயிர்சக்தி அவன் கைச்சக்தி உயரினம்,

பினுர்கள்! உடனே புறப்பட்டு வந்தேன்!

சங்: தானுடா விட்டாலும் தன்சதை ஆடும்!

மன்னுர்: சரியாகச் சொன்னீர்கள்!

சங்: நான் சொல்லவில்லை! சற்று முன், மகாதேவன் பிள்ளைதான் அப்படிச் சொன்னுர்!

மன்னுர்: அப்படியா பிச்சாண்டிப் பிள்ளை உனக்கு உறவு என்று எனக்குத் தெரியாதே!

மகா: பிச்சாண்டிப் பிள்ளைக்கும் உனக்கும் உறவு என்றும் எனக்கும் இதுவரை தெரியாதே

கன்னையா: உங்கள் உறவு இருக்கட்டும், உள்ளே படுத்திருப்பவரின் உடல் எப்படியிருக்கிறது?

சங்: மோசமாக இருக்கிறதாம், டாக்டர் சொல்லிவிட்டுப் போனுர்!

மன்னுர்: திடீரென்று அப்படி என்ன வந்துவிட்டது! கன்னையா, வா! பார்த்துவிட்டு வரலாம்!

(மன்னுர்சாமியும் கன்னையாவும் உள்பக்கம் செல்கிருர்கள்.)

மகா: சங்கர்! நீ இங்கேயே இரு! நான் போய் வைத்தியர் சஞ்சீவியை அழைத்து வருகிறேன்! அவன் பார்த்தால். சரியாகச் சொல்லிவிடுவான், என்ன செய்கிறது,

சங்: எவ்வளவு நேரம் தாங்கும் என்று!

மகா: அப்படி இல்லை! எப்படியும் ஒருவருக்கு இரண்டு பேராகப் பார்த்தால், நன்ருகத்தெரியும்! நான் வருகிறவரை நீ இங்கேயே இரு! பிச்சாண்டிப்பிள்ளைக்கு வேறு யாரும் இல்லை, நாம்தான் கவனித்துக்கொள்ளவேண்டும்!

(போகிருர்)

சங்: பணம் இருக்கிறவன் படுத்துவிட்டால் எவ்வளவுபேர் கவனித்துக்கொள்ள வந்துவிடுகிருர்கள்! இவ்வளவு காலம், தன்னந்தனியாக, இந்தப் பிச்சாண்டிப்பிள்ளை வாழ்ந்துவருகிருர்! பெரிய பங்களா நிலபுலர், சொத்து, எல்லாம் இருந்தும், இப்படி ஏன் தூர விலகி இருந்துவிட்டார்?

(கன்னையாவும் மன்னுர்சாமியும் உள்ளிருந்து வருகிருர்கள்.)

மன்னுர்: மூச்சு வாக்குவதைப் பார்த்தால், பயமாக இருக்கிறது!

மாணு: செத்துப்போனவர் நமது மாமாவா அம்மா!

சங்: இல்லை, இன்னும் அவர் செத்துப் போகவில்லை, அதற்குள் சாகடிக்க வேண்டாம்!

மங்: அப்பாடா, புண்ணியவான் நன்ருக இருக்க வேண்டும்! எனக்குச் சேதி சொன்னவர்கள், உயிர் போய் விட்டது என்றே சொன்னுர்கள்! நல்லவேளை, என் அண்ணனை உயிரோடு பார்க்கக் கொடுத்து வைத்தவள் நான்!

பங்காரு: ஏனம்மா, பிச்சாண்டிப் பிள்ளைக்கு நீ தங்கையா? அவருக்கு உடன் பிறந்தவர்கள் எவ்வளவு பேர் என்று கூட இங்கு இருப்பவர்களுக்குத் தெரியாது!

கன்னையா: முகத்தில் ஒரு களை வந்துவிட்டது! எங்கள் வீட்டுக்குப் பக்கத்தில், ஒரு கிழவர் இருந்தார்! அவருடைய கடைசி காலத்திலும், இப்படித்தான் முகத்தில்களை கட்டியிருந்தது!

சங்: (அவர்கள் அருகில் வந்து) அதற்குத்தான் சவக்களை என்று சொல்வார்.

(பேசவந்த மன்னுர்சாமியும் கன்னையாவும் திடுக்கிட்டு பேசாமலிருக்கிருர்கள்)

(மங்கம்மா, அவளுடைய மகன்–பத்து வயதுச்சிறுவன்—மாணிக்கம் வருகிருர்கள். மங்கம்மா அழுது புலம்பி நிற்கிருள்)

மங்: ஐயோ! அண்ணனுக இருந்த நீ, இப்படிக் கைவிட்டுப் போவாய் என்று நான் நினைக்கவே இல்லை! மாணிக்கம்! உன் மாமாதான், இந்தப் பிச்சாண்டிப்பிள்ளை! இனிமேல் நீ யாரைப்போய் மாமா என்று கூப்பிடுவாய்!

மாணி: மதுரையில் ஒரு மாமா இருக்கிருர், இந்த மாமா யார் அம்மா!

பங்: இந்த மாமா ....வந்து....(சுற்றிலும் பலர் இருப்பதைப் பார்த்து தன் பேச்சை நிறுத்திக்கொள்கிருள்.)

மங்: கூடப்பிறந்த தங்கை இல்லை என்ருல் கூட. உறவு முறையில் அவரும் நானும் அண்ணன்—தங்கை முறை ஆகவேண்டும். என்னுடைய தாத்தாவும்....

சங்: பிச்சாண்டிப் பிள்ளையின் யின் பெரிய தாத்தாவும். சம்பந்தி முறையில் பங்காளிகளாக உறவு வந்திருக்கும்!

மங்: எப்படி இவ்வளவு சரியாகச் சொல்லிவிட்டீர்கள்!

பங்: கடந்த அரைமணி நேரத்தில் கிடைத்த அனுபவம்தான்!

மங்: பிள்ளை எங்கே படுத்திருக்கிருர், வா, மாணிக்கம்! போய், உன் மாமாவைப் பார்க்கலாம்!

(போகிருர்கள்.)

(ஒரு கிழவனும் கிழவியும் வருகிருர்கள்.)

கிழவர்: (கண்ணுடியைச் சரி செய்து வந்து....

பங்: சிரமம் வேண்டாம்: பிச்சாண்டிப் பிள்ளையின் பங்களாதான் இது....அவருக்கு உடல் நிலை மோசமாக இருக்கிறது. ஆபத்தான நிலைமை நீங்கள் அவருக்கு உறவு!

கிழவர்: ஆமாம்! என்னுடைய

பங்காரு: உங்களுடைய பெரியப்பாவும் பிச்சாண்டியின் சித்தப்பாவின் மாமனுரின் பங்காளி சம்பந்தியின் மைத்துனரின் அத்தை வீட்டுக்காரரும் தூரத்து உறவினர்கள்! அவ்வளவுதானே! இந்த வாசற்படியாகப் போகலாம்! உள்ளே அறையில் அவர் படுத்திருக்கிருர்!

(கிழவரும் கிழவியும் திகைத்துச்சிறிது நின்றுவிட்டு, சங்கரன் காட்டிய வாயற்படி வழியாக உள் செல்கிருர்கள்.)

(மகாதேவனும் வைத்தியம் சஞ்சீவியும் வருகிருர்கள்)

மகா: எப்படி இருக்கிருர்?

பங்: பிச்சாண்டி அப்படியேதான் இருக்கிருர், அவருடைய உறவினர்கள் தான் அவரைச் சூழ்ந்து நிற்கிருர்கள்?

மகா: உறவினர்களா?

பங்: ஆமாம்! அவருடைய தங்கை தங்கை மகன், அண்ணன், அண்ணி பிச்சாண்டியின் சொந்தக்காரர்கள் கூட்டம் வரவர பெருத்துக் கொண்டே போகிறது! இதோ! இன்னும் மூன்று பேர் வருகிருர்கள்!

(கோட்டும் சூட்டும் அணிந்த பெரியவர், அவருடைய மனைவி, மகள், மூவரும் வருகிருர்கள்.)

பங்: இந்தப் பக்கம் போங்கள்! வலது பக்கம் இரண்டாவது அறை

சேலம் கூட்டுறவு நூற்பு ஆலை லிமிடெட்,

கெ. எஸ். 1424.

அம்மாப்பேட்டை, சேலம்-3.

தந்தி: SALCOMILLS.

தொலைபேசி: நிர்வாக இயக்குனர்: 2040
அலுவலகம்: 2080

★

அங்கீகாரமளிக்கப்பட்டுள்ள பங்கு மூலதனம்	ரூ. 60.00 லட்சம்.
செலுத்தப்பட்டுள்ள பங்கு மூலதனம் ...	ரூ. 29.14 லட்சம்.
தமிழ்நாடு அரசினரால் செலுத்தப்பட்டுள்ள பங்கு மூலதனம் ...	ரூ. 14.74 லட்சம்.
கதிர்களின் எண்ணிக்கை ...	14.080 கதிர்கள்.

60 80 & 100 கெ. நூல்களும், 60 & 80 கெ. கோன் ரகமும் தரமான பஞ்சிலிருந்து சிறந்த முறையில் தயாரிக்கப்படுகின்றன. எங்கள் கோன் ரகம் பம்பாய் மார்க்கெட்டில் விற்பனையாகி வருகிறது. ஆண்டு 1க்கு ரூ. 50 லட்சத்துக்குமேல் விற்பனையாகிறது. பங்குதாரர்களுக்கு 9 சதவிதம் டிவிடெண்டு கொடுக்க தமிழ்நாடு அரசினர் பிரத்தியேக சலுகை வழங்கியுள்ளனர். பங்கு 1க்கு விலை ரூ. 100/. பிரவேசக் கட்டணம் ரூ. 2/. இதர விபரங்களுக்கு ஆலையின் நிர்வாக இயக்குனருக்கு விண்ணப்பிக்கவும்.

T. K. A. திவான் முகமது. B. A. (Hons.)
நிர்வாக இயக்குனர்.

K. ஜெயராமன், B. A., M. L. A.,
தலைவர்.

யில் உங்கள் உறவினர் பிச்சாண்டிப் பிள்ளை படுத்திருக்கிறார்.

அவர்கள் உள்ளே செல்கிறார்கள்.)

மகா: முன்பின் பார்க்காமலே, உறவினர் என்று எப்படிக் கண்டு பிடித்து விட்டாய்?

சங்: எல்லாம் ஊகம்தான்!

(வைத்தியர் சஞ்சீவி அறையிலிருக்கும் அலங்காரப் பொருள்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்)

மகா: வைத்தியரே! வாரும், நோயாளியைப் பார்க்கலாம்!

சஞ்சீவி: (சங்கரனிடம் வந்து)எங்கே கை நீட்டுங்கள்! (சங்கரனின் கையைப் பிடித்துப் பார்க்கிறார்)

மகா: நோயாளி இவரல்ல, உள்ளே படுத்திருக்கிறார், வாரும்.

(மகாதேவனும் வைத்தியர் சஞ்சீவியும் உள் செல்கிறார்கள்.)

(டாக்டர் கோபால் வருகிறார், அவருடன் துணையாளர் டாக்டர் சேகரன் இருக்கிறார்)

டாக்: சங்கர்! பிச்சாண்டி எப்படி இருக்கிறார்?

சங்: உள்ளிருந்து அழுகுரல் வரவில்லை! எனவே இன்னமும் உயிர் ஓடிக்கொண்டிருக்கிறது என்று பொருள்!

டாக்: மற்றுமொரு ஊசி போட்டு வைக்கிறேன்! கடைசிவரை நம்பிக்கை இழக்கக் கூடாது! முடிந்த வரை பார்க்கவேண்டியதுதான்! உள்ளே என்ன கூட்டமாக இருக்கிறது?

சங்: உறவினர் கூட்டம்!

டாக்: யாராக இருந்தாலும் உள்ளே இவ்வளவு கூட்டம் கூடாது!

(டாக்டர்கள் இருவரும் உள்ளே போகிறார்கள். உள்ளிருந்த கூட்டம் வெளிவந்து சோபாக்களிலும், மற்ற இடங்களிலும், தனித்தனியாக பிரிந்து கொள்கிறது.)

(மகாதேவனும் வைத்தியர் சஞ்சீவியும் முன்னால் வந்து தனியாகப் பேசுகிறார்கள்)

மகா: கை பிடித்துப் பார்த்தீரே, எப்படி இருக்கிறது?

சஞ்: எங்கள் சாஸ்திரத்தில் இதைப் பற்றி தெளிவாக கூறப்பட்டுள்ளது.

'நாடி ஒன்று தடைப்பட்டு மிக ஆடி வந்து நின்று....

மகா: உமது பாட்டு இருக்கட்டும். ஆள்பாடு எப்படி யிருக்கிறது? அதைச் சொல்லும் போதும்?

சஞ்: ரொம்ப சிக்கலான நோய்! மருத்தூர் பண்ணை மாயாண்டிப் பிள்ளை இருந்தாரே, தெரியுமா? அவருடைய பெரிய தகப்பனார் இரண்டு வருஷங்களுக்கு முன்....

மகா: படுத்த படுக்கையாக இருந்தார், யாரோ ஒரு மூடன் உம்மைக் கூப்பிட்டுப் பார்த்திருப்பான்!

சஞ்: மருத்தூர் பண்ணையே என்னை வந்து கூப்பிட்டுப் போனார், அவரையா 'மூடன்' என்று சொல்கிறீர்?

மகா: அவரை மூடன் என்று சொல்லவில்லை. என்னைத்தான் மூடன் என்று சொல்லிக் கொள்கிறேன்!

சஞ்: (மகாதேவனின் கையைப் பிடித்து) அப்படியும் சொல்ல முடியாதே! பித்தம் கொஞ்சம் கூடியிருக்கிறது, வாதம் மத்தியமாக இருக்கிறது....

மகா: (கையை உதறிக்கொண்டு) என் கையைப் பார்த்தது போதும். பிச்சாண்டிப் பிள்ளையின் நிலை எப்படி இருக்கிறது!

சஞ்: இந்த நோயைப் போக்கக் கூடிய சூரணம் என்னிடமிருக்கிறது!

மகா: சூரணம் இருக்கட்டும், நோய் எப்படி இருக்கிறது!

சஞ்: நான் சொல்லவந்தேன், நீர் தான் பேச்சை மாற்றி விட்டீர்கள்! மருத்தூர் பண்ணையின் பெரிய தகப்பனார்....

மகா: உம்மிடம் யாராவது வைத்தியத்துக்கு வந்தால், வைத்தியம் போய், பைத்தியம் பிடித்துவிடும்!

சஞ்: பைத்தியத்துக்குக்கூட என்னிடம் பிரமாதமான மருந்து இருக்கிறது!

மகா: சீக்கிரம் சொல்லும், பிச்சாண்டியின் நிலைமை எப்படி?

சஞ்: இன்னும் நான்கு நாழிகையில் ஒரு கண்டம்....

(டாக்டர் கோபால் வெளி வருகிறார். கூட்டம் ஆவலுடன் அவரைச் சூழ்ந்து கொள்கிறது.

மகா: எப்படி இருக்கிறது?

மன்: டாக்டர், டாக்டர்!

மங்: சொல்லுங்கள், சொல்லுங்கள்

கிழவ: காலைக்குள் நல்ல நேரம், பிறகு பொல்லாத நேரம் வந்து விடும்!

டாக்: இன்னும் ஆபத்தான நிலைமைதான், எந்த நேரமும் எதிர்பார்க்க வேண்டியதுதான்!

சங்: நீங்கள் அருகிலேயே இருந்தால் எங்களுக்கு ஒரு நம்பிக்கை!

டாக்: பக்கத்தில் டாக்டர் சேகரன் இருக்கிறான். அவன் பார்த்துக் கொள்வான்!

(போகிறார்.)

(மகாதேவனும் வைத்தியர் சஞ்சீவியும் வேறு வழியாக வெளி செல்கின்றனர்.)

மன்னார்சாமி: கன்னையா! டாக்டர் சொல்வதைப் பார்த்தால்....

கன்னையா: ஒரு மணி, இரண்டு மணி நேரம் கூடத் தாங்காது போலிருக்கிறது!

மன்: கடையை அப்படியே விட்டு வந்தேன்!

கன்: உன் பிள்ளைதான் கடையில் இருக்கிறானே, எல்லாம் பார்த்துக் கொள்வான்!

மன்: கன்னையா! ஒரு சந்தேகம்! திடீரென்று பிச்சாண்டியின் உயிர் போய் விட்டால், அவரது சொத்து முழுவதும் யாருக்குச் சேரும்!

கன்: யார் கொள்ளி வைக்கிறார்களோ, அவர்களுக்குத்தான் போய்ச் சேரும்!

மன்: அப்படியென்றால், நான் அவருக்குக் கொள்ளி வைக்கலாமா, அல்லது என் பிள்ளையை விட்டு வைக்கச் சொல்லலாமா?

கன்: உன் பிள்ளை வைக்கக்கூடாது உன் பிள்ளை கொள்ளிச் சட்டி எடுத்தா,நீயே இறந்து போனதாக அர்த்தம்!

மன்: அப்படி என்றால், நானே கொள்ளிவைக்கத் தயாராக வேண்டியதுதான்! கடைசி காலத்தில் பிச்சாண்டிப் பிள்ளைக்கு நாம்தான் எல்லாம் செய்ய வேண்டும்!

(மகாதேவன் உள் வருகிறார். சங்கரனுடன் ஏதோ பேசுகிறார்.)

(டாக்டர் சேகரன் உள்ளிருந்து வருகிறார்).

சேக: மன்னிக்க வேண்டும், சத்தம் அதிகமாக யிருக்கிறது!

மகா: இவ்வளவு பேர்கள் இங்கு கூட்டமாக இருப்பது சரியல்ல!

முக்கியமான ஓரிருவர் தவிர, மற்றவர்கள் வீட்டுக்கு போவதுநல்லது!

மன்: ஆமாம், அதுதான் சரி! முக்கியமான ஓரிருவர் தவிர, மற்றவர்கள் வீட்டுக்குப் போகலாம்; நாங்கள் சேதி சொல்லி அனுப்புகிறோம்

மங்: நீங்கள் எல்லோரும் சென்று விடுங்கள்? நானும் என் பையனும் பார்த்துக் கொள்கிறோம்!

கிழ: கூட்டம் இல்லாமலிருப்பது நல்லது! எனக்குக் கூட சத்தம் அதிகம் இருக்கக் கூடாது!

(எல்லோரும் ஒருவரையொருவர் பார்த்தபடி உட்கார்ந்து விடுகின்றனர்.)

(சாமி பரபரப்புடன் வெளி வருகிறான்.)

சாமி: ஐயாவுக்குப் பிரஞ்கை வந்து விட்டது! 'வக்கீல்', 'வக்கீல்!' என்று கேட்கிறார்!

மகா: வக்கீல்!

மன்: எதற்கு?

கன்: வேறு எதற்கு? உயில் எழுத

மங்: உயில்! என்னை மறந்து விடப் போகிறார்!

(எல்லோரும் உள்ளே போக முயல்கின்றனர். டாக்டர் சேகரன் வாயிற்படியில் மறைத்துக் கொண்டு நிற்கின்றார்.)

சேக: யாரும் உள்ளே வரவேண்டாம்! அவருக்கு அதிர்ச்சிகூடாது! நினைவு மீண்டும் தவறி விடலாம்!

(உள்ளே போய் விடுகிறார்.)

மகா: வக்கீல் கேட்டாரே! போய் ஒரு வக்கீலை நான் அழைத்து வருகிறேன்!

மன்: ஒரு வக்கீலை நீ அழைத்துவர வேண்டாம்! உமக்கு வேண்டிய வக்கீலாகப் பார்த்து நீர் கொண்டு வந்து விடுவீர்! நான் போய் வக்கீல் வரதனை அழைத்து வருகிறேன்!

மகா: வக்கீல் வரதனா? வேடிக்கையாக இருக்கிறதே! வரதன் ஒரு கிரிமினல் வக்கீல், அதிலும் கள்ளச் சாராயக் கேசில், ஜாமின் எடுக்க வேண்டுமானால் கூப்பிடலாம்! இதில் சிவில் சம்பந்தமான ஞானம் இருக்கவேண்டும்!

மன்: சரி. வக்கில் கங்காதரனைக் கூப்பிட்டு வருகிறேன்!

மகா: கங்காதரன், அவருடைய அம்மா சாம்பலைக் கங்கையில் கரைக்க, காசிக்குப் போயிருக்கிறார் திரும்பி வர இன்னும் ஒரு வாரமாகும்!

(வக்கீல் சுந்தரம் வருகிறார்.)

மகா: வக்கில்!

மன்: இவர் எப்படி வந்தார்?

சாமி: நல்ல வேளை நீங்களே வந்து விட்டீர்கள்! 'வக்கீல் வக்கீல்!" என்று ஐயா கேட்கிறார், நீங்களே வந்து பாருங்கள்!

சுந்: பிச்சாண்டிக்கு என்ன செய்கிறது? ரொம்ப மோசம் என்றார்களே!

(சாமியும் வக்கீல் சுந்தரமும் உள் செல்கிறார்கள்.)

மன்: கன்னையா! இப்பொழுது உயில் எழுதினால், அதில் என்ன எழுதுவார்கள்?

கன்: யார் யாருக்குத்தான் சொத்து சேரவேண்டும் என்று அதில் எழுதுவார்கள்!

மன்: இந்த வக்கில் அவர் சொல்கிறபடி எழுதாமல், வேறு யார் பேரை

யாவது எழுதிவிட்டால் என்ன செய்வது?

கன்: பக்கத்தில் வேறு சாட்சி இருக்க வேண்டும்!

மன்: எதற்கும் நானும் உள்ளே போகிறேன்!

மகா: மன்னர், இப்படி அவசரப் படாதே!

மன்: மகாதேவனு, நீ அவசரப்படாமல் இருந்தால் போதும்!

(வக்கீல் சுந்தரம் வெளி வருகிருர். எல்லோரும் வக்கீலைச் சூழ்ந்து கொள்கிருர்கள்.)

சுந்: வெளியில் யார் இருக்கிருர்கள்?' என்று கேட்டார், பிறகு பதில் சொல்வதற்குள் தூங்குவது போலிருக்கிருர்! நினைவு வந்து வந்து போகிறது!

மன்: மறுபடியும் நினைவு வரும் பொழுது கேட்டால். நான் இருப்பதாகச் சொல்லுங்கள்!

மகா: நான் இருப்பதை மறந்து விடாதீர்கள்!

மங்: நானும் என் மகனும் இருப்பதை அவரிடம சொல்லாவிட்டாலும். நீங்கள் எழுதும் பொழுது மறந்துவிடாதீர்கள்!

கிழவர்: கீழத்தூர்க்காரர் என்று சொல்லுங்கள் போதும்!

ஒருவர்: பர்மா பக்கத்து வீட்டுத் தம்பி நான்தான்!

மகா: சுந்தரம்! இப்படி வாரும்! (சுந்தரத்தைத் தனியாக அழைத்து மகாதேவன் பேச முற்படுகிருன், எல்லோரும் ஓட்டுக் கேட்க சுற்றி வந்துவிடுகிருர்கள்.)

மகா: சுந்தரம்! ஒரு வாரத்துக்கு முன் சொத்து விபரங்களையெல்லாம் உன்னிடம் குறித்துக் கொடுத்து விட்டாராமே! உயில் மட்டும் இன்னும் ஏழுதவில்லையாமே!

சுந்: உமக்கு யார் சொன்னது?

மன்: (முன் வந்து) வக்கீல் சார்! இப்படித் தனியாகப் போய் ஒருவருடன் பேசுவது தப்பு! என் பெயர் விடுபட்டுப் போனுல் பொல்லாதவனுக இருப்பேள்!

சுந்: அவர் சொல்வதை நான் எழுதப் போகிறேன்! இவ்வளவு பேர்கள் திடீரென வந்திருக்கிறீர்களே! நீங்களெல்லாம் யார் யார்? அவருக்கு எந்த வகையில் உறவு?

மகா: நான் அவருக்கு பங்காளி. முறை வேண்டும்.

(சுந்தரம் தனது ஏட்டில் எழுதிக் கொள்கிருர்.)

மன்: நான் அவருக்குத் தம்பி முறை வேண்டும்!

மங்: நான் தங்கை முறை ஆக வேண்டும்! என்ன ஐயா! அப்படிப் பார்க்கிருய்? நான் சொல்வதில் நம்பிக்கை இல்லையா? எந்தக் கோவிலில் வேண்டுமானுலும்வந்து சத்தியம்!

சுந்தரம்: நீ சொல்வதே போதும்! கோவிலுக்கு வேறு போக வேண்டாம்!

கிழ: நான் அவருக்கு சின்னம்மா மகன் முறை என் பெயர் கிழத்தூர் பழனியப்பப் பிள்ளை! என் பெண்சாதி பெயர் வள்ளியம்மா! இரண்டு பெயர்களையும் எழுதிக் கொள்ளுங்கள்!

ஒருவர்: என் பெயர் பரமசிவம், என் மனைவி பெயர் பார்வதி, என் பையன்கள் பெயர் கணேசன், முருகன்! உறவு முறை....எப்படி வேண்டுமானுலும் வைத்துக் கொள்ளலாம்! இங்கு இருப்பவர்களிலே நான்தான் அவருக்கு நெருங்கிய உறவு! அவருக்கு அடுத்த வாரிசு நான்தான்!

மகா: அடுத்தபடி நீ சொல்வது? யார் யாரோ உறவு கொண்டாட வந்து விட்டார்கள்?

மன்: வக்கீல், சார்! மறந்து விட்டேன்! என் பெயர் மளிகை என். ஆர் மன்னர்சாமி. இன்னொரு மன்னர்சாமி விறகுக் கடை வைத்திருக்கிருன், அவன் போட்டிக்கு வந்து விடப் போகிருன்!

சுந்: மொத்தம் பத்துப் பேர்கள் இருக்கிறீர்கள், அவருடைய நெருங்கிய உறவு! யாரையும் விட முடியாது! அவருக்கு இருக்கிற சொத்து, இருந்த பங்களா ஒன்றரை லட்சம்!

மகா: இரண்டு லட்சம் பெறும்!

சுந்: (குறித்துக் கொண்டு) சரி, இரண்டு லட்சம் பெறும்! பக்கத்தூர் நிலம்.

மன்: இரண்டரை லட்சம் பெறும்!

கன்: பட்டணத்தில் சோடா உப்புக் கம்பெனி ஒரு நான்கு லட்சத்துக்குக் குறையாது!

சுந்: கொடைக்கானல் பங்களா ஒன்றரை லட்சம் மதிப்புள்ளது! மொத்தமாகப் பார்த்தால்.

மன்: பத்துலட்சம்!

மங்: பத்து பேர் இருக்கிறேம், ஆளுக்கு ஒரு லட்சம்!

மகா: சரிதான்! எனக்கு ஒருலட்சம் உனக்கும் உன்மகனுக்கும் சேர்த்து இரண்டு லட்சம்! பரமசிவம், பார்வதி, அவருடைய இரண்டுபிள்ளைகள் அவர்களுக்கு நான்கு லட்சம்! இதை நான் ஒப்புக்கொள்ள முடியாது! அப்படிப் பார்த்தால், எனக்கு இரண்டு பெண்டாட்டிகள், ஆறுபிள்ளைகள், நான்குபெண்கள், ஐந்து, பேரன்கள் இருக்கிறர்கள்! முறை என்ருல் எல்லோருக்கும் ஒன்ருக இருக்கவேண்டும்!

சுந்: பிச்சாண்டியின் சொத்து பத்து லட்சம்! அதை அவர் சொல்கிறபடி பிரித்தாக வேண்டும்!

சங்: வக்கீல் சுந்தரம்!

சுந்: இவ்வளவு நேரமாகப் பேசாமலிருந்தீர்! நீரும் பங்கு கேட்க வந்துவிட்டீரா?

சங்: உறவுமுறையால் பங்கு கேட்க வரவில்லை! ஆனுல் இந்தசொத்தில் எனக்கும் சேரவேண்டிய தொகை இருக்கிறது!

சுந்: எப்படி?

சங்: கடனுக! என்னிடமிருந்து பிச்சாண்டிப்பிள்ளை கடன் வாங்கியிருக்கிருர்!

மன்: சரி, கடனைத் தந்துவிடுகிறேம்! கடன் போக பாக்கியை பிரித்துவிடலாம்!

சங்: அதுசரி, ஒப்புக்கொள்கிறேன்! பாக்கியுள்ளதை நீங்களெல்லாம் சரிசமமாக அனுபவிக்க வேண்டும்! சம்மதம்தானே!

மன்: சம்மதம்!

மங்: சரி!

பழ: சம்மதம்.

பரம: சரி! கடன் போக பாக்கி எவ்வளவு வருகிறது!

சங்: ஐந்துலட்சம் பாக்கி வரும்!

மன்: அவ்வளவுதானு? முடியாது!

மங்: ஏதோ, வந்தவரைக்கும் சரி, கொடுத்துவிடுங்கள்!

சங்: அவசரப்படாதீர்கள்! உள்ள சொத்து — பத்துலட்சம், அவர் எனக்குத் தரவேண்டிய கடன் பதினைந்துலட்சம், ஆகப்பாக்கி ஐந்து லட்சம்! அவருடைய சொத்து வாரிசாக உள்ள நீங்கள் எல்லாம் பொறுப்பேற்று, அந்தக்கடனைக் கட்டிவிடுங்கள்! சயமாகப் பிரித்துக்கொண்டு கட்டினுலும் சரி, மொத்தமாகச் செலுத்தினுலும் சரி! நெருங்கிய உறவு! கைவிட்டுவிடாதீர்கள்!

மகா: என்ன இது? புதிய செய்தியாக இருக்கிறதே?

மன்: பிச்சாண்டிப் பிள்ளைக்குக் கடன் இருப்பதாக என்னுல் நம்ப முடியவில்லை!

பழ: ஆமாம்! கடன் இருக்கவே இருக்காது!

பர: கடன்கொடுத்ததற்குப் பத்திரம் இருக்கிறதா?

மன்: ஆமாம்! பத்திரம் வேண்டும்!

சங்: பத்திரம் என்னிடம் பத்திரமாக இருக்கிறது, இதோ! ஆனுல்.... உங்கள் எல்லோரிடமும் காட்டினுல் ஆத்திரத்தில் கிழித்தாலும் கிழித்து விடுவீர்கள்!

பழ: வக்கீல்பார்த்துச்சொல்லட்டும்!

சங்: வக்கீல்—சார்! இதை நன்ருகப் பார்த்துச்சொல்லுங்கள்!

(தன் பையிலிருந்து சில காகிதங்களை எடுத்துக்காட்டுகிருர். சுந்தரம் அவற்றைப் பார்க்கிருர்.)

மகா: என்ன?

மன்: கடன் இருக்கிறதா?

பர: உண்மையா?

சுந்: உண்மைதான்! பதினைந்து லட்சம் கடன் இருக்கிறது! இருந்தாலும் பாதகமில்லை! நீங்களெல்லாம் நெருங்கிய உறவு! அண்ணன், தம்பி முறை, அவருடைய கடனை அடைக்கக்கடமைப்பட்டவர்கள்! என்ன! மன்னர்சாமி, மளிகை என். ஆர். மன்னர்சாமி! எங்கே கிளம்பிவிட்டாய்!

மன்: கடையை மூடப்போக வேண்டும்! போய்விட்டு வந்து விடுகிறேன்!

(போகிருர் மற்றவர்கள் தயங்கிக் கொண்டு நிற்கிருர்கள்

"யார் இவர்கள் எல்லாம்?"
என்று குரல் பின்னுலிருந்து
வருகிறது!

கதவு அருகில் தள்ளாடிய
வண்ணம் பிச்சாண்டி நிற்கிருர்.
டாக்டர் சேகரன் பின்னிருந்து
வருகிருன்.

கூடியிருந்த கூட்டம் கலைந்து
சென்று விடுகிறது.

சுந்தரம், சங்கரன் இருவர்
மட்டும் நிற்கிருர்கள்.)

சுந்: என்ன பிள்ளை! உங்களுக்கு உடம்பு என்ன! ஓரே பயமாகப் போய்விட்டதே!

பிச்: (ஒரு சோபாவில் அமர்ந்து) மயக்கமாக இருந்தது! அவ்வளவுதான்! என்ன நடந்தது என்றே தெரியவில்லை!

சுந்: தெரியாமல் இருந்தவரை நல்லதுதான்!

பிச்: யாரோ இங்கு கூட்டமாக இருந்தது மாதிரி இருந்தது!

சுந்: உறவுமுறை கொண்டாடி வல்லூறுகள் வட்டமிட்டன! பிறகு பறந்துவிட்டன!

பிச்: சங்கரன் கையில் ஏதோ வைத்திருக்கிருரே, என்ன அது?

சங்: இது வெறும் கடை வாடகைப் பத்திரம்! சமயத்துக்கு உதவியது!

டாக்: பலவீனமாக இருக்கிருர்! சற்று ஓய்வு எடுக்கவேண்டும்!

சுந்: ஒரு நாடகம் முடிந்தது, எல்லோரும் போகவேண்டியதுதான்.

(சுந்தரமும் சங்கரனும் புறப்படுகிருர்கள்.

பிச்சாண்டி பிள்ளைக்கு
மருந்து கொடுக்க டாக்டர்
சேகரன் வருகிருன்.
காட்சி முடிகிறது.)

Phone: 4540 Post Box: 226

VICTORY TUTORIAL COLLEGE,
(Near U. C. High School)
MADURAI - 1.

BEST COACHING FOR:

B. A., B. Sc., B.Com. - Part I & III A & B.

PRE-UNIVERSITY — ALL PARTS

MADURAI & MADRAS 'VARSITIES

Tamil & English Medium.

S. S. L. C. (XI Std.) & MATRICULATION
(Personal & Postal Tution)

- Separate Section for Girls in Separate premises.
- Decent Hostels and Excellent Laboratory.

R. JEGADEESAN. B. A. (Hons.),
Principal.

சீரோங்கும் குறளறம்

கலைமாமணி
ப. கண்ணன்

(இசை — சிந்து)

1. வள்ளுவர் காட்டிய தெள்ளுதமிழ்நெறி செல்லப்பா
வாய்மை—சொல்லப்பா
வாழ்வை—வெல்லப்பா
வளமானது நிறைவாகிட மனமோடுயிர் கனிவாகிட
வாய்த்த பொழுதெலாம் கல்லப்பா—கற்று
வலிமையோ டதனிலே நில்லப்பா!

2. அறம்பொரு ளோடின்பத் திறம்பெற நல்வழி காட்டுமே
அன்பைக்—கூட்டுமே
அறிவை ஊட்டுமே
அழகானது இதுதானென தெளிவாகிய ஒளியேதரும்
ஆற்றலை உனதுள்ளம் ஈட்டுமே—ஈட்டி
அருளற்றக் கேடுகளை ஓட்டுமே!

3. மதங்கள் சமயங்கள் மார்க்கமெலாம் போற்றி யேற்பது
மனதுள்—பார்ப்பது
மாண்பைச் சேர்ப்பது
மதியாலுறு விதிவென்றிட வினையானது புகழ்மண்டிட
மனைமாட்சி யரசியல் காப்பது—காதது
மனிதனை மனிதனுய் வார்ப்பது!

4. செயத்தக்க செய்யாமை கெடுமெனப் புகன்றாரே வள்ளுவர்
சிறப்பை—விள்ளுவர்
சிந்தையைக்—கிள்ளுவர்
செயலானது எளியோர்குடி உயர்வேபெற இனிதாகிட
செறிந்திட்ட மடமையைத் தள்ளுவர்—தளளி
சீரோங்கும் குறளறம் கொள்ளுவர்.

5. பூவுக்கு மாமணம் நாவுக்குத் திறக்குறள் போற்றுவாய்
புலமை—சாற்றுவாய்
புனிதம்—ஏற்றுவாய்
புவிவாழ்விது மகிழ்வாகிட பொதுவாழ்வினில் சமம்மேவிட
புல்லறிவோர்தமை மாற்றுவாய்—மாற்றி
புதுவாழ்வுபெறப் பணியாற்றுவாய்!

இளமையில் ரோஜா மலர்களின் மீது படுத்திருந்தால், முதுமையில் நீ முடகளின்மீது படுத்திருப்பாய்.

—இங்கிலாந்து.

ஜர்மானிய நாட்டு உன்னத படைப்பை
கண்டு களிக்க திரண்டு வாருங்கள்

உலகிலேயே நான்காம் முறையாக
சென்னையில் நடக்க இருக்கும் ஜர்மானிய

பாவைக் கூத்து

காணவாரீர்

NEF தேசிய சுற்றுலா பொருட்காட்சி
டிசம்பர் 25, 1969 முதல்
வள்ளுவர் நகர் (சென்னை ஐலண்டு மைதானம்)

இளமையின் இரகசியம்!

புகைவண்டியில் பத்திரிகை நிருபர் ஒருவர் தம் எதிரே கிழவர் ஒருவர் உட்கார்ந்திருக்கக் கண்டார். ஆயினும், அவரிடம் இளமைத் தோற்றம் சிறிது இருந்தது.

மெல்ல, "பெரியவரே, மன்னிக்க வேண்டும்! நான் ஒரு நிருபன்! தங்கள் இளமைத் தோற்றத்தின் இரகசியத்தை எங்கள் வாசகர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்! தங்கள் வாழ்க்கைக் குறிப்புகள் சிலவற்றைச் சொல்லுவீர்களா?" என்றார் நிருபர்.

"ஆகா! நன்றாகச் சொல்கிறேன்! ஒரே கலாட்டா வாழ்க்கைதான்! பள்ளிக்கூடத்தைவிட்ட வுடனே, சிகரெட் நிறையக் குடித்தேன்! புட்டிபுட்டியாக மதுபானம் செய்தேன்! பெண்கள் பின்னால் திரிந்தேன்!" என்றார் கிழவர்.

நிருபருக்கு ஒரே பரபரப்பு!" தங்கள் வயது என்னவோ? சொல்ல வேண்டும்?" என்றார்.

பெரியவர் சொன்னார்: "ஆகா! சொல்கிறேன்! எனக்கு வயது 28!"

சந்தா விவரம்

ஒரு ஆண்டு	ரூ.	12 00
ஆறு மாதம்	ரூ.	6 00

வெளி நாடு

ஒரு ஆண்டு	ரூ.	16 00

138 பூந்தமல்லி நெடுஞ்சாலை,
சென்னை 10

புதிய பொற்காலம் - புதிய வெற்றிகள் !

★

இடையூறுகள் பலவும் கொண்டு செங்குத்தாக நிற்கும் வளர்ச்சிப் பாதையில் தமிழ்நாடு மேலும் மேலும் வெற்றிகளைக் குவித்து வருகிறது. மக்கள் அனைவரிடையேயும் புத்துணர்ச்சி, விவசாயப் பெருமக்களிடையே புதிய ஊக்கம், தொழிலாளர் - நிர்வாகிகளிடையே நல்லுறவு, சமூக நீதி, அறிவியல் வளர்ச்சி இவை வெற்றிக் கனிகளைப் பெற்றுத் தரும் படைக்கலங்களாகச் செயல் படுகின்றன.

- தமிழ்நாட்டில் வளர்ச்சிப் பணிகளின் வேகத்துக்கு எடுத்துக்காட்டாக 1972க்குள் சென்னை மாநகருக்கு காவேரி நீர் வரப்போகிறது. அதே கால அளவுக்குள் மாநிலத்தில் எல்லா ஊர்களும் மின் சக்தியும், குடிநீர் வசதியும் பெற்றுவிடும்.
- வேளாண்மைத் துறையில் மற்றொரு பெருஞ் சாதனைக்காக ரூ. 72 கோடி செலவில் மாபெரும் பண்ணைத் திட்டம் இறுதி வடிவம் பெற்று வருகிறது. உலக பாங்கின் நிதி உதவியுடன் இத்திட்டம் அடுத்து மூன்று ஆண்டுகளில் செயல் படுத்தப்படும்.
- 8 லட்சம் ஏக்கரில் மண் வள, நீர் வள பாதுகாப்பு வேலைகள் இப்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பொங்கல் பரிசு !

- கல்லக்குடியில் நடந்த வீரப்போர் 16 ஆண்டுகளுக்குப்பின் வெற்றியின் கனியைத் தந்து விட்டது. பொங்கல் விழாவில் களித்து மகிழும் வகையில் 'டால்மியாபுரம்' பெயர் நீங்கி, "கல்லக்குடி" பெயர் ஒளி வீசுகிறது.
- நகராட்சி அலுவலர்களுக்கு ஓய்வூதியம் பொங்கல் விழாவில் மற்றொரு பரிசு ஆகும்.
- படித்தவர்கள், தொழில் நுட்பம் தெரிந்தவர்கள் வேலை வாய்ப்புகள் பெற தனி முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அடுக்கடுக்கான சாதனைகளைத் தொடர்ந்து, மக்களின் சக்தி அனைத்தையும் இணைந்து மேலும் புதிய வெற்றிகள் தொடரும்; புதிய பொற்காலம் மலர்ந்து மணம் பரப்பத் தொடங்கும் !

(தமிழக அரசு செய்தித்துறை வெளியிட்டது)

காதல் யாருக்கு?

கே.ஜி. இராதாமணாளன்.

1

வெயிலின் அனல்காற்று சிறிது தணிந்ததும், பல வண்ண மலர்கள் நிறைந்த பூக்குடலையைக் கையில் எடுத்துக்கொண்டு சாரதா தன் குடிசையை விட்டு வெளியே புறப்படுவாள். "பூவோ பூ! மல்லிகை! முல்லை! கதம்பம்! பூவோ பூ!' என்று குயிலினும் இனிய குரலில் கூவிக் கொண்டே, தெருத் தெருவாகச் சென்று விற்பாள். வாடிக்கைக்காரர்களுக்கெல்லாம் பூ கொடுத்துவிட்டுக் கடைசியாகக் கோவிந்த பெருமாள் கோவிலுக்குப் புறப்படுவாள்.

கோவிலுக்கு எதிரே உள்ள சில பெட்டிக் கடைகளுக்கும் அதற்கு அப்பாலும் வியாபாரத்திற்கு வைத்திருக்கும் பல வகைப்பட்ட பழங்கள் காய்கறி கடைகளுக்குமிடையே, தன் பூக்குடலையையும் வைத்து அவளும் ஒரு வியாபாரியாகி விடுவாள். பொழுது தாழத்தாழ ஆண்டவனைக் காணவரும் கூட்டம் பெருத்துவிடும். நல்லூரிலுள்ள கோவிந்தபெருமாளைத் தரிசிக்க, தினந்தினம் வந்து சேருகின்ற தீர்த்த யாத்திரீகர்களும், பக்தர்களும் கோயிலுக்கு எதிரே உள்ள அந்தப் பெட்டிக் கடைகளின் எதிரே நின்று ஏதாவது வாங்காமல் போக மாட்டார்கள்.

பூக்காரியான அந்த இளங்குமரி சாரதா எங்கே இருந்தாலும், மக்கள் அங்கே இழுக்கப் படுவார்கள். அந்த தங்க மேனியாளைத் தாண்டிப்போகும் எல்லோருக்கும், அவளிடம் ஐந்து காசுக்காகிலும் பூ வாங்காமல் போக மனம் வராது. அப்படிப்பட்ட ஒரு அசாதாரணமான வசிகரத் தன்மை, அந்தத் தாமரை முகத்திற்கும், அந்த முகத்தோடு பிறந்த சுந்தரப் புன்னகைக்கும் இருந்தன! அந்த மங்காத புன்னகை, யாரையும் மயக்கிவிடும். பார்ப்போரைக் கண்டு, தான் புன்முறுவல் செய்வதாகவோ, அந்தப் புன்னகை ஆண்டவனின் பூசைக்கு வருவோரின் அகத்திலே புயலை எழுப்புவதாகவோ, அவள் அறியமாட்டாள். அவ்வளவு கள்ளங்கபடமற்றவள் அவள்.

சாரதாவுக்குத் தாயும் தந்தையும் இல்லை. பெரியப்பாவும் பாட்டியும் அவளை வளர்த்து வந்தார்கள். ஏரிக் கோடியிலிருந்த பூந்தோட்டத்திலும், அதற்கு அடுத்திருந்த மாந்தோப்பிலும், அவர்கள் வேலை செய்துகொண்டும் காவல் காத்துக்கொண்டும் இருப்பார்கள்.

அந்தி மயங்கியதும், காலியான பூக்குடலையில் ஏதாவது பழங்களையோ, காய்கறிகளையோ, வாங்கிப் போட்டுக் கொண்டு, அதைத் தோளில் மாட்டிக்கொண்டு, உல்லாசமாக மெல்லிய குரலில் பாடிக் கொண்டே அவள் குடிசைக்குத் திரும்புவாள். பெரியப்பாவும் பாட்டியும் இரவு சாப்பாட்டிற்கு வர, நேரம் கடந்து விடலாம். அவர்கள் வருவதற்கு முன்னால், அவள்தான் சமையல் செய்ய வேண்டும்.

ஊரின் ஒரு ஒதுக்குப் புறத்தில் தான் அவளது குடிசை இருந்தது. மரக் கொம்புகளைக் கொண்டு எழுப்பப்பட்டும், மேல்பாகம் பனையோலையால் மூடப்பட்டும், இந்தச் சுமார் பத்தடி உயரமுள்ள அந்தச் சிறிய குடிசைக்கு மொத்தம் ஒரே ஒரு அறை தான். சமையலறையும் படுக்கையறையும் ஆகிய எல்லாம் அதுவே தான்! அந்தக் குடிசைக்குள்ளே ஒரு திண்ணையும் இருந்தது.

அன்று வழக்கத்திற்கு மாருக நேரம் கடந்துதான் குடிசைக்குத் திரும்பினாள். குடிசையின் வாயிலை அடைந்ததும், பூக்குடலையைஎடுத்துக் கையில் பிடித்துக் கொண்டு, தலையைக் குனிந்து உள்ளே புகுந்தாள்.

பூக்குடலையைத் திண்ணையின் மேல் வைத்து, தீப்பெட்டியைத்தேடி எடுத்து, ஒரு தகர விளக்கை ஏற்றினாள்.

அவள் பூக்குடலையைப் பார்த்தாள்! ஆச்சரியமாக அல்லவா இருக்கிறது! ஆசையோடு வாங்கி அதில் வைத்துக் கொண்டு வந்த திராட்சைக் குலைகளுக்குப் பதில், நீண்டு வளைந்த புளியங்காய்கள் இருக்கின்றனவே! இதென்ன மந்திரம்!

நம்ப முடியாமல் அவள் குடலையைத் திரும்பத் திரும்ப உற்றுப் பார்த்தாள்! அற்புதமும், ஆச்சரியமும் கலந்த ஒரு புன் சிரிப்பு, அவளுடைய செவ்விதழ்களிலே விரிந்தது!

குடிசைக்குப் பின்னாலிருந்து ஓர் உரத்த சிரிப்பு! அவள் கூர்ந்து கேட்டாள். மறுமுறையும் அந்த வாய்விட்ட சிரிப்பு முழங்கிற்று! அவள் கண்களிலே ஓர் ஒளி மின்னிற்று. அவள் முகம் குலுக்கி, அந்தப் புன்சிரிப்பை மாற்றி, உதட்டை மடித்து அழகு காட்டினாள்! பிறகு அவள், "திருடன்! திருடன்! திராட்சைத் திருடன்!" என்று கத்தினாள்.

"இல்லை! மந்திரவாதி!" என்று சொல்லிக்கொண்டே முத்து உள்ளே வந்து திண்ணையில் உட்கார்ந்தான். அவனைப் பார்த்தால், ஒரு மந்திரவாதியைப் போலத்தான் தோன்றியது. கிழிந்து அழுக்கேறிய ஒரு துண்டும், பொத்தான்களுக்குப் பதில் ஆங்காங்கே இழுத்துக் கட்டிய நீளமான சிகப்பு நிறச் சட்டையும் அணிந்து கொண்டு, கையில் ஒரு கறுப்பு நிறப் பையையும் வைத்திருந்தான்.

அவளது எழில் முகத்தைப் பார்த்து, ஏளனத்தோடு அவன் திரும்பவும் சிரித்தான்.

"திருடன்! திருடன்! திராட்சைத் திருடன்!" என்று பாசமும் பரிகாசமும் கலந்த குரலில் அந்த மலர்மேனியாள் கூறினாள்.

முத்து பையைத் திறந்து அதனின்றும் திராட்சைக் குலைகளை எடுத்து ஒவ்வொன்றாக வெளியே வைத்தான். "நீ என்ன தூங்கிக் கொண்டா நடக்கிறாய்? அந்தத் தோட்டத்தின் அருகிலிருந்த உன் பின்னால் வந்து, திராட்சையை எடுத்து எடுத்துப் புளியங்காயை வைத்துக் கொண்டே வருகிறேன்—உனக்குக் கொஞ்சங்கூடத் தெரியவில்லையே—அப்பாவிப் பெண்ணே!"

பூக்குடலையிலிருந்து ஒரு புளியங்காயை அவள் எடுத்துக் கடித்துக் கொண்டே, "பூ விறக இன்று சிறிது நேரமாகிவிட்டது! நேரமாகி விட்டதே, இனிமேல் போய்ச் சமையல் செய்தாக வேண்டுமே என்ற கவலையோடு, நான் வேகமாக வந்துகொண்டிருந்தேன்!" என்று நாணத்தோடு சொன்னாள். ஒரு திராட்சைக்குலையை எடுத்துப் புன்னகையோடு அவனிடம் கொடுத்தாள். ஒவ்வொரு பழமாக வாயில் போட்டுக் கொண்டே, "இருட்டாகியும் நீ வராததினால், உன்னைத் தேடிக்கொண்டு கோவிலுக்குப் புறப்பட்டேன்! நிழல்போல் வந்த உன்னைக் கண்டதும், உடனே பாறைக்குப் பின்னால் ஒளிந்துகொண்டேன்...." என்று பெருமிதத்தோடு சொல்லிக் கொண்டு வந்தவனைச் சாரதா இடை மறித்து, "போதும் போதும்! ஜனக மகாராஜாவின் வில்லை ஒடித்த இராமர் கூட இப்படி வீரம் பேசியிருக்க மாட்டார்!" என்று குறும்போடு சொல்லிக் கொண்டே அந்தக் காளையின் உடல் தன்னுடம்போடு படும்படியாகப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள்!

"வில்லொடித்த இராமன் என்று என்னைச் சொல்லி, நீ சீதையாகப் பார்க்கிறாயா?"

"வேண்டாம்! வேண்டாம்! நான் சீதையாக வேண்டாம்! எவனாவது இராவணன் என்னைத் தூக்கிக் கொண்டு போய்விட்டால், பாவம் நீ அழுது புலம்புவாய்!" என்று கூறி, 'களுக்'கென்று அவள் சிரித்தாள். ஆசைக்குரியவனிடத்தில் பேசிக் கொண்டிருந்ததில், அவள் சமையலை மறந்தே போனாள்.

சிறிது நேரம் கழித்ததும், செய்ய வேண்டிய வேலை கவனத்திற்கு வரவே, திடுக்கிட்டாள். சமையலுக்குத் தயாரானாள். அந்தக் குடிசையில் துளி தண்ணீர்கூட இல்லை.

"கொஞ்சம் தண்ணீர் கொண்டு வந்து தருகிறாயா?" என்று முத்துவை அவள் கெஞ்சிக்கேட்டாள்.

"ஓ! தயார்!"

மூலையிலிருந்த ஒரு மண்குடத்தை எடுத்து, அவனிடம் கொடுத்தாள். அந்தக் குடத்தை அவன் தலையில் வைத்து ஒரு பாட்டுப் பாடிக் கொண்டே, இருட்டில் புகுந்து குளத்திற்குச் சென்றான்.

முத்து தண்ணீர்க் குடத்தோடு திரும்பியபோது, அவள் மிளகாய் அரைத்துக்கொண்டிருந்தாள்.

"அரிசி கழுவிப் போடவேண்டும்! இந்த மிளகாயைக் கொஞ்சம் அரைத்துத் தருகிறாயா?" என்று அவள் கெஞ்சினாள்.

முத்து கெம்பீரத்தோடு அவளைப் பார்த்தான். அவளுடைய வளையல் நிறைந்த கையைப் பிடித்துத் தள்ளி விட்டு, அந்த வேலையில் தீவிரமாக இறங்கி விட்டான்!

"இன்று இதை நான் செய்து தருகிறேன்! ஆனால் நமக்குக் கல்யாணமான பிறகு, இப்படியெல்லாம் செய்யமாட்டேன்! நிச்சயமாகச் செய்யமாட்டேன்! ஆமாம்! அன்று நான் உட்கார்ந்து கொண்டு, 'அடியே சாரதா! கொண்டுவா பலகாரங்களை!' என்று அதிகாரத்தோடு கட்டளை இடுவேன்! உடனே நீ கொண்டு வரவில்லை என்றால்—ஒரு உதை தருவேன்! சட்டி பானைகளெல்லாம் தூள் தூளாகப் பறக்கும்! நெருப்பில் தண்ணீரைச் சாய்ப்பேன்! தண்ணீரில் நெருப்பைக்கொட்டுவேன்! தெரியுமா?"

அவள் வாய்விட்டுச் சிரித்தாள். "அப்பப்பா! ரொம்பவும் தொல்லை பிடித்த கணவன்தான்!" என்று சொல்லிக்கொண்டே, ஒரு விரலால் மிளகாயை எடுத்து அவன் கன்னத்தில் தேய்த்து விட்டாள்! அவன் துள்ளியெழுந்து அவளுடைய கன்னத்தைக்கிள்ளினான்! அவனைப் பிடித்துப்பின்னால் தள்ளினாள்! அடுக்கியிருந்த வறட்டிகளின் மீது அவன் விழுந்ததைக் கண்டதும், அவள் குலுங்கச் சிரித்தாள். அவன் திரும்பவும் மிளகாய் அரைக்கத் தொடங்கினான். அந்தத்திண்ணையின் மீது கால் நீட்டி உட்கார்ந்துகொண்டு, அவள் புளியங்காயைத் தின்னத் தொடங்கினாள் இடையிடையே அவனது காதுகளைக் குறிவைத்து, புளியங்கொட்டைகளை எறிந்தாள்!

"சாரதா!"

முத்து தன்னுடைய கையை உயர்த்தி ஐந்து விரல்களை அவளுக்குக் காட்டினான்! அவளுக்கு அது புரிந்தது! கல்யாணத்திற்கு இன்னும் ஐந்து மாதங்கள்! ஐந்தே ஐந்து மாதங்கள்! நூறு ரூபாய் சேர்த்து, குடிசை கட்டி, சாரதாவை மணநது அவன் இன்பமாக வாழ்க்கை நடத்துவான்!

அவர்களிருவரும் வரவிருந்த அந்த இன்ப வாழ்க்கையைக் கற்பனையில் கண்டு, மகிழ்ச்சியோடு ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். காதல் தென்றலிலே இன்புற்ற அந்த உள்ளங்கள் சிலுசிலுத்தன! அவர்களின் கலக்கமற்ற காதலை வாழ்த்துவதைப்போல, அந்தத் தகர விளக்கின் தளர்ந்த சுடரும் தலையாட்டியது!

சாரதா குதித்தெழுந்து, "அவர்கள் வருகிறார்கள்!" என்றாள், பதைபதைப்போடு பெரியப்பாவும் பாட்டியும் ஏதோ பேசிக்கொண்டே வந்து கொண்டிருந்தார்கள். முத்து இருளில் புகுந்து, ஓடி மறைந்தான்.

2

முத்து ஒரு செக்கு ஓட்டும் தொழிலாளி. வயது சென்ற தாயும் அவனும், சாரதாவின் குடிசைக்குப் பக்கத்துக் குடிசையில்தான், சில ஆண்டுகளுக்கு முன்பு குடியிருந்தார்கள். அப்பொழுது சாரதா பாவாடை கட்டிக்கொண்டு மான் குட்டியைப் போலத் துள்ளிக்குதித்து விளையாடும் சிறுமி. அந்தக் கூவத்தெரியாத குயிலின் குஞ்சை, முத்துவுக்குக் கட்டிவிட வேண்டுமென்று அவன் தாய் அடிக்கடி கூறிக்கொண்டிருப்பாள். ஆனால் அதிக நாள் உயிரோடு இல்லாமல் கண்ணை மூடிவிட்டாள்.

அம்மாவின் விருப்பப்படியே சாரதாவையே மணம் செய்து கொள்ள

வேண்டுமென்று அவன் தீர்மானித்தான். நாட்களின் ஓட்டத்தில், அவனது மனதை அள்ளும்படியான அழகுச்சிலையாக அவள் மாறிவிட்டாள். அவளோடு பேசவேண்டுமென்றே ஆசை. அடிக்கடி அவன் மனதில் துள்ளிக்குதித்தது. பொன்னிறமான அந்த இளங்கன்னியின் மனதிலும், காதல் குருத்துவிட்டது. அவனது இதய சிம்மாசனத்தில் அமரும், ராணியாகி விட்டாள் அவள் வீட்டிலும் அந்தத் திருமணத்திற்குத் தடையில்லை. அகவே அநதப் புது மணம் பெறும் நன்னளை, முத்து ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்.

அவளை ஒரு நாளாவது பார்க்காவிட்டால், அவனுக்குத் தூக்கம் வராது. அவன் தாமரை கொண்டு வந்து கொடுப்பான். மரத்திலேறி மாங்காய்களை பறித்துத் தருவான். மாலையில் அவள பூவை விற்றுவிட்டுத் திரும்பி வரும்வரை, ஏதாவது ஒரு மரத்தின் மீதேறி உட்கார்ந்து கொண்டு, நாட்டுப்பாடல்கள் பாடிக்கொண்டிருப்பான். என்றைக்குப் பூக்குடலை சீக்கிரத்தில் காலியாகி விடுகிறதோ அன்றைக்கு அவர்கள் இருவரும் ஊருக்கு வடக்கே இருக்கும் மணல் மேட்டில், கொஞ்சிக் குலவிக்கொண்டிருப்பதைக் காணலாம்.

களிப்போடு இப்படிக்காலம் போய்க்கொண்டிருந்தது. திருமணத்திற்கு இன்னும் மூன்றே மூன்று மாதங்கள் தான் பாக்கி.

கோவிந்த பெருமாள் கோயிலில் வசந்த உற்சவம் நடந்துகொண்டிருந்தது. அதைக் கண்டு புண்ணியம் அடைய, ஒரு சினிமா முதலாளி தமது குடும்பத்தோடு நல்லூருக்கு வந்தார். அவ்வூர் பிரயாணிகள் விடுதியில் அவர் சில் நாட்கள் தங்கியிருந்தார்.

தினந்தினம் தெருவழியாகப் பூவிற்றுக்கொண்டு சென்ற சாரதாவை அவர் பார்த்தார். அவளுடைய குரலின் இனிமையும், பார்வையின் மோகனமும், முகத்தின் வனப்பும் வசிகரமும் — குமரிப் பருவத்தின் குதூகலத்தோடு விளங்கிய அங்க அவயவங்களின் கட்டும் கவர்ச்சியும் — அவருடைய இதயத்தைத் தொட்டுத்தடவின!

அவர் கிராம மோகினி' என்ற ஒரு புதிய படத்தைத் தயாரிக்கத் திட்டமிட்டிருந்தார். அந்தப்படத்திற்கு கதாநாயகியாக அவளைத் தேர்ந்தெடுத்தார் — தமது மனதிற்குள்! அவளோடு சாகசமாகப் பேசி, குடும்ப நிலைமைகளை எல்லாம் தெரிந்துகொண்டார். மறுநாள் அவளது பெரியப்பாவையும் பாட்டியையும் சந்தித்தார். சினிமாவில் நடிக்கச் சாரதாவை அனுப்பவேண்டும் என்றும் — அதற்காக முன்பணமாக இரண்டாயிரம் ரூபாய் தருவதாகவும் — ஆசை வார்த்தைகளைக் கூறி, அவர்களை ஒப்புக்கொள்ளச் செய்தார்! அவர்கள் இளம் பெண்ணிடம் பலவும் கூறி மயக்கி — முத்துவையும் திருமணத்தையும் மறந்து — அவளே சரி என்று கூறும்படிச் செய்தார்கள்! புதையல் கிடைத்ததுபோல அந்தப் பணத்தை மகிழ்ச்சியோடு அவர்கள் பெற்றுக்கொண்டு, சாரதாவை பட முதலாளியோடு அனுப்ப நாளும் குறித்துவிட்டார்கள்!

3

“சாரதாவைச் சினிமா முதலாளி அழைத்துக்கொண்டு போகப் போகிறார்!” என்ற பேச்சை, காலையில் ஒரு பழக்காரியின் மூலமாக முத்து கேள்விப்பட்டான். அன்று மாலை சாரதாவோடு அவன் அந்த மணல் மேட்டிற்குச் சென்றான். இருவரும் ஒன்றும் பேசாமல், மௌனமாகவே நடந்து சென்றனர்.

மணல் மேட்டை அடைந்ததும், “சாரதா! நீ போகத் தீர்மானித்து விட்டாயா?” என்று ஏக்கமும் ஏமாற்றமும் கலந்த குரலில் கேட்டான்.

சாரதா முகம் தாழ்த்தினாள். அவனை நேருக்கு நேர் பார்க்க, அவளால் முடியவில்லை.

“நம்முடைய இந்தச் சாயங்காலச் சந்திப்புகள், இன்பமான சல்லாபங்கள், விநோத விளையாட்டுகள் எல்லாவற்றையும மறந்துவிட்டு — காலிகளும் காமுகர்களும் விஷமிகளும் விபசாரிகளும் நிறைந்த பட்டணத்திற்கா போகத் தீர்மானித்து விட்டாய்?” அவன் குரலில் சோகம் மட்டுமல்ல, ஆத்திரமும் கலந்திருந்தது.

“கிராம மக்களுக்குப் பரந்து விரிந்திருக்கிற இந்த உலகம் தெரியாது! அதனால்தான் கிராமத்தை விட்டு வெளியில் செல்ல மனம வராமல், தலைமுறை தலைமுறையாக வறுமைக்கும் வாட்டத்திற்கும் இடையில் சிக்கி வதைகிறார்கள்! தங்கள் சந்ததியாருக்கும் அதே அறியாமையையும் அவல வாழ்க்கையையும் சாசனமெழுதி வைத்து விடுகிறார்கள்!” என்று சினிமா முதலாளி அவளை மயக்கக் கூறிய அதே வார்த்தைகளை, அவள் கிளிப்பிள்ளையைப் போல ஒப்புவித்தாள் — தலையை உயர்த்தாமலேயே!

“சாரதா....” மேலே என்ன சொல்வதென்று புரியாமல் அவன் திணறினான்.

“நான் நல்ல நிலைக்கு வருவேன்! பணம் சம்பாதிப்பேன்! அதன் பிறகு நாம் மணஞ் செய்து கொண்டு இன்பமாக வாழக்கூடாதா?” என்று மணல் மேட்டுக்கு அருகே முளைத்திருந்த ஒரு சிறிய மாஞ்செடியை உற்றுப் பார்த்துக்கொண்டே அவள் சொன்னாள்.

“நீ யாருக்காகப் பட்டணத்துக்குச் செல்கிறாய்?” முத்துவின் குரல் இடறிற்று! அவள் பதில் கூறவில்லை.

“நாம் ஏழையாகப் பிறந்துவிட்டோம்! சாரதா, அது நம்முடைய குற்றமா?” அவனது இடறிய குரல் — விம்மலாக மாறிற்று.

சாரதாவின் தங்கமேனி தடதடவென நடுங்கியது. வேல் விழிகளிலே நீர் நிறைந்தது. ஒன்றோடொன்று ஒட்டாமலிருந்த மணலை அவள் வெறித்துப் பார்த்தாள். அவளுடைய தோளின் மீது முத்துவின் கைபட்டதும், உடலிலிருந்து குளிர்ந்த சோக ஊற்றுக்கள் பீரிட்டுக் கிளம்புவதைப் போல அவளுக்குத் தோன்றியது!

“சாரதா, நான் செக்கு ஓட்டிக்கொண்டே இருக்கிறேன்! நீ பூ விற்றுக்கொண்டே இரு! அதை விடப் பெரிய இன்பம் — அதைவிடக் கிடைக்க முடியாத பெரிய சுகம் — நமக்கு வேண்டாம்! அநதச் சினிமாக்காரனுடன் சென்றால், நீயே உன்னைக் கெடுத்துக் கொள்வாய்!” என்று கூறிக்கொண்டே, தன் கையால் அவளது முகத்தை நிமிர்த்தினான்.

“நீ ஏன் இப்படி சஞ்சலமும் சந்தேகமும் கொள்கிறாய்! என்னைக் காப்பாற்றிக்கொள்ள எனக்குத் தெரியாதா? நெருப்போடு விட்டில் விளையாட முடியுமா? தங்கத்திற்குத் துருப் பிடிப்பது உண்டா? அதிருஷ்டம் என்னை அழைக்கிறது! தடுக்காதே! நம்முடைய இந்த அன்பை, காதலை, நான் ஒரு நாளும் மறக்க மாட்டேன்! அப்படி மறந்தால், உயிர்வாழ மாட்டேன்! ஒரு நாள் — அது என்றைக்கு என்று இப்போது கூற முடியாது — பொன்னோடும், பொருளோடும், சாரதா இங்கே திரும்பி வருவாள் —

மாமல்லன் வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம்

- காஞ்சீபுரம் -

எமது பொங்கல் வாழ்த்துகள்!

க. த. சு. மணி,
(நகர மன்றத் தலைவர்)

தலைவர்:

மாமல்லன் வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம்,
காஞ்சீபுரம்.

முத்துவின் அன்புப் பீடத்தில் ஆசை மனைவியாக அமர!”

“இந்த உறுதி தளராதே, சாரதா?”

“சத்தியமாகத் தளராது!”

“அதுவே போதும்!” என்று சொல்லி, அந்த மான்விழியாளை மார்புறத் தழுவிக் கொண்டான்.

கீழே வைத்திருந்த பூக்கூடலையை எடுத்துக்கொண்டு அவள் புறப்படத் தொடங்கினாள்.

“இரு இன்று உன்னுடைய கடைசி வியாபார தினமல்லவா? சினிமாவில் நடிக்கச் செல்லும் உனக்கு, இனி எதற்கு இந்தப் பூக்கூடலை! அது என்னிடம் இருக்கட்டும்! உன்னைப் பார்ப்பதைப்போல அதைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்!” என்றான்.

அவள் பூக்கூடலையை அவனிடம் தந்தாள். பிரிவு கூறும் முறையில் அவன் முகத்தை மீண்டும் அன்பு கனியப் பார்த்தாள்.

அவளுடைய பொன்கரத்தை அவன் பிடித்தான். அவனது கண்களில் நீர் நிறைந்தது. அவளை மார்போடு அணைத்துக் கொண்டு, “உன் நினைவாக பூக் கூடலையைத் தந்தாய்—என் நினைவாக இதை வைத்துக் கொள்!” என்று மனதை உருக்கும் குரலில் கூறி, அவளது மாம்பழக் கன்னத்தில் ஒரு முத்தம் வைத்தான்!

4

“கிராமமோகினி” வெளிவந்ததும், சாரதாதேவியின் புகழ் நாடெங்கும் பரவியது. அவளுடைய அங்க அவயவங்களின் அமைப்பும், அழகும், ஒரு முறை கண்டால், மறுமுறை கனவு காணவேண்டிய மதிமுகமும், பார்ப்போரைச் சொக்கவைக்கும் கருவிழிகளும், கேட்போரைப் போதைகொள்ளச் செய்யும் குயிலின் குரலும், சோலை மலரொளி போன்ற சொகுசுப் புன்னகையும், வண்ணமயில் போன்ற அசைவும் நெளிவும் — அவளோடு சிறந்த நடிகை என உலகிற்குப் பறைசாற்றின!

இரசிக கோடிகளின் ஏகோபித்த ஆதரவு! சின்ன, பெரிய பத்திரிகைகளின் ரசரசமான புகழ்மாலைகள்! நடிக உலகில் எந்த ஒரு நடிகைக்கும் பொறுமையும் பொச்சரிப்பும் உண்டாக்கக்கூடிய வேகத்தில்— அவள் புகழின் உச்சாணிக்கொம்பில் ஏறி உட்கார்ந்து கொண்டாள்!

உதகையில் ஒரு பங்களா—கோடையில் தங்க! தியாகராய நகரில் ஒரு மாளிகை—மற்ற நாட்களில் வசிக்க! பிரபுக்களும், குபேரன் வீட்டுச்செல்வக் குமாரர்களும், உயர்தரமான அரசாங்க அதிகாரிகளும்—அவளுடைய விருந்தினர்! கோடீசுவரர்கள் அவளுடைய நெருங்கிய நண்பர்கள்! ஒரே ஒரு முறை அவளைத் தரிசிக்க ஏங்கித் தவம் செய்யும் இலட்சக்கணக்கான விசிறிகள்! கொட்டிக்கிடக்கும் பணம்—நாடு முழுவதும் எதிரொலிக்கும் புகழ்—இதைவிட ஒரு சிங்காரிக்கு வேறென்ன வேண்டும்! ஆசை ஆகாயத்தைப் போன்றது! அந்த ஆசை அவளிடத்தில், ஒரு சுயநலத்தை உருவாக்கியது! போக பூமியில் சுற்றிச் சுழலும் சுதந்திரமும், பொங்கி வழிந்த இன்ப வசதிகளும் அவளை மயக்கின!

பட்டுப்பட்டாடை அணிந்து, பளிங்கு மாளிகையில் செல்வச் சீமான்களின் பக்கத்தில் அமர்ந்து, மகிழ்ச்சி அதிகரிக்கத் தங்கக் கோப்பையிலே மது அருந்தினாள்! சப்ர மஞ்சத்தில் பட்டு மெத்தையில், சரச சல்லாபங்களில் திளைத்தாள்—குடித்தாள்—கண்டவனோடு கூடிக்களித்தாள்! இவை யொன்றும் அவளுக்குக் குற்றங்களாகத் தெரியவில்லை! ஆணவமும் அகம்பாவமும் அவளிடம் நாளுக்கு நாள், விஷம் போல ஏறிக்கொண்டே சென்றன.

இவ்வளவு மாறிவிட்ட அவள்........

சதா சர்வகாலமும், அவள் நினைவாகவே—அவளுக்காகவே காத்துக் கொண்டு— நாட்களைக் கழித்து வந்த அந்தப் பழைய முத்துவையும், அவனுக்குத் தந்த வாக்குறுதியையும், அவள் அப்படியே மறந்து விட்டாள் என்பதைக் கூறத் தேவையில்லை.

வேலை முடிந்ததும், முத்து அந்த மணல் மேட்டின் மீது தனிமையில் உட்கார்ந்து சிந்திப்பான்.

“சாரதா பிரிந்து சென்றபோது, சிறிய மாஞ்செடியாக இருந்தது—இப்பொழுது எவ்வளவு பெரிய மரமாகி விட்டது! காய்கள் கூடக் காய்த்துக் குலுங்குகின்றனவே! காலம் எவ்வளவு வேகமாக ஓடிக் கொண்டிருக்கிறது!” என்று தனக்குத் தானே முணுமுணுத்துக் கொள்வான்.

ஊருக்குச் சிறிது தூரத்திலிருந்த பெரிய சாலையில் செல்லும் கார்களையும், அதிலிருக்கும் பணக்காரர்களையும், காணும்போது, “நானும் ஏன் ஒரு பணக்காரனாகப் பிறக்கவில்லை?” என்று அவனுக்குத் தோன்றும் அந்த நினைப்பு மறுகணமே மறைந்துவிடும். “அப்படி நான் பிறக்காதது எவ்வளவு நல்லதாயிற்று! இல்லாவிட்டால், என் சாரதாவைக் காணவோ, அவள் அன்பைப் பெறவோ முடிந்திருக்குமா? சாரதா! சாரதா! அவள்....எங்கே?”

கெம்பீர அழகு நகரான சென்னையின் தெருக்களில் ஒரு பெரிய காரில் சாரதாவின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு செல்வதாக, ஒரு நாள் அவன் கனவு கண்டான்! விழித்து, கண்களைக் கசக்கி, மோவாய்க் கட்டையைத் தடவிக் கொண்டே, ‘உண்மையில் அப்படி நடக்கப் போகிறது!’, என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டான்!

5

சாரதாதேவி நடித்த படங்கள் மூன்று வெளிவந்தன. அவள் அகில இந்தியப் புகழ்பெற்ற நடிகையாகி விட்டாள். பம்பாயில் ஒரு படத்தில் நடிக்க, அவளுக்கு அழைப்பு வந்தது. அவளை உடனிருந்து அழைத்துச் செல்ல, அந்தக் கம்பெனியின் டைரக்டர் சென்னைக்கே வந்து விட்டார்.

தேன்மலர் கண்ட வண்டுபோல, சாரதாவின் மனம் பம்பரமாகச் சுற்றியது. ஜுஹூவிலே கடற்கரைக் குடிசைகளிலே தங்கி இன்பம் கொள்வது போலவும் — தாஜ்மகால் ஓட்டலில் தனக்காகப் பெரிய விருந்துகள் நடப்பது போலவும்—படப்பிடிப்பு வேலைக்குப் பிறகு ‘மலபார் ஹில்’லிலுள்ள வசந்த மாளிகையில் ஓய்வு எடுப்பது போலவும்—அவள் கற்பனை செய்தபடி, களிப்பால் கூத்தாடினாள்.

பம்பாய் செல்வதற்கு முன்பு, நல்லூர் சென்று கோவிந்தப் பெருமாளுக்கு அபிஷேகமும் அர்ச்சனையும் செய்வித்து, மேலும் மேலும் தனக்கு பணமும் புகழும் தரும்படி பிரார்த்தித்துக் கொள்ள வேண்டுமென்ற ஆசை அவளுக்குத் தோன்றியது,

பம்பாயிலிருந்து வந்த டைரக்டரை அழைத்துக் கொண்டு, தனது ஊருக்குப் புறப்பட்டாள் அங்கே பிரயாணிகள் விடுதியில் இருவரும் தங்கினர். மறுநாள் ஊரைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பினர்.

ஏழு ஆண்டுகள் உருண்டோடிய பிறகும், அவ்வூரின நித்திய சம்பவங்களில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஒன்றும் நிகழ்ந்து விடவில்லை. யாத்திரீகர்கள் வந்தும், போய்க்கொண்டும் இருந்தனர். பெட்டிக் கடைக்காரர்கள், அன்றும் வரிசை வரிசையாக இடம் பிடித்திருந்தனர். பழங்களும் காய்கறிகளும் அன்றும் நிறைந்திருந்தன. வியாபாரிகளின் அழைப்பும் ஆரவாரமும், யாத்திரீகர்களின் போக்குவரத்தும், கூட்டத்தின் சலசலப்பும் நெருக்கடியும், எல்லாம் ஒன்று சேர்ந்து இயற்கை அன்னையின் அமைதியைக் குலைத்தன.

டைரக்டர் அந்தப் புதிய காட்சிகளைக் கண்டு மகிழ்ந்து—இடை இடையே அவளிடம் சந்தேகங்களைக் கேட்டுத் தெளிவு பெற்று—கையில் வைத்திருந்த புகைப்படக் கருவியினால் படம் பிடித்துக் கொண்டிருந்தார். அக்காட்சிகள் சாரதாவின் மனதில் அனேக சிந்தனைகளை எழுப்பின, ஆனால் சிரமப்பட்டு நினைவு படுத்திக் கொண்ட இன்ப நினைவுகள், அந்தச் சூழ்நிலையை மூடுவதற்கு ஓர் ஆடையை நெய்து கொடுத்தன! கனவில் நடப்பவளைப்போல, அவள் நடந்து கொண்டிருந்தாள்.

முன்பு, தான் பூ விற்ற இடத்தில், ஒரு தள்ளாத கிழவி தக்காளிப்பழக் கூடையை வைத்துக்கொண்டு தூங்கி விழுந்து கொண்டிருப்பதைக் கண்டாள். அந்த இடம், அவளது உள்ளத்தில் குளிர்காற்றை பாய்ந்தோடச் செய்தது. “எவ்வளவு காலம் அந்த இடத்தில் நான் உட்கார்ந்து பூ விற்றேன்!” இப்படி எண்ணியதும், அன்றைய நாட்டுப் புறத்துச் சிறுமியாகி விடுவதைப்போல அவளுக்குத் தோன்றியது.

“தயவுசெய்து. அதோ அந்தத் தக்காளி விற்கும் கிழவியை ஒரு படம் எடுங்கள்!” என்று டைரக்டரை அவள் வேண்டினாள். தூங்கி விழும் அந்தக் கிழவியை அவர் படம் எடுத்தார்.

அன்று மாலை அவர்கள் திரும்பவும் வெளியில் சுற்றிவரப் புறப்பட்டனர் சிறுவயதில் சுற்றித் திரிந்த பல இடங்களின் வழியே சென்றபோது, பல பழைய நினைவுகள் சிறகுகளை அடித்துக்கொண்டு, அவளுடைய மனமென்ற கூட்டிற்குள் பறந்து வந்தன. அவற்றை அலட்சியமாகத் தள்ளிவிட அவளால் முடியவில்லை. அவள் அவற்றை—பழைய நினைவுகளை—தடவிக் கொடுத்தாள்!

பூக்குடலையைத் தான் தோளில் மாட்டிக்கொண்டு அலைந்து வந்த தெருக்கள், வெயிலுக்காக ஒதுங்கிய மரத்தடிகள், அருகிலிருந்த சுமைதாங்கிகள், தாமரைக்குளம், முத்துவோடு கொஞ்சி மகிழ்ந்த மணல்மேடு அதன் பக்கத்தில் வளர்ந்திருந்த மாமரம்—இவையெல்லாம் அமைதி மொழியில் அவளோடு இன்பப் பேச்சுக்கள் நடத்தின.

கடைசியாக அவர்கள்—முத்து முன்பிருந்த குடிசைக்கு வந்தனர். இப்பொழுது அந்தக் குடிசையோ, தோட்டமோ அங்கே இல்லை. உதிர்ந்து இடிந்துபோன அவர்கள் மட்டுமே நின்றிருந்தன. அங்கே அவள் கண்ட மாற்றம்—அவள் உள்ளத்திலே ஒரு பெரும் பிளவை உண்டாக்கிற்று

அந்தப் பிளவை நோக்கி, ஒரு நூறு கேள்விகள் ஒன்றாகப் பாய்ந்தன.

முத்துவைப் பற்றி அறிய வேண்டுமென்ற ஆசை, அவளை வாட்டியது. மறுநாள் காலை ஒரு பால்காரியின் மூலம், அவனைப் பற்றி அறிந்தாள். முத்து உயிருடன் இருக்கிறான் என்றும், அவன் செக்கு ஓட்டும் வேலையை விட்டு இரண்டாண்டுகள் ஆகிவிட்டன என்றும், அங்கிருந்து இரண்டு மைல் தூரத்தில் ஒரு குன்றின் சாரலில் ஒரு குடிசை கட்டிக்கொண்டு தனியாக வாழ்கிறான் என்றும், ஒரு கிழவி அவனுக்கு உணவு கொண்டு போய்த் தருகிறாள் என்றும்—அவள் அறிந்தாள். அன்று மாலை அவனைப் பார்க்க டைரக்டருடன் அவள் புறப்பட்டாள்.

குடிசையின் திண்ணையில், ஏதோ சிந்தித்தபடி முத்து அமர்ந்திருந்தான். நாகரிகமான முறையில் ஆடைகள் அணிந்து, பெரும் பணக்காரர்களைப் போன்ற தோற்றங் கொண்ட இருவர் தன்னருகே வருவதைக் கண்டதும், அவன் திகைத்து நின்று விட்டான்.

"பரவாயில்லை, உட்கார்! நாங்கள் இந்தக் குடிசையையும் மலைச் சாரலையும் படம் எடுக்கத்தான் வந்திருக்கிறோம்! வேறொன்றுமில்லை!" என்று சாரதா கூறிவிட்டு, அவனது முகத்தைக் கவனித்தாள்.

முத்து அவர்களைக் கூர்ந்து பார்த்தான். சாரதா திண்ணையின் அருகே வந்து நின்றாள். "இந்தக் குடிசைக்குள்ளே போய்ப் பார்க்கலாமா?" என்று சிரித்துக் கொண்டே அவள் கேட்டாள். "எதற்கு? அதற்குள்ளே சட்டிப்பானைகளைத்தவிர, வேறென்ன இருக்கப் போகிறது?" என்று தளர்ந்த குரலில் பதிலளித்தான், முத்து.

அவள் உள்ளேஎட்டிப் பார்த்தாள். ஒரு கயிற்றுக் கட்டிலும், அதன் மேல் கிழிந்த பாயும், அழுக்கேறிய தலையணையும் இருந்தன. ஒரு குடலை, ஆமாம், பூக்குடலை! மிகப் பழையதும் பிய்ந்ததுமான அந்தப் பூக்குடலை, அவளைப் பார்த்து எள்ளி நகைத்தது! ஏழாண்டுகளுக்கு முன்பு அவளுடைய குடலை அது. முத்து அதைப் பெற்றுக்கொண்ட அந்தக் காட்சி—அவள் மனக்கண்முன் வந்து நின்றது. உள்ளத்தில் காட்டு வெள்ளம் போலப் பெருக்கெடுத்த அந்தத் திடீர் உணர்ச்சி—அவளது எலும்பையும் தேய்த்துக் கரைத்துவிடும் போலத் தோன்றியது.

"அம்மா, நீங்கள் எந்த ஊர்?" என்று மரியாதை நிறைந்த குரலில், அவன் கேட்டான்.

முத்துவைப் பரிதாபமும், அன்பும், கருணையும் நிறைந்த கண்களோடு பார்த்துக்கொண்டு, "சென்னை" என்று தாழ்ந்த குரலில் கூறினாள்.

"சென்னையா?" முத்துவின் கண்கள் அகன்றன. "சென்னையா? என்னுடைய சாரதா அங்குதானே இருக்கிறாள்!"

"என்னுடைய சாரதா!" என்று அவன் கூறியது, அவளது மனதில் ஒருவித கிலுகிலுப்பை உண்டாக்கியது! என்ன அதிகாரம்—இருந்தாலும் அதில் எவ்வளவு இன்பம்! "என்னுடைய சாரதா!" என்று யாராவது, இவ்வளவு உரிமையோடு கூறுவார்களா? கூறத்தான் முடியுமா? ஆனால், அடுத்த விநாடியே அவளுடைய உள்ளத்தில் அகம்பாவம் தலை தூக்கி எழுந்தது!

"சீ! நானொரு செக்கு ஓட்டியின் அன்புக்குரியவளா?" என்று வெறுப்போடு நினைத்து—வேறு பக்கம் முகத்தைத் திருப்பி—எல்லாவற்றையும் மறக்க முயன்றாள்.

"என்னுடைய சாரதா, ஒரு சினிமா நடிகை! அவளைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டதில்லையா?"

"ஓகோ, சாரதா தேவியா?"

"இல்லை அம்மா, வெறும் சாரதாதான்!"

"எந்தச் சாரதா? அந்த மைசூர்க்காரியா?"

"அல்ல!"

"பிறகு?"

"என் சாரதா, இந்த ஊர்தான்!"

"அட அடா! அந்தப் பெண்ணா? பாவம்! தெரியும் தெரியும்!"

"தெரியுமா அம்மா! அவள் சுகமாக இருக்கிறாளா?"

"சுகமா? சுத்த பைத்தியமப்பா, நீ! ஒரு மோட்டார் விபத்தில் அவள் செத்து எவ்வளவு காலமாகிறது!"

"ஆ!"

"ஆமாம், அவள் இறந்து ஆறு ஆண்டுகளுக்கு மேலாகிறது!" என்று கூறியபோது, அவள் குரலே அவளுக்குப் பயங்கரமாகக் கேட்டது.

"சாரதா! இறந்து விட்டாயா! நீ இல்லாமல் நானா? சாரதா! சாரதா!," என்று ஆவேசம் வந்தவனைப்போலக் கூறிக்கொண்டே, சோர்ந்து உட்கார்ந்து விட்டான். கழுத்தில் புரண்டிருந்த கறுத்த மயிர்ச் சுருள்கள், காற்றில் அசைந்தன! ஆனால், அவன் இதயத்திற்கு, அந்த அசைவாகிலும் இருந்ததா என்பது சந்தேகம்! பிணத்தின் முகத்திலாவது சிறிது களையிருக்கும்—அது கூட அப்பொழுது அவன் முகத்தில் இல்லை!

அவனுடைய முகத்தை மறுமுறை பார்க்க, அவளுக்குத் தைரியம் வரவில்லை. அவள் கூறியது—சாரதா செத்துவிட்டாள் என்றுதான் சொல்லியது—உண்மையிலேயே நடந்து விட்டதைப்போல, அவளுக்குத் தோன்றியது! அவள் உடலில் உயிர் இருக்கிறதா? அது அவளுக்கே சந்தேகமாகி விட்டது! "ஓடு' ஓடு! இந்த இடத்தை விட்டே ஓடி விடு!" என்று அவள் இதயத்தில் ஒரு குரல் ஓலமிட்டது! எப்படியோ தள்ளாடி நடந்து, டைரக்டரின் அருகில் வந்து, சீக்கிரம் புறப்படுங்கள்! என் தலை சுற்றுகிறது!" என்று திணறிக் கொண்டே கூறினாள்.

விடுதிக்குத் திரும்பி வந்தபின், ஓர் அறையில் தனிமையில் உட்கார்ந்திருந்தாள்.

சுடுகின்ற சிந்தனைகள்—இதயத்தை உடைத்துக் கொண்டு வரும் பழைய நினைவுகள்—அகம்பாவமும் அன்பும் நடத்திய கொடிய போர்—அவளால் அவற்றை எல்லாம் தாங்க முடியவில்லை! கதவுகளையும் ஜன்னல்களையும் மூடி, விளக்கையும் அணைத்துவிட்டு, இருட்டில் அமர்ந்து சிந்தித்தாள்! மலைச்சாரலில் அன்று மாலை நடந்த அந்த நிகழ்ச்சிச் சித்திரத்தை, அறையில் ஆக்கிரமித்திருந்த இருள் திரையில், மீண்டும் அவள் கண்டாள்! முத்துவின் உணர்ச்சியற்ற முகத்தையும்—நீர் கொட்டிய கண்களையும்—அவளால் மறக்க முடியவில்லை! கண்களை மூடிக்கொண்டு யோசித்தாள். கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தாள். ஒரு புன்சிரிப்பு அவளுடைய இதழ்களிலே அரும்பியது!

6

அன்று இரவு!

அவள் அழகிய ஆடை அணிகளைப் பூண்டு ஒரு கண்ணாடியின் முன் ஓய்யாரமாக வந்து நின்றாள்.

அவள் சிங்காரத்தை அவளே இரசித்தாள்! ஆகா, என்ன அழகு? எவ்வளவு ஜிலுஜிலுப்பு! தூய வெண்மை நிறமான பட்டுச்சேலை. இரத்தச் சிவப்பு நிறச்சோளி, பின்னியும் பின்னாமலுமிருந்த கார் நிறக் கூந்தலில் வானவில்லைப்போல் சூடியிருந்த வண்ண மலர்கள், ஒளிவிடும் வெள்ளை முத்துக்கள் கோர்த்த பிறைச் சந்திரன் வடிவிலே மூக்கணி, கைவிரல்களில் கனக மோதிரங்கள், காதிலே....கழுத்திலே........ கையிலே........ அப்பப்பா! என்ன மினுமினுப்பு! எவ்வளவு பளபளப்பு!

அந்தக் கட்டழகி நிமிர்ந்து ஒரு புன்னகை செய்தாள்! சேச்சே, அது ஒரு வேசியின் புன்னகை அல்லவா?

திராட்சை நிறைந்த ஒரு வெள்ளித் தட்டைக் கையில் ஏந்தி, அவள் வெளியே நடந்தாள். வண்டி தயாராக இருந்தது. இருள் மூடிய சாலை வழியே, வண்டி ஓடியது.

"கோமான்களும், கோடீசுவரர்களும் என் விரல் நுனியை முத்தமிட ஏங்கித் தவித்து—உற்றார் உறவினர்களையும், மனைவி மக்களையும் மறந்து—என் பின்னால் ஓடிவரக் காத்திருக்கிறார்கள்! ஆனால் நான், இதோ இன்றிரவு—ஓர் ஓட்டாண்டியை நாடி ஓடவிருக்கிறேன்! என்னைக் கண்டதும் முத்து திகைப்பான்! விழிப்பவனைப் பார்த்து நான், 'சாரதாவின் ஆவிதான்!" என்பேன்! அப்பொழுது அந்தப் பரிதாபத்திற்குரியவனின் உணர்ச்சி என்னவாக இருக்கும்? என் நடிப்புத் திறமையை, நன்றாகப் பிரயோகிப்பேன்!

பிறகு நான் வாய்விட்டுச் சிரிப்பேன்! ஓடிச்சென்று அவனைக் கட்டித் தழுவுவேன்! ஏழாண்டுகளுக்கு முன்பு தகர்ந்த காதல் கீதத்தை—நான் இன்று தொடர்ந்து பாடுவேன்! ஆமாம், இன்று ஒரே ஒரு இரவு மட்டும்—பிறகு, ஒரு கனவு போலஎல்லாவற்றையும் மறந்துவிடும்படி நான் அவனிடம் கூறுவேன்........”

சாரதா பைத்தியக்காரியைப்போல, தனக்குத் தானே சிரித்துக் கொண்டாள். அதை விட ஒரு மகத்தான தியாகத்தை—அவளால் எண்ணிக் கூடப் பார்க்க முடியவில்லை! ஆனால் அது காதலுக்காகச் செய்யப்படும் தியாகம்தானா? இல்லை என்று அவள் மனமே, அவளை இடித்துக் கூறியது!

மலைச்சாரலை அடைந்ததும், வண்டியைத் திருப்பி அனுப்பி விட்டாள். அந்த இருளில் நீந்தியபடி, மெல்ல முத்துவின் குடிசையை நெருங்கினாள்.

மின்மினியின் ஒளிகூடக் குடிசைக்குள்ளே காணப்படவில்லை. சிறிது நேரம் அவள் வெளியே நின்றாள். பின்னர் மெதுவாக அந்தச் சிறு கதவைத் திறந்துகொண்டு, உள்ளே புகுந்தாள். சுட்டுத் தள்ளப்பட்ட புறாவின் சிறகுகளைப்போல, அவளது இதயத்தின் சுவர்கள் படபடத்தன!

உணர்ச்சியின் பிரவாகத்தில் சிக்குண்டு, அந்தக் காரிருளில் அவள் விழித்து நின்றாள்! சிறிது நேரம் கழிந்ததும், கையிலிருந்த தட்டைக் கீழே வைத்து, தகர விளக்கைத் தேடிக் கொளுத்த முயன்றாள். ‘தடார்’ என்ற சப்தத்தோடு சில பொருள்கள் கீழே விழுந்து சிதறின.

அடுத்து அமைதி! அந்த அமைதி, திடீரெனப் பயங்கரமாக வாய்விட்டுச் சிரித்தது! அந்தச் சிரிப்பு, அவளுடைய காதுகளைத் துளைத்துக் கொண்டு ஓடியது! யாரோ தன் இதயத்தைப் பனிக்கட்டியால் உராய்வதைப்போல, அவளுக்குத் தோன்றியது!

தட்டுத் தடுமாறி, எப்படியோ தீப்பெட்டியைத் தேடிப் பிடித்து, அந்த விளக்கை ஏற்றினாள்.

ஏற்றிய விளக்கின் மங்கிய ஒளியில் அவள் கண்ட முதல் பொருள்—பூக்குடலை! அதை எடுத்துத் தோளில் மாட்டிக் கொண்டு குடிசையின் கூரையைப் பார்த்தாள். அவளுடைய செவ்விதழ்கள், ‘பூவோ பூ’ பூவோ பூ!” என்று முணுமுணுத்தது!

கயிற்றுக் கட்டிலில் படுத்திருந்த முத்துவை அவள் பார்த்தாள். அந்த உடலில் அசைவு இல்லை. ஒரு பிணத்தின் புன்சிரிப்பு—அவனது இதழ்களின் இடையே நிலைத்து நின்றிருந்தது!

மெல்ல அவனுடைய கையைப் பிடித்தாள்! பாம்பைத் தீண்டி விட்டவளைப் போல, திடீரென்று அதிர்ச்சியோடு பின் வாங்கினாள்! அந்தக் கை—பனிக்கட்டியைப் போலக் குளிர்ந்து மரத்திருந்தது!

வாழ்க்கையின் நீரோட்டத்தை எதிர்த்துச் செல்ல வேண்டிய அவசியம், இனி அவனுக்கு இல்லை! ஆமாம், கட்டிலிலிருந்தது முத்து அல்ல—இதயத் துடிப்பும் இன்பக் கனவும் நிலைத்துவிட்ட ஒரு சாதாரணப் பிணம்!

அவள் பூமியைத் துளைத்து விடுபவளைப் போலக் கீழே பார்த்தாள். தரையில் சிறைய வெள்ளிக் காசுகள்—காகித நோட்டுகள்—தங்க வைர நகைகள்—அவளை நோக்கி ஏளனச் சிரிப்புச் சிரித்தன! சிதறிக் கிடந்த பத்திரிகைகளிலே பக்கம் பக்கமாகப் புகழ் மாலைகள்—அவளைப் பார்த்துக் கைகொட்டிச் சிரித்தன!

உள்ளூர ஒரு கிளர்ச்சி! எல்லாத் திசைகளிலுமிருந்து மின்னல் கீற்றுகள்! அவளது பெருமூச்சைப் போலவே ஓசை செய்துகொண்டு வந்த தென்றல் காற்று—அந்த விளக்கின் சுடரை விழுங்கி விட்டது!

எங்கோ இருந்து ஆயிரமாயிரம் அம்புகள் ஓடிவந்து அவளது விலாவில் பாய்ந்தன! பல்லிளித்துத் திகிலூட்டும் பயங்கர இருள்!. வேகமாக ஓடும் காரின் சக்கரத்தைப் போல, அவளது நினைவு விர்ரென்று சுற்றிச் சுழன்றது! அந்தச் சுழலிலே—மாளிகைகள் இடிவதைப்போலவும் மயானத்திலே எரியும் பிணங்களின் தீக்கொழுந்து வானத்தை அளாவுவது போலவும் தோன்றின! அந்த மனக் காட்சிகள், ஆழந்தெரியாத கன்னங்கரிய படுபாதாளத்திற்கு அவளை இழுத்துக் கொண்டு சென்றன!

பூக்குடலையைத் தோளில் மாட்டிக் கொண்டு ஓர் உருவம்—அந்தக் குடிசையை விட்டு—திக்குத் திசை தெரியாததொரு சூனிய வெளியிலே ஓடிக் கொண்டிருந்தது! ○

பெரியார் பற்றி அண்ணா

★

கல்லூரி காணாத கிழவர்! காளைப் பருவமுதல் கட்டுக்கடங்காத முரடர்! அரசியல் நோக்கத்துக்கான முறையிலே கட்சி அமைப்பு இருக்கவேண்டுமென்று அறியாத கிளர்ச்சிக்காரரா! பொது மக்கள் மனம் புண்படுமே, புண்பட்ட மக்கள் கோபத்தால் தாறுமாறாகப் பேசுவார்களே. ஏன் வீணாக அவர்களின் ஆத்திரத்தைக் கிளப்ப வேண்டும் என்று யூகமாக நடந்து கொள்ள மறுப்பவர்! யார்யாரைத் தாக்கி விடுகிறாரோ, அவர்களாலேயே தாக்கப்படுவர்!



கவர்னரைக் காணவேண்டுமே, அதற்கேற்ற கோலம் வேண்டாமோ என்ற யோசனை அற்றவர்! தமிழ் ஆங்கில தினசரிகளின் ஆதரவு இல்லாதவர்! ஆரிய மதம், கடவுள் எனும் மூடு மந்திரங்களைச் சாடுவதின் மூலம் கேடுவரும் என்று எச்சரிக்கும் போக்கினரின் இசைக்குக் கட்டுப்பட மறுப்பவர்! தேர்தலா? வேண்டாம்! பதவியா? கூடாது! துரைமார் தயவா? தூ....அது இனிப்புப் பூச்சுள்ள ஈட்டி! சிறைச்சாலை என்ற பேச்சுக் கேட்டால், முகம் மாறுகிறது! கிளர்ச்சி என்ற கருத்து இனிக்கிறது, இந்தக் கிழவருக்கு! ஒரு சர் பட்டம் பெற்றாரா? ஜினிவா போனாரா, சர்க்கார் செலவில்? அமெரிக்கா போனாரா, அரசாங்கத்தின் செலவில்? பல முறை சிறைக்கோட்டம் போய் வந்தார்! இவர்தான இராமசாமிப் பெரியார்?

எங்கள் பொங்கல் வாழ்த்துக்கள்!

★

செய்தித்தாள் மற்றும் பலதரப்பட்ட காகிதங்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து சப்ளை செய்கிறோம்!

★

தி சௌத் இந்தியா பேப்பர்

இம்போர்டிங் கம்பெனி

சென்னை-28

உரிமையும் உறவும்

அமைச்சர். என்.வி.நடராசன்

மக்கள் இயக்கமாக விளங்கும் தி.மு கழகம், ஆட்சிப் பொறுப்பேற்று 3 வது ஆண்டு முடியப் போகிறது!

இந்த மூன்று ஆண்டு காலத்தில் கழக ஆட்சி மேற்கொண்டுள்ள சாதனைகளை— நிறைவேற்றியுள்ள திட்டங்களை ஒரு நிலையில் நின்று சிந்தித்துப் பார்க்கும் எவரும் போற்றத்தான் செய்வர்!

கட்சி மாச்சரியங்களை ஒரு புறம் ஒதுக்கி வைத்து விட்டு, ஜனநாயக உணர்வோடு சிந்திப்பவர்கள கழக ஆட்சி இந்த மூன்று ஆண்டு காலத்தில் செய்துள்ள சாதனைகளைப் பாராட்டத்தான் செய்வார்கள்!

அறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராக இருந்த போதும், அவரைத் தொடர்ந்து ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள கலைஞர் அவர்களும், தமிழகத்தின் முன்னேற்றத்துக்கு பலப்பல திட்டங்களை தீட்டித் தந்துள்ளனர்.

1. பொதுத் தேர்தலில் நாம் வாக்குறுதி அளித்தபடி விலைவாசி உயர்வை கட்டுப்படுத்தும் திட்டம் நமது அண்ணா அவர்களால் தொடங்கப்பட்டு, இன்றளவும் அது தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது.
2. அத்தியாவசியப் பொருள்கள் மக்களுக்கு தாராளமாகக் கிடைக்கக் கூடிய நிலைமை.
3. சென்ற ஆண்டு தமிழகத்தில் கடுமையான வறட்சி நிலை ஏற்பட்ட போது தமிழக அரசு அதனை மிகவும் திறமையுடன் சமாளித்தது மட்டுமின்றி, 17 கோடி ரூபாய் அளவுக்கு வறட்சி நிவாரணப் பணியின் மூலம் தமிழகத்தை எதிர்நோக்கி நின்ற நெருக்கடியை விரட்டியது.
4. கல்வித்துறையில் ஆண்டுக்கு ஆண்டு அதிகப்பணம் ஒதுக்குவதுடன் புகுமுக வகுப்பு வரை இலவசக் கல்வியை அமுல் நடத்தி வருகிறது.
5. அதுமட்டுமல்ல கழகம் ஓர் எதிர் கட்சியாக இருக்கும் போது கூறி வந்ததைப் போன்று, புஞ்சை நிலங்களுக்கு நிலவரியை ரத்து செய்தது.
6. இதுவரை தி. மு. கழக அமைச்சரவை தயாரித்த வரவு-செலவுத் திட்டத்தில் புதிய வரிகள் எதுவும் இல்லாமல்—மக்களின் வரிச்சுமையை கணிசமான அளவு குறைத்துள்ளது.
7. அகில இந்தியாவில் இது வரை எந்த சர்க்காரும் செய்யாத முறையில், தமிழகத்தில் உள்ள பிற்படுத்தப்பட்டுள்ள மக்களின் நலன்களை கவனிக்க ஒரு தனி இலாகாவை ஏற்படுத்தியிருக்கிறது —கழக ஆட்சி.
8. ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் பஸ் கட்டணங்களை குறைத்துக் காட்டியது.
9. தமிழகத்தில் ஏராளமான தொழிற்சாலைத் திட்டங்கள் —தனியாருடன் கூட்டுத் தொழிற்சாலைத் திட்டங்கள் போன்றவற்றை உருவாக்கி செயல்படுத்தி வருகிறது தமிழக அரசு!
10. கல்லக்குடி பெயர் அமைப்பு அறப்போரில் மாபெரும் வெற்றி.

இது மட்டுமல்லாமல், அரசியல் துறையில் இந்தி ஆதிக்கத்தை அறவே ஒழித்தது—"தமிழ் நாடு"; என்று பெயர் சூட்டியது—ஆகாசவாணியை வானொலியாக மாற்றியது —தமிழ் மொழிக்கு ஏற்றம் அளித்தது—சுயமரியாதைத் திருமணங்களை சட்டபூர்வமாக்கியது—கலப்புத் திருமணங்களை ஊக்குவிப்பது போன்று பல அரிய செயல்களை தமிழக அரசு செய்து இருக்கிறது!

இன்னும் எவ்வளவோ சாதனைகள் இருப்பினும், முக்கியமான சில வற்றையே நாம் இங்கே எடுத்துக் காட்டியுள்ளோம்!

இவ்வளவு சாதனைகளையும் நாம் மாநில அரசு என்ற அளவில் வரையறுக்கப்பட்டுள்ள உரிமைகளையும் —வசதிகளையும் வைத்தே சாதித்துள்ளோம்.

இன்னும் மாநில அரசுக்கு அதிக அதிகாரமும் வசதியும் இருந்தால் ஏராளமான திட்டங்களை நிறைவேற்ற இயலும்!

மாநில அரசுக்கு நியாயமாக என்னென்ன உரிமைகள் இருக்க வேண்டும் என்பதை நிர்ணயம் செய்து பரிந்துரை வழங்க நமது தமிழக அரசு ஒரு நிபுணர் குழுவை நியமித்துள்ளது.

நமது தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் சொல்வதைப்போல் மத்திய சர்க்காருக்கும்—மாநில சர்க்காருக்கும் நல்லதோர் உறவு இருக்க வேண்டும்.

"உறவுக்குக் கை கொடுப்போம்
உரிமைக்கும் குரல்
கொடுப்போம்"

என்று கலைஞர் அவர்கள் சொல்வதைப் போல மாநில அரசுக்கு இன்னும் அதிக உரிமைகள் வழங்கப்பட வேண்டும்.

தி. மு. கழகம் கடந்த பல ஆண்டு காலமாக இதையே தான் வற்புறுத்தி வருகிறது!

அறிஞர் அண்ணா அவர்களும் டெல்லி மாநிலங்கள் அவையில் இதையேதான் வற்புறுத்தி வருகிறது!

அறிஞர் அண்ணா அவர்களும் டெல்லி மாநிலங்கள் அவையில் இதையேதான் பலமுறை எடுத்துக் காட்டி இருக்கிறார்.

மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையே நல்ல உறவு இருந்தால் தான் ஜனநாயகம் தழைக்கும்!

—நாட்டுணர்வு செழிக்கும்—சமதர்மம் கொழிக்கும்;

இதையே தான மாநிலங்கள் அவையில் அறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துக் காட்டினர்.

'நமது நாட்டில் மூன்று உயர்ந்த தத்துவங்கள் பேசப்படுகின்றன. ஜனநாயகம்—சமதர்மம்—தேசீயம். இதில் ஜனநாயகம் தடுமாறுகிறது—சமதர்மம் இளைத்து வருகிறது—தேசீயம் திரித்துரைக்கப்படுகிறது" என அண்ணா அவர்கள் மாநிலங்கள் அவையில் முழங்கினர்.

அண்ணா அவர்கள் சுட்டிக்காட்டிய நிலைமை மாற வேண்டுமானால், மாநிலங்கள் இன்னும் அதிக அதிகாரத்தைப் பெறுதல் வேண்டும். மத்திய சர்க்காருக்கும் மாநில சர்க்காருக்கும் சுமுகமான நல்லுறவு ஏற்பட வேண்டும்.

கலைஞர் கருணாநிதி அவர்கள் தலைமையில் இயங்கும் தமிழக அரசு இப்போது அண்ணாவின் அடிச்சுவட்டிலேயே சென்று, மத்திய சர்க்காருடன் தனமான மிக்க நல்லுறவை கொண்டிருக்கிறது.

இத்தகைய நல்லுறவு இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் பரவி, உரிமைகள் பகிர்ந்தளிக்கப்பட்டு, உறவுகள் பலப்படுத்தப்பட வேண்டும்.

அப்போதுதான் அறிஞர் அண்ணா அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போன்று தடுமாறும் ஜனநாயகம் நிலை பெறும்—இளைத்து வரும் சமதர்மம் வளர்ச்சி பெறும்—திரித்துரைக்கப்படும் தேசீயம் தெளிவாக்கப்படும்— இத்தகைய நல்ல மாற்றங்களை நாம் ஏற்படுத்த இந்த பொங்கல் திருநாளில் உறுதி கொள்வோமாக! ○

எங்கள் பொங்கல் வாழ்த்துக்கள்!

காஞ்சீபுரம் பெனரஸ் பட்டுச் சேலைகள்,
பின்னி, காலிகோ மில் துணிகள்,
டெர்லின், டெரிகாட்டன் வண்ணத்
துணிகள் - அனைத்தும் எங்களிடம்
கிடைக்கும்.

எஸ் என். பாலகிருஷ்ணன்
எஸ். என். லோகநாதன்
உரிமையாளர்கள்
போன் நெ. : 449

ரவி சில்க் அவுஸ்

கடைத் தெரு, செங்கற்பட்டு.

மூட நம்பிக்கைகள்!

கி வீரமணி, எம். ஏ., பி. எல்.,

உலகில் ஒவ்வொரு சமுதாயத்திலும் மூட நம்பிக்கைகள் வெவ்வேறு கால கட்டத்தில் நிலவியது உண்டு, என்ற போதிலுங்கூட, நம் நாட்டில் பற்பல துறைகளில் இன்னும் இந்த இருபதாம் நூற்றுண்டிலும் மனிதன் நிலவில் காலடி யெடுத்து வைத்து, நிலவுப் பாறைகளையும் கற்களையும் அள்ளிக்கொண்டு வரும் இந்த நாளிலும்—குருட்டு நம்பிக்கைகள் கோலோச்சுகின்றன.

பகுத்தறிவு அற்ற வகையில் வெறும் நம்பிக்கைகளுக்கு இங்கு அடிமையாகி, மக்கள் ஆமைகளாய், ஊமைகளாய் இருக்கின்றனர்.

சோதிடக்கிறுக்கு நாள் நட்சத்திரம் நல்ல வேளை, ராகுகாலம், எமகண்டம் ஆருடம், குறி கேட்டல் இவை போன்ற நம்பிக்கைகளுக்கு அடிமையாகாத சுதந்தர சிந்தனையுள்ள மக்களைக் காண்பது இங்கு குதிரைக் கொம்பாகவே இருக்கிறது!

பாமர மக்களுக்குத்தான் இத்தகைய நம்பிக்கைகள் என்பதில்லை, படித்த மக்களுள் பெரும் பதவியாளர்கள்—இதற்கு விதிவிலக்கல்ல என்பது போலத்தான் நம் நாட்டில் நடந்து வருகின்றனர்.

மக்களுக்கு அறிவு கொளுத்தும் பகுத்தறிவு இயக்கமாக இங்கு திராவிடர் கழகம். திராவிட முன்னேற்றக் கழகம் இவைதாம் இருக்கின்றன. திராவிட முன்னேற்றக் கழகம் அசல் பகுத்தறிவுவாதிகளைக் கொண்டது எனினும் அரசியலில் ஈடுபட்டுள்ள காரணத்தால் இம்மூட நம்பிக்கைகளுக்கு எதிராக ஆணித்தரமான குரல்கொடுக்க இயலாத நிலை

நம் நாட்டில் வெளியாகும் தமிழ் நாளேடுகள் மக்களிடையே மண்டிக்கிடக்கும் சோதிட மூடத்தனத்தைப் பயன்படுத்தி, பொருளீட்ட முனையாத ஏடுகள் விரல்விட்டு எண்ணத்தக்க சில ஏடுகளேயாகும்!

இந்த வாரப் பலன், இன்று ராசி பலன், பிறந்த தேதி பலன்—என்பதை வெளியிட்டு மக்கள் மூடத்தனத்தில திளைக்கும் சூழ்நிலையை அவைகள் உண்டாக்கி வருகின்றன.

சோதிடம் விஞ்ஞான ரீதியிலானதாக இருந்தால், விஞ்ஞானத் துறையில் அதியற்புதங்கள் புரியும், அமெரிக்கா சோவியத் ரஷ்யா, மற்றும் மேலை நாட்டவர்கள் அதனைப் பயன்படுத்தி, ஆராய்ச்சி செய்து உலக மக்களுக்குப் பயன் படுத்திக்கொள்ளச் செய்யாமலிருப்பார்களா?

ஒரு லக்னம், ஒரு நட்சத்திரப் என்று பலன் வெளியிடும் சோதிடக்குறிப்பை ஒரே நாளில் ஒரு நட்சத்திரத்திற்குக் கணக்கிட்டு, மூன்று வெவ்வேருன நாளிதழ்கள் வெளியிடும் சோதிடக் குறிப்புகளை ஒருவர் ஒப்பிட்டுப் பார்த்தாலே இது அசல் புரட்டு ஏமாந்த காலத்தில் ஏற்றங் கொண்டோர் புவி வேடம் போட்டு ஆடும் வித்தை என்பது எவருக்கும் புரியவிருக்கும்.

இரு ஆண்களின் ஜாதகத்தைப் பெயர் மாற்றி, பெண்—ஆண் ஆக்கிப் பொருத்தம் பார்க்கச் சொன்னல் இது ஆண் ஜாதகம். இது பெண் ஜாதகம் என்று கண்டறியும் ஆற்றல் எந்த ஜோதிடருக்காவது உண்டா?

ஆறறிவு படைத்த மனிதன் பிறந்த நேரக் குறிப்பையும், ஐந்தறிவு கொண்ட மிருகம் ஒன்று பிறந்த நேரக் குறிப்பையும் கொண்ட ஜாதகங்களைக் கொடுத்து "பொருத்தம் பார்க்க"ச் சொன்னல், இதனைக் கண்டு பிடிக்கும் திறன் கொண்ட சோதிடர் நாட்டில் உண்டா?

பிரபல விஞ்ஞானி சார்லஸ் டார்வினிடம் பயின்ற மாணவர் ஒருவர். அவரது குருவின் அறிவைச் சோதிக்க முயற்சி செய்து, ஒரு பட்டாம்பூச்சியையும் இன்னொரு பூச்சியையும் பிடித்து, பாதி பாதியாக இரண்டையும் இணைத்து, "ஏதோ ஒரு புது பூச்சி கிடைத்திருக்கிறது பார்த்தீர்களா?" என்று டார்வினிடம் காட்டினார்களாம்! மாணவரின் குறும்பைப் புரிந்துகொண்ட டார்வின் "ஆம்; அது ஒரு வகையான புதுவகைப் பூச்சிதான். அதன் பெயர்கூட எனக்குத்தெரியும். "ஹம்பக்" (Humbug) என்று அதற்குப் பெயர் என்று பளிச்சென்று பதில் கூறிஞராம்!

அதுபோல இதனைக் கண்டு சொல்லும் ஆற்றல் எந்தச் சோதிடருக்காவது உண்டா?

இந்த சோதிடக் கிறுக்கு எவ்வளவு ஆழமாக நம் நாட்டில் ஊன்றியிருக்கிறது. என்பதற்கு அடையாளம்—பிரதமர் தேர்தலுக்கு ஓட்டை நம்புவதைவிட, சோதிடத்தை நம்பியவர்கள் இன்னமும் டில்லி அரசியலில் இருக்கின்றுர்கள்.

'இந்தியா—கர்சனிலிருந்து நேரு வரை (India–From Curzon to Nehru) என்ற 'இந்துஸ்தான் டைம்ஸ்' பத்திரிகையில் தலைமையாசிரியராக இருந்து ஓய்வு பெற்ற திரு. துர்க்கா தாஸ் என்பவரால் எழுதி, அண்மையில் லண்டனிலிருந்து வெளியாகியுள்ள ஒரு நூலில் பகுத்தறிவாதியான நேருவையே, அவருடைய மந்திரி சபை சகாக்களான திரு குல்சாரிலால் நந்தா, சத்திய நாராயண் சின்கா போன்றவர்கள் சோதிடத்தைக் காட்டி மிரட்டிப் பூஜை செய்ய வைத்தனர் என்ற திடுக்கிடும் தகவலை வெளியிட்டுள்ளார்!

பிரதமர் தேர்தல் என்ருல் நாட்டின் மூலை முடுக்கில் உள்ள சோதிடர்கள் அனைவரும் விமானத்தில் பறந்தல்லவா டெல்லி செல்லும் நிலைமை இருக்கிறது!

இந்த சோதிடக்கிறுக்கு ஒழிய வேண்டாமா? பெரும் பதவிக்குச் செல்பவர்கள், ஐகோர்ட் ஜட்ஜாக இருப்பவர்கூட சுப்ரீம் கோர்ட் ஜட்ஜாக ஆகவேண்டுமானுல்கூட, தனது தகுதி அறிவு, அனுபவத்தை நம்புவதைவிட. சோதிடர்களை நம்பும் அவலநிலை அல்லவா நாட்டில் இன்று பெருகியிருக்கிறது?

எதற்கெடுத்தாலும் நல்ல நேரம், ராகுகாலம். எமகண்டம் பார்க்கும் பழக்கம்—மூட நம்பிக்கையும் நமது மக்களில் பெரும்பாலோரை அட்டை போல் பிடித்து, அவர்களது அறிவை அறவே உறிஞ்சிவிட்ட நிலைதானே இன்று காணப்படுகிறது!

சாதாரண பாமரக் குப்பனும் சுப்பனும் இதனுல் பாதிக்கப்படுவதைவிட படித்த பெரும் பதவியினர், தலைவர்கள் என்பவர்கள் நிலை மிகவும் இரங்கத்தக்கதாக அல்லவா இருக்கிறது?

"சிண்டிகேட்" காங்கிரஸ் தலைவர்கள். சென்ற மாதத்தில் டில்லியில் துவங்கவிருந்த காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் ஒரு மணி நேரத்திற்கு மேல் தாமதித்துத் தொடங்கியதற்குக் காரணம் இடையில் "ராகுகாலம்" குறுக்கிட்டதுதானே!

முதன் முறையாக சந்திரனில் மனிதன் இறங்கிய முயற்சியில் வெற்றி பெற்றபோது, மூவர் சென்றனர்; இடது காலை எடுத்துவைத்தனர். இந்திய நேரப்படி "கொழுத்த ராகு காலத்தில் இறங்கினர். அவர்கள் திரும்பாமல் மாண்டு மடிந்தா விட்டனர்?

கோழைத்தனத்தையும், மூடத்தனத்தையும் வளர்ப்பதற்கல்லாமல் வேறு எதற்கு இத்தகைய நம்பிக்கைகள் பயன்படுகின்றன?

13 என்ற எண் தனக்கு ஒத்து வராததால்தான் 'கத்திக்குத்து' விழுந்தது என்று கருதும் பெரும் பதவியாளர்கள் மலிந்துள்ளதாக நம் நாடு இருக்கையில் இதை ஞானபூமி என்று அழைப்பதைவிட "அஞ்ஞான பூமி" என்று அழைப்பதுதானே பொருத்தம்?

அதனுல்தான் பசுமாட்டை வைத்து இங்கே சிலரால் அரசியல் நடத்த முடிகிறது! நூற்றுக்கணக்கான உயிர்களைப் பலிவாங்கும் வகுப்புக் கலவரங்களையும், வன்முறைகளையும் வளர்க்க முடிக்கிறதென்ருல், அதற்கு மூலகாரணம் இந்த மூட நம்பிக்கைகளுக்கு மக்கள் ஆட்பட்டு இருக்கும் நிலைதானே!

இம்மாதிரி மூடத்தனத்தை எதிர்த்துப் பிரசாரம் செய்ய இந்தியத் துணைக் கண்டத்திலே முழுமூச்சாகவுள்ள ஒரு பகுத்தறிவாதிகள் பாசறை "திராவிடர் இயக்கம்" என்ற பெயரால் அழைக்கப்படும் திராவிடர் கழகமும். திராவிட முன்னேற்றக் கழகமும்தானே!

"அறிவை அற்றங்காக்கும் கருவி" யாக மக்கள் பயன்படுத்த வேண்டும் என்று எடுத்துச் சொல்லி, இம்மூட நம்பிக்கைச் சேற்றில் மக்கள் மூழ்காமல் தடுத்து நிறுத்தாதவரை, நம நாட்டில் விடுதலையும் கெடுதலையும் ஒன்றேயாகும்.

பிறவிப் போர்வீரராம் தந்தை பெரியாரின் முயற்சியால் இது வெகுவாக குறைந்தாலும்கூட, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழா பேருரையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் தெரிவித்தது போல். இளைஞர்கள் பகுத்தறிவுச் சுடர் ஏந்தி நாட்டின் நாலா பக்கங்களிலும் செல்லும் புதிய போர் வீரர்களாக மாற வேண்டும்! புது சமுதாயம், மூட நம்பிக்கைகள் ஒழிந்த முன்மாதிரி சமுதாயம் முகிழ்க்க அதுதான் ஒரே வழி! ○

பஹோலாவின்
Dr. மூர்த்தியின்
கோல்ட்ராப்ஸ்

ஆஸ்த்மா கொடுமைக்கு உடனடி நிவாரணம்

கோல்ட்ராப்ஸ்...சக்தி வாய்ந்ததோர் ஹோமியோபதி மருந்து. உக்கிரத்தை மட்டும் தணிக்கும் மருந்தல்ல இது. நோயினை வேரோடு அழிக்கும் ஓர் அற்புத தயாரிப்பு. நரம்பு, சுவாசக் குழாய் அல்லது வேறு எந்த காரணமாயிருப்பினும் கோல்ட்ராப்ஸ் உங்களுக்கு உடனடி சேவை புரிகிறது.

அமெரிக்க நாட்டின் ஹோமியோபதி சிகிதாசாரப்படி தயாரிக்கும் கோல்ட்ராப்ஸ் இலாகிரி வஸ்து கலக்காதது.

மூச்சிழுப்பிற்கும், கெட்டியினை எளிதாக்குவதற்கும் கோல்ட்ராப்ஸ் மருந்திற்கிணையானது வேறெதுவுமில்லை.

BAHOLA TRADE MARK

பஹோலா பார்மஸுடிகல்ஸ் கம்பெனி
கும்பகோணம், தமிழ்நாடு.

Criterion BP 2293A

எங்களது பொங்கல் வாழ்த்துக்கள் !

உறுதியுள்ள, நிலையான, உழைக்கக் கூடிய
கட்டிடங்கள் கட்ட

★

சங்கர்

★ ★

சிமெண்ட்

★

தி இந்தியா சிமெண்ட்ஸ் லிட்,

மதராஸ்-2.

பாக்டரிகள் : சங்கர் நகர் அண்டு சங்கரி.

அறிவும் ஆணவமும்

தங்கவயல். லோகிதாசன்

விஜயநகரம் — பல வீரர்களையும் வெற்றிகளையும் கண்ட நகரம்'

தமிழகத்தின் மேல் தொங்கிக் கொண்டிருக்கின்ற இதனை-தொங்கு மீசை கொண்டோன் அரசாண்டு வந்தான். அவனே கிருஷ்ணதேவ ராயனென்பான்.

ஆந்திர அரசர்களுள் அவனே அரிமா நோக்குடையவன். திரண்டு உருண்டிருந்த அவன் உடற்கட்டு அதற்குப் பெருந்துணை புரிந்து வந்தது.

அவன் கலை பல கற்ற சித்திர வித்தகன். 'ஆமுக்த மால்யதா' என்னும் கிரந்தத்தை இயற்றியதோடு 'பாலபாரதம்' என்னும் கிரந்தத்திற்கு உரையும் கூறியுள்ளான்.

அறிவின் பெருமையை உணர்ந்தவனுகையால் அரும்பெரும் புலவர்களை பெரிதும் ஆதரித்துப் பெருமை கொண்டான்.

அவர்களில் இவன் அவையை அலங்கரித்தோர் அல்லசானி பெத்தன்னு நந்திதிம்மன்னு — தெனுலி ராமன் என்போர் முக்கியமானவராகும்.

ராயனுக்குச் சொக்கட்டான் ஆடுவதென்பது ஒரு சொகுசான பொழுது போக்கு.

தன்னுடன் ஆடுவதற்காகவே அந்த ஆட்டத்தில் சமர்த்தனுன 'பொட்டுச் சேர்லதிம்மா' என்பவனை தன் பக்கத்திலேயே எப்போதும் வைத்துக் கொண்டிருந்தான்.

இதனுல் வீரத்தை விட்டுவிடவில்லை கிருஷ்ணதேவராயன். களம் பல கண்டான் — கடும் புயலாக மாறினுன் — வெற்றிப்படிகள் ஒவ்வொன்றின் மீதும் கால் வைத்து ஏறிக்கொண்டேயிருந்தான்.

தென்பாங்குப் புலவரிடம் தெவிட்டாத இன்பம் அவனுக்கு. திம்மரசு என்னும் அமைச்சனையே தன் குருவாகக் கொண்டு, அவன் சொல்லை வேதமாக்கிக் கொண்டவன்!

விசயநகர சாம்ராஜ்யத்தை விரிவாக்கி—ராயன் வெற்றிக் கொடி பறக்க விட்டுக்கொண்டிருந்த இந்நாளில்—ஒருநாள் அரச அவையிலே புகுந்தான் வேற்று நாட்டுப் புலவன் வித்தியாசாகரென்பான்!

இவன் கற்றிறந்த புலவனேயாயினும்—மிக்க கருவமிக்கோன்—'அனைவரையும் வெல்லும் ஆற்றல் தனக்கேயுண்டு!' என்று தம்பட்டம் அடித்துத் திரிவோன்—அகங்காரத்தின் மொத்த உரு—ஆணவத்திற்கு உள்ளத்தில் இடமளித்துவிட்ட அப்பாவி!

அலட்சியப் பார்வையோடு அவையில் அடியெடுத்துவைத்த இவனை—அவையோர் ஆச்சரியத்தோடு நோக்கினர் புன்னகை பூத்தபடி!

'யார் நீ? எங்கு வந்தாய்?' என்று வினவினுன் மன்னன்.

'அரசே! வித்தியாசாகரன் என்பது என் பெயர். வாதிடும் வித்தையில் வல்லோன்—சொற்போரில் சமர்த்தன் யான்—கற்ருேரும் மற்ருேரும் என்னிடத்தில் கை கட்டி நிற்பர்—இதுவரை வென்ருரில்லை என்னை—இங்குள்ளோரை வெல்லவே இபபோது வந்துள்ளேன் இங்கு!' என்ருன்.

அவையோர் அனைவரும் சினந்து நோக்கினர் செருக்கு மிக்கோனை!

காவலன் மட்டும் கனிந்த பார்வையைத் தம் புலவர் மீது மோதினுன்!

புலவரில் ஒருவர் எழுந்து நின்று, "அரசே! புலமையில் வெல்ல வந்த புதுக்கவியை நாம் வரவேற்கிருேம்—நாளை காலையில் அவை கூட்டுவோம்—அந்த அவையிலே வெல்ல வந்திருக்கும் விவேகி வாதிட வரலாம்!" என்ருர்.

அவை கலைந்தது — அனைவரும் கலைந்தனர்! ஆனுல் புலவர்கள் கூடினர், வந்திருக்கும் புலவனேடு வாதிடும் புலவனைத்தேர்ந்தெடுப்பதற்காக!

ஆராய்ந்ததில் தெனுலிராமன் வாதிட வல்லவன் என்று தீர்மானித்தனர். அனைவரும் அவனையே ஆமோதித்தனர்!

பொறுப்பேற்றுக் கொண்ட தெனுலி ராமன் முதலில் திகைத்தான்—எனினும், சமாளிப்போம் என்ற தைரியத்தில் அங்கிருந்து சென்ருன்—அனைவரும் சென்றனர்!

மறுநாள் காலை கூடிய அவையில் கொலுவிருக்க வந்தான் கொற்றவன். மற்ற புலவரும் ஒவ்வொருவராக வந்து அவரவர் இருக்கையில் ஆங்காங்கே அமர்ந்தனர்!

வாதிட வந்த வித்தியாசாகரனும் வந்தமர்ந்து விட்டான்—என்ருலும், தெனுலிராமன் தென்படவில்லை எவர் கண்களுக்கும்!

புலவரின் மூச்சுக்கள் பேச்சாயின. அனைவரின் கண்களும் வாயிலை நோக்கின. அப்போதுதான் அவையில் அடியெடுத்து வைத்தான் கையில் ஒரு பட்டுத் துணியால் மூடிய கட்டோடு!

அகமகிழ்ந்த புலவர்கள் அமோக வரவேற்பளித்தனர் தெனுலி ராமனுக்கு!

கையில் பெரும் கட்டோடு நடை போட்டுக்கொண்டிருந்த ராமனை — வித்தியாசாகரன் கண்டான். அவன் உள்ளத்தை அச்சம் கவ்வியது! கையில் கொண்டு வரும் சுவடி எதுவோ என்ற சந்தேகம் அவனைப் பிடித்தாட்டியது.

இருக்கையில் அமர்ந்த தெனுலி ராமனைப் பார்த்து, "புலவீர்! தாங்கள் கையில் கொண்டு வந்திருபபது என்ன சுவடி? என்று கேட்டான் வித்தியாசாகரன்.

உடனே தெனுலிராமன் வித்தியாசாகரனை நோக்கி, "புலவீர்! இதன் பெயர் திலகாட்ட மகிடபந்தனம்! என்பது. இன்று இதைக் கொண்டே தங்களிடம் வாதிடப்போகிறேன் என்ருன்.

திலகாட்ட மகிடபந்தனம் என்ற பெயரைக் கேட்டதும் வித்தியாசாகரன் திடுக்கிட்டான். நாம் இதுவரையில் கற்காத ஒரு புது ஏடாக உள்ளதே, என்கின்ற அச்சத்தால் நிலைகலங்கி அமர்ந்திருந்தான்.

வித்தியாசாகரனின் நிலையை ஒருவாறு உணர்ந்து கொண்ட தெனுலிராமன், "அரசே! இன்று நாம் ஆரம்பிக்கப்போகும் திலகாட்ட மகிட பந்தனம் என்னும் நூலின் விவாதத்திற்கு—வந்திருக்கும் புலவரின் ஆராய்ச்சிக்கு அவகாசம் தருதல் நம் கடமையாகும். எனவே, புதுப் புலவர் இன்றெல்லாம் ஆராய்ந்து—நாளை கூடும் அவையில் வாதிட வருவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்!" என்ருன்.

மன்னனும் ராமனின் சொல்லுக்குச் செவி சாய்க்க—நாளை கூடும் அவையில் விவாதத்தை ஆரம்பிக்கலாம் என்ற முடிவோடு அவை கலைந்தது.

வித்தியாசாகரனுக்கு உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கியது — தெனுலி ராமனை பலமுறை வாழ்த்திக்கொண்டான்—இன்றைய ஆபத்திலிருந்து தப்பித்தோம் என்ற நினைப்பில் அவன் இருப்பிடம் போய்ச் சேர்ந்தான்.

அங்கு அவனுல் சும்மாவிருக்க முடியவில்லை — 'திலகாட்ட மகிட பந்தனம்! என்பது எதைப்பற்றிய நூல்? யார் இயற்றியது? என்றெல்லாம் சிந்தித்துச் சிந்தித்துச் சிந்தனைக்கு வேலை கொடுத்துக் கொண்டிருந்தான். எதுவும் அவன் மூளைக்கு எட்டுவதாகக் காணும். முடிவாக ஒரு முடிவிற்கு வந்தவன் போல் தன்னைச் சமாளித்துக் கொண்டான்!

மறுநாள் அவை கூடிற்று — எல்லோரும் வந்திருந்தனர் — மன்னனும் வந்துவிட்டான் — ஆனுல், வித்தியாசாகரனை மட்டும் காணும்!

அவையில் ஒருவருக்கொருவர் கேலி பேசிக்கொண்டிருந்தனர்.

வித்தியாசாகரனை உடனே அழைத்து வரும்படி கட்டளையிட்டான் மன்னன்.

சென்றவன் திரும்பினுன் வித்தியாசாகரன் இரவே சென்றுவிட்டான் என்ற செய்தியோடு!

இதைக் கேட்ட தெனுலிராமன் சிரிக்க ஆரம்பித்தான்-அனைவருக்கும் ஆச்சரியமாக இருந்தது.

"என்ன காரணம்? ஏன் மறைந்தான் வித்தியாசாகரன்? உன் கையிலிருக்கும் நூல் என்ன நூல்? நான் கூட இதுவரையில் அந்தத் திலகாட்ட மகிட பந்தனத்தைப்பற்றி கேள்விப்படவில்லையே? இங்கே கொடு அந்த நூலைப்பார்க்கலாம்! என்று மன்னன் கேட்க, தெனுலிராமனும் தன்னிடமிருந்த கட்டைக்கொடுத்தான்.

அவையோர் அனைவரும் அதனையே நோக்கினர் — மூடியிருந்த பட்டுத் துணியை மன்னன் பிரித்தான் — எல்லோரும் அந்தக் கட்டுக்குள்ளிருப்பதைக் கண்டு திகைத்தனர். மன்னனே திடுக்கிட்டான்!

"என்ன இது?" என்று கோபத்துடன் கேட்டான் மன்னன்.

"அரசே! ஆத்திரப்படாதீர்கள். இதிலிருப்பது எள்—இதற்குத் திலம் என்றொரு பெயருண்டு! இது விறகு—இதற்கு காட்டம் என்றொரு பெயருண்டு! மகிடம் என்பதற்கு எருமை என்றொரு பெயருண்டு! இது கட்டும் கயிறு—பந்தனம் என்றும் நான் திலகாட்ட மகிடபந்தனம் என்று கூறினேன்!" என்ருன் தெனுலிராமன்.

அவையோர் அனைவரும் சிரித்தனர், மன்னன் ராமனின் மதியைப் போற்றினுன்! ○

மழை!

— ரவி —

மென்மைத் தென்றல் இணையுங்கால்
மோக முத்தம் பிணையுங்காண் !
அன்பு மேகம் பின்னுங்கால்
அணையாக் காதல் மின்னலிடும் !

இடிக்கும் மேக நெருக்கத்தால்
இன்பத் தாகம் பெருகும்பார் !
படியும் தணியா மின்மழையே
பிணைப்பாற் காதற் பண்ணிசைவே !

வறுமை பசியில் இணையுங்கால்
வானில் புயலும் பிணையுங்காண் !
வெறுப்பு மேகம் பின்னுங்கால்
வெறியின் புரட்சி மின்னலிடும் !

ஒன்றுய்ப் பிணைந்த ஒற்றுமையால்
உறுதி மேகம் பெற்றமையால்
நன்று பெய்யும் பெருமழையே
நாசம் செய்வோர் இனிஇல்லையே !

மன்றம் அடுத்த இதழ்

பொங்கல் விடுமுறையையொட்டி 'மன்ற'த்தின் இம்மாத 18-ம் தேதி இதழ் வெளிவராது. அடுத்த இதழ் 25-ம் தேதி வெளி வரும்.

ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் கூலி வகைகள்.

வண்ணான்	நாள் கூலி	8	நாழி	நெல்
தோட்டக்காரன்	,,	6	,,	,,
விறகு வெட்டி.	,,	4	,,	,,
சமையல் செய்யும் அந்தணன்	,,	4	,,	,,
பல்லக்குத் தூக்கி	,,	4	,,	,,
நீர் முதலியன கொண்டு வருவார்				
ஆண் கூலி	,,	8	,,	,,
பெண் கூலி	,,	4	,,	,,
திருப்பதியம் ஓதுவார்	,,	24	,,	,,
பரிசாரகம் செய்யும் அந்தணன்	,,	16	,,	,,
நிலையாய் பணி புரிவான்	,,	24	,,	,,
கோயில் கணக்கர்	,,	54	,,	,,
பள்ளித்தாமம் தொடுப்பார்	,,	10	,,	,,
வேதம், மந்திரம் வல்ல பார்ப்பான்	,,	10	,,	,,
திருவாய்மொழி விண்ணப்பிப்பான்	,,	24	,,	,,
நம்பி (வழிபாடு செய்வான்)	,,	16	,,	,,
தளிச்சேரிப் பெண்டுகள் (தேவரடியார்கள்)	,,	27	,,	,,
கூத்தர்கள்	ஒரு கூத்துக்கு	2	கலம்	நெல்

எங்கள் பொங்கல் வாழ்த்துக்கள் !

டோக்கியோ ஓசாகி எலக்ட்ரிக் கம்பெனி லிமிடெட்
தொழில் நுணுக்கக் கூட்டுறவோடு
சிங்கல் பேஸ், திரி பேஸ் எனர்ஜி மீட்டர்களை உற்பத்தி செய்கிறோம்.

இந்தியா மீட்டர்ஸ் லிமிடெட்

பிளாட் நெ. 14, தொழிற்பேட்டை, அம்பத்தூர், சென்னை-58.

போன் : 60556 தந்தி : 'OSAKINDIA

விநியோகஸ்தர்கள் :

இண்டஸ்ட்ரியல் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்

2/17, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை-34.

போன் : 87392

பார்க்பேர் பொருட்காட்சி!

எஸ். ஐ. ஏ. ஏ. திடல்

மூர்மார்க்கெட் பின்புறம். ★ சென்னை-3.

ஆண்டு தோறும் டிசம்பர், ஜனவரி மாதங்களில் நடைபெறும் "பார்க்பேர் பொருட்காட்சி" இத்த ஆண்டும் இன்னும் சிறப்பாக நடைபெறுகிறது.

தலைநகரத்து மக்களின் அன்றுடம் பேச்சாக இருந்துவரும் பார்க்பேர் கண்காட்சியில்

- ★ தமிழக அரசின் சாதனைகளை விளக்கும் சுமார் 15 அரங்கங்கள்.
- ★ சந்திரமண்டலப் பயணத்தை விளக்கும் அப்பலோ 11 படக்காட்சி.
- ★ 150க்கு மேற்பட்ட தனியார் ஸ்டால்கள்
- ★ அமெரிக்க விண்வெளி வீரர்களின் நிலவுப் பயணத்தை அப்படியே விவரிக்கும் அமெரிக்க 'பெவிலியன்'.
- ★ நாள்தோறும் மாலையில் தமிழகத்தின் தலைசிறந்த விளையாட்டான 'ரேக்ளா ரேஸ்'
- ★ குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும் உல்லாச பொழுதுபோக்குகள்.
- ★ விந்தை விஞ்ஞானி ஜி. டி. நாயுடுவின் பிரமிக்கத்தக்க கண்டுபிடிப்புகள்.
- ★ தொழில் சாதனைகள்.

உங்கள் நேரத்தை பயன்படத்தக்க முறையில் செலவழிக்க தலைநகரத்தின் தலைசிறந்த பொழுதுபோக்கு "பார்க்பேர் கண்காட்சி"

தினசரி மாலை 2 மணி முதல் இரவு 10 மணி வரை

ஞாயிறு-விடுமுறை நாள் 12 மணி முதல் இரவு 10 மணி வரை

நுழைவுக் கட்டணம்: 30 காசு

அமைப்பாளர்
கே. கோவிந்தசாமி

குடும்ப நலத்திட்டம் கூறுவது என்ன?

குழந்தைகளின் எண்ணிக்கையைக் குறைப்பது மட்டுந்தானா!

அரும்பெருந்திட்டம் வழங்கும் அரிய வாய்ப்பு

★

1. தாய்—சேய் நலம் பெற தந்தையர் மனம் நிறைவுற பிள்ளைப் பேற்றில் இடைவெளி வேண்டும்.
2. அறுவை சிகிச்சைக்கு வருவோர்க்கு இலவச உடல் பரிசோதனை!
3. பிள்ளைப் பேற்றுக்கு முன்பும் பின்பும் தாய்மார்களுக்கு தக்க கவனிப்பு
4. பச்சிளஞ் சிறுருக்கு பாதுகாப்பளிக்க தொத்து நோய்த்தடுப்பு வசதிகள்!
5. இப்பணிகளை இனிதே நிறைவேற்ற ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்துக்கும் ஒரு பெண் டாக்டர்!
6. பத்தாயிரம் மக்கள் தொகை கொண்ட கிராமத் தொகுதியில் தாய் சேய் நலத்தை நேரில் கண்காணிக்க ஒரு துணைச் செவிலியர்!

நல்வாய்ப்பு இதனை நழுவவிடலாமா?

வாசெக்டமி

1. குடும்பத்தின் அளவைக் குறைக்க வாசக்டமி பாதுகாப்பான எளிய வழி முறையாகும்.
2. இது நிரந்தரமான தொரு குடும்பக்கட்டுப்பாடு முறை. இரண்டு குழந்தைகளையுடைய தம்பதிகளில் கணவன் வாசக்டமி (அறுவை முறை) செய்துகொள்ளலாம்.
3. இந்த அறுவை முறை ஒரு சில நிமிஷங்களில் செய்யக்கூடிய மிகச் சாதாரணமான ஒன்று.
4. வாசக்டமி செய்துகொண்டவர் மருத்துவ மனையில் தங்கி இருக்க வேண்டியது இல்லை. உடனடியாக வீட்டுக்குப் போய் ஓய்வு எடுக்கலாம்.
5. எல்லா அரசினர் மருத்துவமனைகளிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், அரசு அங்கீகாரம் பெற்ற அறுவை சிகிச்சை நிலையங்களிலும் வாசக்டமி இலவசமாக செய்யப்படும்.

டுபக்டமி

சாதாரணமாக பிரசவத்திற்குப் பின்னர் மூன்றாவது நாள் செய்யப்படுகிறது.

இதைச் செய்துகொள்ளும் பெண் 24 வயது உடையவளாகவும், இரண்டு குழந்தைகளுக்குத் தாயாகவும் இருக்க வேண்டும்.

இந்த முறை உடல் நலத்தைப் பாதிக்காது. அன்றாட வேலைக்குத் தடையாக இராது. இது ஆண்—பெண் உறவுக்குக் குந்தகமாக இராது.

'லூப்' (கருத்தடை) வளையம்

1. லிப்பியின் லூப் கர்ப்பத்தடை செய்யவும் குழந்தைகளுக்கு இடையே போதிய இடைவெளி ஏற்படுத்தவும் பயன்படுகிறது.
2. மணமான பெண்களுக்கு, குடும்பக்கட்டுப்பாட்டுக்கு லூப் பொருத்தலாம்.
3. தேவையான போது இதை நீக்கிவிடலாம். பின்னர் மீண்டும் கருத்தரிக்கலாம். இதனால், இந்த முறையைக் கையாள கணவன் மனைவியின் எழுத்து மூலமான சம்மதம் தேவை இல்லை.
4. மீண்டும் குழந்தை பெற விரும்பினால், டாக்டரிடம் போய் லூப்பை எடுத்துக்கொள்ளலாம். பின்னர், ஒரு மாதத்திற்குள் மீண்டும் கருத்தரிக்கலாம். அதனால் கர்ப்பம் தரிப்பதற்கோ, பிறக்கும் குழந்தைக்கோ எந்தவிதக் கெடுதலும் இல்லை.
5. லூப் செலவில்லாத ஒன்று. இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு தகுதியான பெண்ணுக்கும் இது இலவசமாகக் கிடைக்கும்.

தமிழ்நாடு சுகாதார-குடும்ப நலத்துறை இயக்குநர் அலுவலகம், சென்னை-6

ஆசிரியர், வெளியிடுவோர்: இரா. செழியன் எம். ஏ. எம். பி. 438, பூந்தமல்லி நெடுஞ்சாலை, சென்னை-10.
அச்சிடுவோர்: அமிர்தம் பிரிண்டர்ஸ், சென்னை-5. (தொலைபேசி 61997)